www.gnanam.info www.gnanam.lk

ISSN 2478-0340

செப்டெம்பர் 2017

ஞானம்

கலை இலக்கியச் சஞ்சிகை

விலை: ரூபா 100/=

208

தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் அரசுக்கு ஏன் இந்த அசமந்தம்!

படைப்பாளியும் செயற்பாட்டாளருமான சிட்னி மாகஸ் டயஸ்

ஞானம்
ஒளி:18
சுடர்:04
208

பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம்!

வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும் கவிப்பெருக்கும் மேவுமாயின், பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம் விழிபெற்றுப் பதவிகொள்வர்.

ஆசிரியர் குழு

ஆசிரியர், ஸ்தாபகர் : தி. ஞானசேகரன்

இணை ஆசிரியர் : ஞானம் ஞானசேகரன்

நிர்வாக ஆசிரியர் : ஞா. பாலச்சந்திரன்

தொடர்புகளுக்கு

தொ.பேசி. ☞ 0094-11-2586013
0094-77-7306506

தொ.நகல் ☞ 0094-11-2362862

இணையம் ☞ www.gnanam.info
www.gnanam.lk

தளம்.ஞானம்.இலங்கை

மின்னஞ்சல் ☞ editor@gnanam.info
editor@gnanam.lk

அஞ்சல் ☞ 3B-46th Lane, Colombo-6, Sri Lanka

வங்கி விபரம் ☞ T. Gnanasekaran
Acc. No. - 009010344631
Hatton National Bank,
Wellawatha Branch.
Swift Code : HBLILKLX
(மணியோடர்மூலம் சந்தா அனுப்பு பவர்கள் வெள்ளவத்தை தபாற் கந்தோரில் மாற்றக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்)

சந்தா விபரம் ☞ Sri Lanka

ஒரு வருடம் :ரூ 1,000/=
ஆறு வருடம் :ரூ 5,000/=
ஆயுள் சந்தா :ரூ 20,000/=

	ஒரு வருடம்
Australia (AU$)	50
Europe (€)	40
India (Indian Rs.)	1250
Malaysia (RM)	100
Canada ($)	50
UK (£)	40
Singapore (Sin. $)	50
Other (US $)	50

⊙ஞானம் சஞ்சிகையில் பிரசுரமாகும் படைப்புகளின் கருத்துகளுக்கு அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்பானவர்கள்.
⊙புனைபெயரில் எழுதுபவர்கள் தமது சொந்தப் பெயர், தொலைபேசி எண், முகவரி, ஆகியவற்றை வேறாக இணைத்தல்வேண்டும்.
⊙பிரசுரத்திற்குத் தேர்வாகும் படைப்புகளைச் செவ்வைப்படுத்த ஆசிரியருக்கு உரிமையுண்டு.
⊙படைப்புகள் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு மின்னஞ்சலில் அனுப்பப்படவேண்டும்.

இதழ்களுள்ளே.....

⊙ **நேர்காணல்**
வ.ந.கிரிதரன் / கே.எஸ்.சுதாகர் 06

⊙ **கவிதைகள்**
செ.அன்புராசா 05
சோ.ப (மொழிபெயர்ப்புக் கவிதை) 16
அ.அஜந்தன் 20
ஜின்னாஹ் ஷரிபுத்தீன் 28
பொலிகை ஜெயா 34
புலோலியூர் வேல்நந்தன் 42

⊙ **சிறுகதைகள்**
உ.நிசார் 17
தி.கேதீஸ்வரன் 27
முஸ்டீன் (குறுங்கதை) 33
உஷா ஜவாகர் 39
இ.ஜீவகாருண்யன் (குட்டிக்கதை) 42

⊙ **கட்டுரைகள்**
திக்குவல்லை கமால் 03
வாணமதி 14
க.சண்முகலிங்கம் 23
கார்த்திகா கணேசர் 29
புலேந்திரன் நேசன் 35
கோத்திரன் 43

⊙ **பத்தி எழுத்து**
மானா மக்கீன் 47
துரை மனோகரன் 48

⊙ **சமகால இலக்கிய நிகழ்வுகள்**
கலாபூஷணம் கே. பொன்னுத்துரை 51

⊙ **இலக்கியன் பதில்கள்** 53

⊙ **வாசகர் பேசுகிறார்** 56

அசிரியர் பக்கம்

தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் அரசுக்கு ஏன் இந்த அசமந்தம்!

தமது நாட்டில், தமது உரிமைக்காகப் போராடியவர்கள் அல்லது அப்போராட்டத்திற்கு ஏதோ ஒரு வகையில் உதவியவர்கள் அல்லது அத்தகைய செயற்பாடுகளில் ஈடுபட்டவர்களெனச் சந்தேகத்தின்பேரில் பிடிபட்டவர்கள் குற்றவாளிகளாகக் கருதப்பட்டு இலங்கை அரசினால் சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டவர்கள்தான் இந்த அரசியல் கைதிகள். வழக்கு தொடரப்படாமலே இவர்களில் பலர் நீண்டகாலம் சிறைகளில் வாடுகிறார்கள்.

கொழும்பு, மகசீன், அநுராதபுரம், தும்பறை, நீர்கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் உள்ள சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்ட தமிழ்க்கைதிகள் இவர்கள். பயங்கரவாதச் சட்டத்துக்குள் சிக்குண்டு தமது வாழ்க்கையைச் சிறைக்குள் தொலைத்துக் கொண்டிருக்கும் இவர்கள், தமது உறவுகளைப் பிரிந்து, ஆசைகளைத் துறந்து, உடமைகளை இழந்து, அடிமைகளாக வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். இவர்களில் சிலர் 10 வருடங்களுக்கும் மேலாகச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்கள்.

அரசியல் கைதிகளின் விடுதலைக்கான கோரிக்கைகளும் போராட்டங்களும் பலகாலமாக நடைபெற்று வருகின்றன. சிறைக்குள் உள்ளிருந்து பல அரசியல்கைதிகள், காலத்துக்குக் காலம் உண்ணாவிரதப் போராட்டங்களில் ஈடுபட்டுவருகிறார்கள். சில சமூக நிறுவனங்கள், அரசியல்கட்சிகள் இவர்களை விடுவிக்குமாறு போராடி வருகின்றன. ஐக்கிய நாடுகள் சபையும் சர்வதேச அமைப்புகளும்கூட இவர்களது விடுதலை குறித்து அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றன. எனினும் இவர்களுக்கு நியாயம் கிடைக்கவில்லை.

தமிழர்தம் ஆயுதப்போராட்டத்தை நசுக்கவும், தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டத்தை இல்லாதொழிப்பதற் காகவுமே பயங்கரவாதச் சட்டம் 1979 இல், முன்னாள் ஜனாதிபதி ராஜபக்ஷாவின் காலத்தில் கொண்டுவரப்பட்டது.

எனவே, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ காலத்தில், தமக்கான அரசியல் தீர்வையோ மனிதாபிமானப் பிரச்சினைகளுக்கான தீர்வையோ காணமுடியாது என்ற நிலையிலேதான் மகிந்தா அரசைத் தோற்கடித்து 2015இல் புதிய அரசை ஏற்படுத்துவதில் தமிழர்கள் முனைப்புடன் செயற்பட்டனர்.

தமிழர்கள் ஆட்சி மாற்றத்திற்கு ஒத்துழைத்தமைக்கு இனப்பிரச்சினைக்கான தீர்வு மற்றும் அதனோடு இணைந்த மனிதாபிமானப் பிரச்சினைக்குமான தீர்வுகளை புதிய அரசாங்கத்திடம் எதிர்பார்த்தமையே ஆகும். இவற்றுள் ஒன்று தமது உறுவுகளான அரசியல்கைதிகளின் விடுதலையுமாகும்.

நல்லாட்சி அரசாங்கம் பதவிக்கு வரும்போது 200 அரசியல் கைதிகள் சிறைச்லைகளில் அடைத்து வைக்கப் பட்டிருந்தார்கள். பலதரப்பட்ட அழுத்தங்கள் காரணமாக இவர்களில் அரைவாசிப்பேர் இதுவரை பிணையில் விடுவிக்கப் பட்டிருக்கிறார்கள்.

ஆனால் இன்று கண்ணீருடனும் கவலையுடனும் வெளியுலகத்தைக் காணத்துடிக்கும் இவ்வுயிர்களின் சராசரியான கோரிக்கைகளை நிறைவேற்றக்கூட இந்த நல்லாட்சி அரசாங்கம் தயாராக இல்லை. அரசியல் கைதிகளை நல்லாட்சி அரசாங்கம் விடுவிக்காமைக்குக் காரணம் நாட்டில் தற்போது நிலவுகின்ற சூழ்நிலைதான்.

தேர்தலில் தோற்றுப்போன மகிந்த ஆதரவாளர்கள் தற்போதைய அரசின் வீழ்ச்சியை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள். அவர்கள் அரசியல் கைதிகளின் விடுதலையை புலிகளின் விடுதலையாகவே பிரசாரம் செய்வார்கள். அரசாங்கத்தின்மீது குற்றம் சாட்டி விடுதலைப்புலிகள் மீளெழுச்சி பெறுவதற்கு வழிசமைத்துவிட்டதாக மக்களிடையே பிரசாரம் செய்வார்கள்.

இலங்கை அரசியலில் ஆட்சியைக்கைப்பற்றவேண்டுமானால் இனவாதம்பேசவேண்டும் என்பது வரலாறாகிவிட்டது. இதன்காரணமாகவே எதிரணியினரின் இனவாதத்தூண்டலுக்கு இடம்கொடுக்காத வகையில் மிகக் கவனமாகச் செயற்படவேண்டிய நிலையில் அரசாங்கம் உள்ளது. இனவாதம் இனப்படுகொலைகளுக்கும் வழிவகுத்துவிடும்.

2009 ஆம் ஆண்டு நடைபெற்ற இறுதியுத்தத்தில் இடம்பெற்ற யுத்தக்குற்றங்கள் தொடர்பில் தமிழ் மக்கள் எதிர்பார்த்த சர்வதேசவிசாரணை என்ற அம்சத்தை, உள்ளக விசாரணையாக மாற்ற வேண்டிய சூழ்நிலையும் அரசாங்கத்துக்கு ஏற்பட்டது இதனாலேதான்.

தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காணும் விடயத்தில், கழைக்கூத்தாடி ஒருவன் கயிற்றிலே நடக்கும் நிதானத்துடன் அரசாங்கம் செயற்படவேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கிறது.

இத்தகைய அரசியல் சூழ்நிலையில் தொடர்ந்தும் நீதிக்காகவும் உரிமைக்காகவும் போராடி தமது கோரிக்கைகளை உயிர்ப்புடன் வைத்திருப்பதைத்தவிர தமிழர்களுக்கு வேறு மார்க்கம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

❍❍❍

அட்டைப்பட அதிதி

படைப்பாளியும் செயற்பாட்டாளருமான

சிட்னி மாகஸ் டயஸ்

திக்குவல்லை கமால்

முன்வாசலில் வைக்கத்தக்க அலங்காரமான சிறியதொரு கபேட். அதிலே சுமார் ஐம்பது புத்தகங்கள். சிறுவர்களுக்கானவை. ஆனால் பெரியவர்களும் வாசிக்கலாம்.

ஓய்வு நேரத்தில் சிறார்கள் எடுத்துப் புரட்டுவதற்காக, கண்களில் தெரியும்படியாகப் புத்தகங்களை வைப்பது ஒன்று. இப்படி அழகானதொரு உருப்படியை நமது வாசலிலும் வைத்துக் கொள்வோமே என்று அடுத்தவர்களைத் தூண்டுவது மற்றொன்று. இந்த இரண்டு நோக்கங்களையும் உள்ளடக்கிய அழகிய கனவு இது.

நூல்களை வாங்குவதற்கும் அழகிய சிறு அலுமாரியைச் செய்வதற்கும் ஒரு செலவுண்டு. இது இலாப நோக்கமற்றதாயினும், இதனைக் கொள்வனவு செய்யும் சாதாரண குடும்பத்தவர்களுக்கு அது பெரிய தொகையாக இருக்கலாம். எனவே தவணை அடிப்படையில் அதனைச் செலுத்தலாம் என்பதே நிதி சார்ந்த ஒழுங்காகும். தமிழ்பேசும் குடும்பத்தினர் கோருமிடத்து தமிழ்நூல்களோடு கொடுக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதனைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தும் முதற்கட்டத்தில் பிரவேசித்துள்ள இவர், ஏற்கனவே இவ்வாறான விடயங்களை மேற்கொண்ட அனுபவசாலி என்பது குறிப்பிடத்தக்கது.

பின்தங்கிய கிராமங்களுக்குச் சென்று, வசதிகுறைந்த 10 - 15 அக்கம்பக்க குடும்பங்களைச் சேர்ந்த சிறுவர்களை, வாய்ப்பான ஓரிடத்தில் ஒன்று திரட்டி, அவர்களுக்கு புத்தகங்களைக் கொடுத்து, வாசிக்க வைத்து, அவர்களோடு சிநேகபூர்வமாக உரையாடி கருத்துக்களைத் திரட்டியவர் இவர்.

ஆம், இவர்தான் சிட்னி மாகஸ் டயஸ். சிறுவர்களால் அதிகம் வாசிக்கப்பட்டவர். புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்த ஆனமடுவ கிராமத்தில் வாழ்ந்து வருகிறார்.

சிட்னி சாதாரணதர மாணவராக இருக்கும் பருவத்திலேயே எழுத ஆரம்பித்தவர். மிஹிர, சரஸவிய, தெஸதிய, கல்பனா போன்ற பத்திரிகைகளில் தனது ஆரம்ப ஆக்கங்களை எழுதினார். 'சிங்கள சினிமா' என்பதே இவரது முதல் நூலாகும்.

தனிப்பட்ட வகையில் புத்தகங்களை அச்சிட்டு புத்தக வியாபாரிகளுக்குக் கொடுத்துப் படும் தொல்லைகளையும், பதிப்பகங்களுக்கு கையளித்து அங்கு இடம்பெறும் ஒழுங்கீனங்களையும் அனுபவித்ததன் விளைவாக, தனது புத்தகங்களை வெளியிட்டுக்கொள்ள 1995ல் **தோதென்ன** வெளியீட்டகத்தை ஆரம்பித்தார்.

இதுவரை தமிழ் - சிங்கள - ஆங்கில மொழிகளில் 150 க்கு மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளமை பெரும் சாதனைதான். தனக்காக ஆரம்பித்த போதும் பிறருடைய ஆக்கங்களே அதிகம் வெளிவந்துள்ளன. பேராசிரியர் என்.சண்முகலிங்கனின் 'சான் றோன் எனக்கேட்ட தாய்', இவர் வெளி யிட்ட முதல் தமிழ் நூலாகும். தொடர்ந்து முப்பதுக்கு மேற்பட்ட தமிழ்நூல்களை வெளி யிட்டுள்ளமை வியப்பான விடயமே.

தமிழ் நூல்களின் விற்பனை பற்றி அவரிடம் வினவியபோது, "சிறுவர் இலக்கிய நூல்களை விற்பனை பற்றிப் பிரச்சினை இல்லை. சில நிறுவனங்கள் தொகையாக வாங்குகின்றன. ஏனைய நூல்களைப் பொறுத்தமட்டில் மந்த நிலைதான். நான் அறிந்தவரையில் தமிழ் இலக்கிய வாதிகளின் நூல்களுக்கு இங்கே விற்பனைச் சந்தை இல்லை. அவர்கள் தனிப்பட்ட முயற்சிகள் மூலம்தான் சமாளித்துக் கொள்கிறார்கள்" என்றார்.



சிட்னி மாகஸ் டயஸ், ஆப்த நண்பர்கள், முல்லைத்தீவு தாத்தா போன்ற புத்திளைஞர் இலக்கியங்களும், ஊரடங்குச் சட்டம், தொடரும் உறவுகள்.... போன்ற சிறுகதைத் தொகுப்புகளும் தமிழில் வந்துள்ளன. ஆனால் அவரது ஆளுமையும் ஆர்வமும் சிறுவர் இலக்கியங்களிலேயே பெரிதும் வெளிப்பட்டு நிற்கிறது. சிங்களத்தில் வந்துள்ள நாற்பதுக்கு மேற்பட்ட அத்தகைய ஆக்கங்களும் தமிழில் வருமாயின், அது எமது சிறார்களுக்குக் கிட்டும் மிகப் பெரும் பேறாகும். அந்த வகையில் வெற்றிக்குருவி, ரோஜா இளவரசி, சின்னவனும் நண்பர்களும், இனிய பிறந்த நாள், எழுத்தும் நானும் நண்பர்கள், மயில் அரசன், முன்மாதிரி, அம்மா வரும் வரை, பிரிவும் உறவும் என்பன தமிழில் வந்துள்ளன.

ஊரடங்குச் சட்டம், முல்லைத்தீவு தாத்தா போன்ற ஆக்கங்களில் யுத்தக் கெடுபிடிகள், கொடுமைகள் மனித அவலம் போன்றன பற்றிப் பேசியுள்ளார். அதனூடாக அவர் செயலூக்கம் பெற்றமை முக்கியமான திருப்பமாகும்.

மனிதப் பெறுமானத் தைத் தூக்கி நிறுத்த ஒருவரையொருவர் விளங்கிக் கொள்ள இலக்கியத்தைப் பயன் படுத்த முடியுமென்பதையும், அதற்காக பரஸ்பரம் மொழிபெயர்ப்பு முயற்சிகளில் இறங்க வேண்டியதன் அவசியத்தை வெளிப்படுத்தி வழிகாட்டியவர் இவர் என்பதை எவரும் மறந்துவிட முடியாது. அது இன்றுவரை தொடர்கிறது. இனியும் தொடரும். மொழிபெயர்ப்பு முயற்சிகள் அவ்வப்போது இடம்பெற்று வந்த போதிலும், 1995 களிலேயே அதில் தைரியமாக இறங்கிப் புத்துயிரூட்டினார்.

தெனகம சிரிவர்தன, ரஞ்சித் தர்மகீர்த்தி, விமலதாஸ முதாகே, நிரோஷா கோரளகே போன்ற சிங்கள எழுத்தாளர்களின் நூல்களைத் தமிழிலும், சுதாராஜ், ஓ.கே.குணநாதன், எஸ். அருளானந்தம், லெ.முருகபூபதி போன் றோரின் நூல்களை சிங்களத்திலும் வெளி யிட்டுள்ளார். இவ்வாறாக பல எழுத் தாளர்களின் சிறுகதைகள் அடங்கிய நூல் களும் வெளியாகியுள்ளன.

அண்மையில் தமிழினியின் 'அயலும் சிஹின' (விடிகாலைக் கனவு) என்ற சிறுகதைத் தொகுப்பை வெளியிட்டார். அதன் தொடர் பதிப்புகளும் வெளிவரவுள்ளன. தமிழ்த் தொகுப்பையும் வெளிக்கொணர ஆவன செய்து வருகிறார்.

"சிங்களத்தில் வெளிவருவன மட்டுந்தான் இந்த மண்ணுக்குரிய இலக்கியம் என்பதை

நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன். தமிழ், முஸ்லிம் படைப்பாளிகள் தத்தமது அடையாளத்தோடு தமது சூழலை வெளிப் படுத்தி எழுதுகின்றவையும் இந்த மண்ணுக்குரியவை தான். இவையெல்லாம் ஒன்று கலப்பதன் மூலமே தேசிய இலக்கியம் உருவாக முடியும்" என்று எந்தச் சந்தர்ப்பத்திலும் துணிந்து பேசுபவர் சிட்னி.



இவர் நல்வாழ்வுக்கான அறிவு, புது வாழ்வுக்கான அறிவு, சகவாழ்வுக்கான அறிவு, நல்லாட்சிக்கான அறிவு என்ற தொடர் நூல்களை இம்மொழிகளிலும் தந்துள்ளார்.

அந்தந்த தலைப்புக்கு பொருத்தமான விடயங்களை சம்பவங்களாகவும் கதைகளாகவும் எவரும் வாசித்து விளங்கத்தக்கதாக வரலாறு, மரபு, நாட்டாரியல், மதங்கள் போன்றவற்றிலிருந்து பொறுக்கியெடுத்து மீளுருவாக்கம் செய்து கொடுத்துள்ளார். அவரது தேடல் எவ்வளவு தூரம் பரந்து விரிந்து செல்கிறதென்பதற்கு இதிலுள்ள ஒவ்வொரு ஆக்கமும் சான்று பகர்கின்றன.

இவர் ஒரு சிறுவர்களுக்கான பாடலா சிரியரும் கூட, 'சமநலரேனக்' என்ற இசைப் பாடல் இறுவட்டு அதனை உறுதிப்படுத்துகிறது.

இலக்கியத்திற்கு அப்பாலும் இவர் சென்று பல நூல்களை ஆக்கித் தந்துள்ளார். மனித சமூகத்தைப் பாதிக்கும் அத்தனை விடயங்களிலும் இவர் தனது கவனத்தைச் செலுத்தத் தவறவில்லை. தொடர்பாடல், சிறுவர் அபிவிருத்தி, கோளமயமாதல், பன்மைத்துவம் போன்ற விடயங்கள் தொடர் பாகவும் புத்தகங்கள் எழுதியுள்ளார்.

இலக்கியவாதி என்ற வகையில் இவர் பல பட்டங்களையும் விருதுகளையும் தனதாக்கிக் கொண்டுள்ளதை பட்டியல் போட வேண்டிய அவசியமில்லாவிட்டாலும் கூட, மட்டக்களப்பு எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் தனது பரிசளிப்பு விழாவொன்றின் போது, இனநல்லுறவுச் செயற்பாட்டாளர் என்ற வகையில் விருதளித்து கௌரவித்ததை குறிப்பிடாதிருக்க முடியவில்லை.

தொழில்ரீதியாக இவர் 1983 - 1996 காலப்பகுதியில் ஆங்கில ஆசிரியராகக் கடமையாற்றினார். அக்கால கட்டத்தில் தேசிய மட்டத்தில் ஆசிரியர்களுக்காக நடாத்தப்பட்ட சிறுகதைப் போட்டியொன்றில் பங்குபற்றி முதற்பரிசு பெற்றதன் மூலம் பெரிதும் உற்சாகமடைந்தார். இலக்கியவாதியாக..... வெளியீட்டாளராக.... செயற்பாட்டாளராக.... நிறைய சாதிக்க முடியுமென்ற காரணத்தினாலோ என்னவோ தனது வாழ்வாதாரப் பாதையை மாற்றிக் கொண்டார். குறுகிய காலத்தில் சாதித்தும் காட்டினார்.

சிட்னி மாகஸ் டயஸிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியவை நிறையவே உண்டு.

❍❍❍

கே.எஸ்.சுதாகர்

(வ.ந.கிரிதரன் மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தில் கட்டிடக்கலை பயின்றவர். இலங்கையில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் மற்றும் நகர அதிகார சபை ஆகியவற்றில் பணிபுரிந்தவர். கனடாவிற்குப் புலம்பெயர்ந்த பின்னர் அங்கு இலத்திரனியல் பொறியியல் மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறையில் தகைமைகள் பெற்றுள்ளார். சிறுகதை, கவிதை, கட்டுரை, ஆராய்ச்சி மற்றும் நாவல் என்ற துறைகளில் தனது பங்களிப்பைச் செலுத்தியுள்ளார். அத்துடன் 2000ஆம் ஆண்டிலிருந்து 'பதிவுகள்' *(pathivukal-http://www.geotamil.com/)* என்னும் இணைய இதழையும் நடத்தி வருகின்றார். 'குடிவரவாளன்' நாவல், 'அமெரிக்கா' நாவல்/சிறுகதைகள் தொகுப்பு, 'மண்ணின் குரல்' நான்கு நாவல்களின் தொகுப்பு, 'நல்லூர் ராஜதானி: நகர அமைப்பு', "எழுக அதிமானுடா" (கவிதைத்தொகுப்பு) மற்றும் "மண்ணின் குரல்" (நாவல் கட்டுரை மற்றும் கவிதைகளின் தொகுப்பு) போன்ற நூல்களை வெளியிட்டுள்ளார்.

[கடந்த இதழின் தொடர்ச்சி....]

9. நீங்கள் எழுதிய அறிவியல் / அமானுஷ்ய சிறுகதைகள், புகலிட வாழ்வனுபவம் சார்ந்த படைப்புகள் பற்றிக் கூறுங்கள்.

எனக்கு அறிவியற் துறையில் மானுட இருப்பினை அறிந்து கொள்வதற்குரிய துறைகள் மிகவும் பிடிக்கும். உளவியல், உயிரியல், மானுட சமுதாயப்பொருளியல் மற்றும் வானியற்பியல் ஆகிய துறைகள் எனக்கு மிகவும் பிடிக்கும். இவற்றில் வானியற்பியல் எப்பொழுதும் என்னை மிகவும் கவர்ந்த துறை. என் சிந்தனையை விரிவு வைக்கும் துறை. இத்துறையில் ஸ்டீபன் ஹார்கிங்ஸ், பிரயன் கிறீன் மற்றும் மிஷியோ ககு போன்றோர் சாதாரண மக்களுக்குப் புரிந்து கொள்ளும் வகையில் எழுதிய வானியற்பியல் சம்பந்தமான அறிவியல் நூல்கள் எனக்கு மிகவும் பிடிக்கும். இவர்கள் யாவரும் சிறந்த அறிவியல் அறிஞர்கள். தாங்கள் அறிந்ததை, புரிந்துகொண்டதை, கண்டு பிடித்ததை எல்லாம் சாதாரண மக்களும் அறிந்துகொள்வது அவசியம் என்று கருதுபவர்கள். ஐன்ஸ்டைனின் சார்பியற் தத்துவம், குவாண்ட இயற்பியல் போன்ற துறைகளைப்பற்றி சாதாரண வாசகர்களும் புரியும் வகையில் இவர்கள் எழுதினார்கள். பிரபஞ்சம் பற்றிய இவர்கள் பற்றிய கருது கோள்கள் என்னை மிகவும் கவர்ந்தவை. குறிப்பால் மூன்று பரிமாணங்களுக்கும் அதிகமான பரிமாணங்களை உள்ளடக்கி உயிரினங்கள், இப்பிரபஞ்சம் அல்லது பிரபஞ்சங்கள் இருக்கக்கூடிய சாத்தியங் களைப் பற்றியெல்லாம் இவர்களின் நூல் கள் விபரித்தன. இப்பல்பரிமாண உலகும், உயிர்களும் இருக்கக்கூடிய சாத்தியங்கள் எப் பொழுதும் எனக்கு மிகவும் வியப்பினைத் தந்த அதே சமயம் என் சிந்தனையையும் கேள்விகளுக்குள்ளாக்கி விரிவுபட வைத்தன. நான் எழுதிய அறிவியற் சிறுகதைகளில் "தேவதரிசனம்" மற்றும் "நான் அவனில்லை" ஆகியவை முப்பரிமாணங்களுக்கும் அதிகமான பரிமாணங்கள் இருக்கக்கூடிய சாத்தியங்களின் அடிப்படையில் எழுதப்பட்டவை. "ஆத்மாவின் புத்துயிர்ப்பு" "தொலைகாவுதல்" *(Teleporting)* என்னும் அடிப்படையில் ஆத்மா என்னும் தத்துவத்தையும் இணைத்துச் சிந்தித்ததன் விளைவாக உருவான சிறுகதை.

இதுவரையில் நான் அதிகமான புனை கதைகளை அறிவியற் துறையில் எழுதி யிருக்காவிட்டாலும், மூன்று அறிவியற் சிறுகதைகள் மற்றும் ஆறு அறிவியற் கட்டுரைகள் ஆகியவற்றை எழுதியிருக் கின்றேன். எதிர்காலத்தில் இத்துறையில் மிக அதிகமாக எழுத வேண்டுமென்ற ஆர்வ முள்ளது. பிரதிலிபி இணையத்தளத்தில் அறிவியற் சிறுகதைகள் மற்றும் கட்டுரைகள் அடங்கிய தொகுப்பினை வாசிக்கும் வசதி யுள்ளது. அதற்கான இணைய இணைப்பு: *https://tamil. pratilipi.com/read? id= 5092686858027008*

10.'பதிவுகள்' இணையத்தளம் ஆரம்பித்ததன் நோக்கம் என்ன?

பதிவுகள் இணையத்தளத்தை நான் 2000ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் ஆரம்பித்தேன். நான் ஆரம்பித்ததன் நோக்கம் என் படைப்புகளை வாசகர்களுடன் பகிர்ந்துகொள்வதற்காகவும், இணையத்தில் தமிழில் எழுதுவோரை ஊக்கப்படுத்துவதற்காகவுமே. ஆரம்பத்தில் என் படைப்புகள் சிலவற்றுடன் பல்வேறு விடயங்கள் பற்றிய என் கருத்துகளையும் எழுதி வந்தேன். மிகவும் சாதாரணமானதொரு இணையத்தளம். ஆனால் அதுவே பலரையும் கவர்ந்தது. ஆனந்தவிகடன் கூடத் தனது இதழொன்றில் பதிவுகளில் வெளியான மகாத்மா காந்தியின் பேரன் பற்றி எழுதிய கருத்தொன்றினை மீள் பிரசுரம் செய்திருந்தது. பதிவுகளுக்குப் பலர் தம் படைப்புகளையும் அனுப்பி வைக்கத் தொடங்கினார்கள். அவற்றையும் பிரசுரிக்க ஆரம்பித்தேன். பின்னர் பதிவுகளில் விவாதக் களத்தினையும் ஆரம்பித்தோம். தமிழகத்தின் முன்னணிப் படைப்பாளர்கள் பலர் கலந்துகொண்டார்கள். ஜெயமோகன், பாவண்ணன், ராஜநாயஹம், யமுனா ராஜேந்திரன், ஜெயபாரதன், வேத சகாயகுமார், வெங்கட்சாமிநாதன் போன்ற தமிழ்க் கலை, இலக்கியத் துறையில் அறிமுகமானவர்கள் தொடக்கம், புகலிடத் தமிழ் எழுத்தார்கள் பலர் மற்றும் அறிமுக மாகாத புதியவர்கள் வரையில் பதிவு களுக்குத் தம் படைப்புகளை அனுப்பி வந்தார்கள். பதிவுகள் பலருக்குக் களம் அமைத்துக் கொடுத்திருக்கின்றது. அது திருப்தியைத் தருகின்றது. ஆரம்பத்தில் முரசு அஞ்சலில், பின் முரசு அஞ்சலின் திஸ்கி எழுத்துருவில், தற்போது ஒருங்குறி எழுத்துருவில் பதிவுகள் வெளியாகின்றது. உலகின் பல்வேறு பாகங்களிலுமிருந்து பதிவுகளுக்கு ஆர்வத்துடன் படைப்புகளை அனுப்புகின்றார்கள். பல்கலைக்கழகங்களி லிருந்து பேராசிரியர்கள் தொடக்கம் பட்டப் படிப்பு மாணவர்கள் வரையில் தம் ஆய்வுக் கட்டுரைகளை அனுப்புகின்றார்கள். பதிவுகள் நானே எதிர்பாராத அளவுக்கு வளர்ச்சி அடைந்திருக்கின்றது. மகிழ்ச்சியைத் தரு கின்றது. அதேசமயம் மிகுந்த உழைப்பினை யும் வேண்டி நிற்கின்றது.

11. ஒரு எழுத்தாளர் சஞ்சிகை நடத்துவதற்கு (இணையம் ஆயினும் சரி) தமது நேரத்தை ஒதுக்குவதனால், அவர் தனது எழுதும் நிலையிலிருந்து விடுபட்டுப் போகின்றார் என்று சொல்வது பற்றி...

அது எழுத்தாளர் ஒவ்வொருவரையும் பொறுத்தது. எழுத்தாளர் ஒருவர் எப்பொழுதுமே எழுதிக் கொண்டிருப்பதில்லை. அவருக்கு வேறு பொழுது போக்குகள், குடும்பச்சுமைகள் இவற்றுக்கு மத்தியில்தான் எழுதுகின்றார். எனவே ஒருவர் நன்கு திட்ட மிட்டால், அர்ப்பணிப்புடன் செயற்பட்டால் இவ்விதமான பிரச்சினைகள் எழாது அல்லது கடுமையான தாக்கத்தினை ஏற்படுத்துவதாக இருக்காது. மேலும் எழுத்தார்வம், வாசிப் பார்வம் உள்ள ஒருவர் எவ்விதமான தடை களுக்கு மத்தியிலும் அவற்றுக்கென்று நேரத்தைக் கண்டுகொள்வார். என் அனு பவத்தின் அடிப்படையில் கூறுகின்றேன்.

12. ஓர் இணையத்தளத்தை நிர்வகிப்பது என்பது இலகுவான வேலை அல்ல. அது பல சவால்களைக் கொண்டது. தினமும் இணையத்தளத்தை புதுப்பித்தும் வருகின்றீர்களே! உங்கள் வேலைப் பணிகளுக்கிடையே எப்படி இது சாத்திய மாகின்றது?

அர்ப்பணிப்பும், ஆர்வமுமே இணையத் தளத்தை நிர்வகிப்பதை ஓரளவுக்கு இலகு வாக்குகின்றன என்பேன். அப்படியிருந்தும் பதிவுகளுக்கு வரும் படைப்புகள் குவிந்

திருப்பதால் எல்லாவற்றையும் உடனுக்குடன் வாசித்துப் பிரசுரிப்பது சாத்தியமாவதில்லை. சவால்களுக்கு மத்தியிலும் என்னால் கடந்த பதினாறு வருடங்களாக "பதிவுகள்" இணைய இதழினை நடாத்த முடிகிறதென்றால் அதற்குக் காரணம் ஆர்வமும், அர்ப்பணிப்புடன் கூடிய உழைப்பும்தாம்.

13. பதிவுகள் இணையத்தளம் வாசகர் பரப்பில் முன்னணியில் இருப்பதாக அறிகின்றேன். உங்கள் இணையத்தளம் மற்றைய இணையத்தளங்களில் இருந்து எப்படி வேறுபடுகின்றது? இணையத்தளத்தை நடத்துவதில் ஏற்படும் சுவாரஸ்யமான அனுபவங்கள், இடர்பாடுகள் பற்றிச் சொல்லுங்கள்? இணையத்தளத்தை நடத்துவதற்கு ஏற்படும் பெரும் செலவை எப்படி ஈடு செய்கின்றீர்கள்?

இவ்விதமானதொரு இணையத்தளத்தை நடத்துவதானால் தொழில்நுட்ப வல்லுநர்களின் உதவிகள் தேவைப்படும். தளத்தை நிர்வகிக்க "வெப் மாஸ்ட்டர்", இதழின் படைப்புகளைப் பரிசீலித்து வெளியிட ஆசிரியர், இணையத்தளத்தை உருவாக்க இணையத்தளத்தை உருவாக்கக்கூடிய மென் பொருள் வல்லுநர்கள் இவ்விதம் பலரின் உழைப்பு தேவைப்படும். அதற்கு மிகுந்த செலவேற்படும். ஆனால் இத்துறைகளில் எனக்குள்ள அனுபவம், அறிவு காரணமாக இவற்றை என்னால் நடத்த முடிகின்றது. இவை தவிர இணையத்தளத்தை நடத்துவதற்குரிய இணையத்தளச்சேவை வழங்கும் நிறுவனத்துக்கான மாதாந்த செலவினை ஏனைய செலவாகக் குறிப்பிடுவேன்.

"பதிவுகள்" இணையத்தளத்தில் ஆய்வு என்றொரு பிரிவு உள்ளது. அதில் பல்கலைக் கழகங்களில் ஆய்வுகள் செய்யும் பட்டப்படிப்பு மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைகளை, பேராசிரியர்களின் ஆய்வுக் கட்டுரைகளை, எழுத்தாளர்களின் ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டு வருகின்றோம். இப்பகுதித் தமிழகப் பல்கலைக்கழகங்களில் மிகுந்த ஆதரவினைப் பெற்றுள்ளது. "பதிவுகள்" இணைய இதழ்களில் தம் ஆய்வுக்கட்டுரைகள் வெளியாவதை அவர்கள் விரும்புகின்றார்கள். "பதிவுகள்" இணைய இதழில் வெளியாகும் ஆய்வுகளைப் பல்கலைக்கழகங்களும் ஏற்றுக் கொண்டுள்ளன என்பதையே இது காட்டு கின்றது. இந்த "ஆய்வு" ப்பகுதி முக்கியமான ஏனைய இணைய இதழ்களில் காணப்படாத பகுதிகளிலொன்று.

அடுத்தது ஏனைய இணையத்தளங்கள் ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியிலேயே புதிய ஆக்கங்களை வலையேற்றம் செய் கின்றன. ஆனால் "பதிவுகள்" இணைய இதழ் ஆக்கங்கள் கிடைப்பதன் அடிப்படையில் வாசிக்கப்பட்டு, பிரசுரத்துக்குத் தேர்ந் தெடுக்கப்பட்டவை பிரசுரமாகின்றன. இவை யெல்லாம் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் எனலாம்.

14. ஒருவர் தனது படைப்பை பத்திரிகை அல்லது சஞ்சிகைகளில் அதாவது என்றும் அழியாத ஊடகங்களில் வரு வதையே விரும்புகின்றார். ஏனென்றால் சில இணையத்தளங்கள் இடை யில் முறிந்துபோய் விடுகின்றன. அப்படியே அந்த இணையத்தளம் மீள உயிர்பெற்றாலும் பழைய படைப்புகளை அங்கே காண முடிவதில்லை. அப்படி ஒருவர் வேறு ஊடகங்களில் வந்த தனது படைப்பை மூலம் குறிப்பிட்டு இணையத் தளங்களுக்கு அனுப்புவது பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்? இன்னுமொரு கேள்வி ஒருவர் தனது படைப்பை ஒரே நேரத்தில் பல இணையத் தளங்களுக்கு அனுப்புவது பற்றி என்ன சொல்கின்றீர்கள்?

நூலகம் இணையத்தளத்தில் இணையத் தளங்களை ஆவணப்படுத்துவது பற்றி ஆராய்ந்து வருகின்றனர். அது சாத்தியமாகும் பட்சத்தில் இணைய இதழ்களில் வரும் படைப்புகளும் இணையத்தில் அழியாது நிலை நிற்கும் சாத்தியம் ஏற்படும். இவ்விதமாக இணையத் தளங்களைப் பாதுகாக்கும் வகையி லான தொழில்நுட்ப வசதிகள் ஏற்கனவே உள்ளன. அவற்றை நூலகம் போன்ற இணையத் தளங்கள் பாவிப்பது மிகுந்த பயன் தருவதாக அமையும். ஒருவர் தனது வேறு ஊடகங்களில் வெளியான படைப்புகளை இணைய இதழ்களுக்கு அனுப்புவதை நான் ஆதரிக்கின்றேன். ஆனால் மூலம் குறிப்பிட

வேண்டிய அவசியமில்லை. இணைய இதழ்கள் மீள்பிரசுரம் செய்ய விரும்பும் படைப்புகளை மட்டுமே மூலம் குறிப்பிட்டுப் பிரசுரிக்க வேண்டுமென்பது என் நிலைப்பாடு. ஏனைய படைப்புகளை நேரடியாக "பதிவுகள்" இணைய இதழுக்கு அனுப்பினால் அவை பிரசுரத்துக்குத் தேர்ந்தெடுக்கப்படும்போது அவற்றை மூலம் குறிப்பிடாது பிரசுரிப்போம்.

15. நீங்கள் ஆங்கிலத்தில் எழுதிய படைப்புகள் எப்படி வரவேற்பைப் பெற்றுள்ளனவா?

நான் தமிழில் எழுதியதைப்போல் ஆங்கிலத்தில் அதிகமாக எழுதியவனல்லன். இதுவரையில் லதா ராமகிருஷ்ணனின் மொழி பெயர்ப்பில் குடிவரவாளன், அமெரிக்கா நாவல்கள், சில சிறுகதைகள், மற்றும் நல்லூர் இராஜதானி நகர அமைப்பு ஆகிய நூல்களும், சில சிறுகதைகளும் வெளியாகியுள்ளன. நான் ஆங்கிலத்தில் இதுவரை சுமார் 13 கவிதைகள் வரையில் எழுதியிருக்கின்றேன். அவற்றில் லங்கா கார்டியனில் ஆங்கிலக் கவிதை களிரண்டு வெளியாகியுள்ளன. poemhunter.com மற்றும் poemlist.com ஆகிய ஆங்கில இணையத்தளங்களில் என் ஆங்கிலக் கவிதைகள் 13 வரையில் பிரசுரமாகியுள்ளன. அவற்றில் சில "யு டியூப்" பில் குரல் வடிவில் வெளிவந்திருப்பதையும் அறிந்திருக்கின்றேன். லதா ராமகிருஷ்ணனின் மொழிபெயர்ப்பில் வெளியான எனது "ஒரு மா(நா)ட்டுப் பிரச்சினை" ஆங்கிலத்தில் 'A CO(W)UNTRY ISSUE' என்னும் தலைப்பில் வெளியானது. அதனை இணையத்தில் கண்ட அமெரிக்கப் பெண்மணியொருவர், Betsy Harrell (USA) என்று பெயர், வாசித்துப் பாராட்டிச் செம்மைப் படுத்தி அனுப்பியிருந்தார். மறக்க முடியாத அனுபவம். அதுபோல் ஒரு மா(நா)ட்டுப் பிரச்சினை என்னும் சிறுகதையின் மேற்படி ஆங்கில வடிவம் (லதா ராமகிருஷ்ணனின் மொழிபெயர்ப்பில்) இலண்டனிலிருந்து வெளி வரும் ஆங்கில சஞ்சிகையான தமிழ் டைம்ஸ் மீள் பிரசுரம் செய்திருக்கின்றது.

நல்லூர் இராஜதானியின் ஆங்கில பிரதியினைப் பல ஆய்வாளர்கள் தம் ஆய்வுகளில் பாவித்துள்ளதை இணையத் தேடல்களில் கவனித்துள்ளேன். இவற்றைப் பற்றித் தற்போது எத்தகைய வரவேற்பினைப் பெற்றுள்ளன என்பதைக் கூற முடியாது. காலம் தான் கூறவேண்டும். மேலும் ஆங்கிலத்தில் நான் எழுதியவை மிகவும் குறைவு. நான் ஆங்கில வலைப்பூ இணையத்தளத்தினை 'Canadian Tamil Literature: Writer V.N.Giritharan's Corner' என்னும் பெயரில் வைத்துள்ளேன். அதற்கான இணையத்தள முகவரி: https://vngiritharan23.wordpress.com/ அங்கு என் படைப்புகளின் ஆங்கில மொழி பெயர்ப்புகளை, ஆங்கிலக் கவிதைகளை நீங்கள் வாசிக்கலாம்.

16. கனடாவில் வெளிவந்த முதல் தமிழ் நாவல், நீங்கள் எழுதிய 'மண்ணின் குரல்' என அறிகின்றேன். இது பற்றிச் சொல்லுங்கள்.

1984ஆம் ஆண்டு கனடா வந்தேன். அப்பொழுது மான்ரியாலில் கையெழுத்துப் பிரதியாக வெளியாகிக்கொன்டிருந்த "புரட்சிப் பாதை" என்னும் சஞ்சிகையில் கவிதைகள், கட்டுரைகள் மற்றும் "மண்ணின் குரல்" என்னும் சிறு நாவலொன்றினையும் எழுதியிருந்தேன். அதில் வெளிவந்த "மண்ணின் குரல்" முடிவடை வதற்குள் அக்கையெழுத்துச் சஞ்சிகை நின்று போய்விட்டது. எனவே நாவலை முடித்து, "புரட்சிப்பாதை" சஞ்சிகையில் வெளியான கவிதைகள், கட்டுரைகள் சிலவற்றையும் சேர்த்து 1987 தை மாதம் "மண்ணின் குரல்" என்னும் சிறு தொகுப்பினை மங்கை பதிப்பகம் சார்பில் வெளியிட்டேன். அதுவே நான் அறிந்த வரையில் கனடாவில் வெளியான முதலாவது தமிழ் நாவல். அதனைக் கனடாவில் இயங்கிக் கொண்டிருக்கும் றிப்ளக்ஸ் நிறுவனம் அச்சடித்துத் தந்தது. மேலும் அந்நூலை அன்றே கணினி மூலம் அச்சடித்து வெளியிட்டார்கள்.

17. நீங்கள் நியூயோர்க்கில் தடுப்புமுகாமில் இருந்ததை மையப்படுத்திச் சொல்லும் 'அமெரிக்கா' குறுநாவல், அதன் பின்ன ரான நியூயோர்க் மாநகரத்து வாழ்வை விபரிக்கும் 'குடிவரவாளன்' நாவல் இவை பற்றி சிறிது சொல்லுங்கள்.

1983 இனக்கலவரத்தைத்தொடர்ந்து கனடா நோக்கி அகதியாகச் செல்லும் வழியில் பாஸ்டன் நகரில் எம்மை ஏற்றிக்கொண்டு செல்ல வேண்டிய டெல்டா விமான நிறுவனம் ஏற்க மறுத்துவிட்டது. அதன் காரணமாக

ஈழமும் தமிழும்

முல்லையில் 'பிள்ளை' உண்ட உணவு

பாடியவர் : சி. வை. தாமோதரம்பிள்ளை
(சிறுப்பிட்டி)

காலம் : 1832 – 1901

தமிழ் வரலாற்றிலே **தாமோதரம்பிள்ளை** அவர்கள் முக்கிய இடத்தினைப் பெறுகின்றார். ஓலைச்சுவடிகளில் இருந்த பழந்தமிழ் இலக்கியங்களை அச்சுவாகனம் ஏற்றுவதற்கு பாலமாக இருந்தவர். தமிழ்ப் பதிப்புத்துறையின் வரைவிலக்கணமாகத் திகழ்ந்தவர். அத்துடன் தாய்மொழியாம் தமிழை விரும்பிக் கற்று அதில் ஆழமாக காலூன்றி நின்றுகொண்டு தாம் கற்ற மேலைத்தேய கல்வியின் சிந்தனைகளைத் தமிழுக்குள் கொண்டுவந்தவர். B.L. தேர்ச்சிபெற்ற தாமோதரம்பிள்ளை அவர்கள், வக்கீலாகவும், நீதிபதியாகவும் தொழிலாற்றியபோதும் தமிழுலகில் முதலாவதாக B.A. சித்தி பெற்றவர் என்னும் சிறப்பையும் தனதாக்கியவர்.

இவர், **வடமுல்லை வாயிற்கோவை** என்னும் நூலைப் பாடிக்கொண்டு அதனை அரங்கேற்றுவதற்கு வடமுல்லை வாயிலுக்குச் சென்றுள்ளார் என்னும் பதிவுகள் உள்ளன. இருப்பினும் இந்த வடமுல்லை வாயிற்கோவை நூல்பற்றிய பிற விபரங்களை அறியுமாறில்லை. இந்நூலினை அரங்கேற்ற வடமுல்லைக்குச் சென்று அங்குள்ள ஒரு சத்திரத்தில் தங்கியபோது தனக்கு உணவளித்த பார்ப்பனனை (பிராமணனை) நோக்கி நகைச்சுவையாகப் பின்வரும் பாடலைப் பாடியுள்ளார் என்கிற இலக்கியப் பதிவுகளைக் காணமுடிகின்றது.

வாழைக் காயோர் பொரியல் வைத்தான் பருப்புநெய்
கூழைப்போற் சாதமே கொட்டினான் – பேழைவயி
றேற்றது காய்க் குழம்பும் ஈசாபுளித் தயிரும்
போற்று முல்லைப் பார்ப்பனிடம் போய்.

அமெரிக்காவில் அகதிக் கோரிக்கையை வைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. நாங்கள் சட்ட பூர்வமாகக் கனடா செல்லவிருந்த பயணிகள். எங்களுக்கு எட்டு மணி நேர "ட்ரான்சிட் விசா" கூடத் தரப்பட்டிருந்த நிலையில், அகதிக் கோரிக்கையினை முன்வைத்த எம்மைச் சட்டவிரோதக் குடி வரவாளர்களாகக் கருதிய அமெரிக்க அரசு பாஸ்டனிலிருந்து எம்மை நியூயார்க் மாநகரிலுள்ள புரூக்லீன் நகரிலுள்ள தடுப்பு முகாமில் கொண்டுசென்று அடைத்து விட்டது. சுமார் மூன்று மாதங்கள் வரையில் எம்மை அடைத்துவைத்த அரசு தன் தவறினை உணர்ந்து சொந்தப் பிணையில் செல்ல அனுமதியளித்து விடுவித்தது. இந்த மூன்று மாதத்தடுப்பு முகாம் அனுபவங்களைப் பதிவு செய்வதன் அவசியத்தை உணர்ந்ததன் விளைவே எனது "அமெரிக்கா" என்னும் சிறு நாவல். கனடாவில் வெளியான "தாயகம்" பத்திரிகையில் தொடராக வெளியானது. அக்காலகட்டத்தில் தாயகம் (கனடா) பத்திரிகையாக வெளிவந்து கொண்டிருந்தது. பின்னரே அது தன் வடிவத்தை மாற்றிச் சஞ்சிகையாக வெளிவர ஆரம்பித்தது. இந்த

வகையில் "அமெரிக்கா" நாவல் பதிவு செய்யும் அனுபவம் முக்கியமானது என்று கருதுகின்றேன். "அமெரிக்கா" தமிழகத்தில் ஸ்நேகா பதிப்பக வெளியீடாக (மங்கை பதிப்பகம் - கனடா- வுடனிணைந்து), மேலும் சில சிறுகதைகளையும் இணைத்து வெளியானது. மிகுந்த வரவேற்பினைப்பெற்ற தொகுதி அது.

அதன் பின்னர் தடுப்பு முகாமிலிருந்து விடுவிக்கப்பட்டதன் பின்னர் சுமார் மேலும் ஒன்பது மாதங்கள் வரையில் நியூயார்க் மாநகரில் சட்டவிரோதக் குடியானவனாக எவ்விதமான வேலை செய்வதற்குரிய சட்ட பூர்வமான ஆவணங்களுமின்றி அலைந்து திரிந்தேன். அந்த அலைந்து திரிந்த அனுபவத்தைப் பதிவு செய்ய வேண்டுமென்ற எண்ணம் நீண்ட நாள்களாக எனக்கிருந்தது. அதன் விளைவே அண்மையில் தமிழகத்தில் ஓவியா பதிப்பக வெளியீடாக வெளியான "குடிவரவாளன்" நாவலாகும். ஆரம்பத்தில் திண்ணை மற்றும் பதிவுகள் இணைய இதழ்களில் அமெரிக்கா-11 என்று வெளியான நாவல் பின்னர் தன் பெயரைக் "குடிவரவாளன்" என்று மாற்றிக் கொண்டது. இதுவும் இலங்கை அகதியொருவரின் நியூயார்க் மாநகர அனுபவத்தை வெளிப்படுத்துவதால், ஆவணப் படுத்துவதால் முக்கியமானது என்று கருதுகின்றேன்.

18. உங்களது படைப்புகளை பல்கலைக்கழக மாணவர்கள் தமது பட்டப்படிப்பிற்காக ஆய்வு செய்துள்ளதாக அறிகின்றேன். அதைப் பற்றிய விபரங்களை இங்கே தரமுடியுமா?

முனைவர் ர. தாரணி அவர்கள் பின்வரும் ஆய்வுக்கட்டுரைகளைத் தமிழக ஆய்வரங்குகளில் சமர்ப்பித்துள்ளார்.

1. Void Within – The Migration of an Albatross into an Unsolicited Province – A Study on the Writings of the Canadian Tamil Writer V.N. Giritharan

2. The Dark Night of the Soul: A Study of the Existential Crisis of the Sri Lankan Tamil Refugees as depicted in the novel An Immigrant by the Canadian Tamil Writer V.N. Giritharan (இவ்வாய்வுக் கட்டுரை *'Scholarly International Multidisciplinary Print Journal' (January -February 2017)* என்னும் ஆய்விதழில் வெளியாகியுள்ளது.)

3. முனைவர் ர. தாரணி *'An Immigrant': A poignant autobiographical sketch of V.N. Giritharan'* என்னும் விமர்சனக்கட்டுரையினையும் எழுதியுள்ளார். "பதிவுகள்" இணைய இதழில் வெளியாகியுள்ளது.

ஏனைய ஆய்வுகள்:

4. வவுனியா பல்கலைக்கழக விரிவுரையாளர் முனைவர் ஞானசீலன் ஜெயசீலன் *"The 'Translocal' Nationalism of the Sri Lankan Tamil Diaspora:A Reading of Selected Short Stories of V.N. Giridharan"* என்னும் ஆய்வுக்கட்டுரையினைத் தமிழக ஆய்வரங்கொன்றில் சமர்ப்பித்திருக்கின்றார். இவ்வாய்வுக் கட்டுரை தமிழகத்தில் வெளிவரும் "பனுவல்" என்னும் ஆய்விதழிலும் வெளியாகியுள்ளது.

5. "வ.ந.கிரிதரனின் நாவல்களில் புலம்பெயர்வு இலக்கிய பதிவுகள் என்னும் தலைப்பில் இளமுனைவர் பட்ட ஆய்வேடானது, தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியின் தமிழாய்வுத்துறை மாணவியாகிய அங்கம்மாள் என்பவரால், திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தில் செய்யப்பட்டுள்ளது.

6. சென்னைப் பல்கலைக்கழகத்தில் *'Fractured Self: A Study of V.N. Giritharan's Selected Short Storie'* என்னும் தலைப்பில் எம். துரைராஜ் என்பவர் தனது *Master of Philo sophy in English* பட்டப்படிப்புக்காக ஆய்வு செய்துள்ளார்.

7. சிங்கப்பூர்க் கல்வி அமைச்சு தனது உயர் தரக்கல்வி பயிலும் மாணவர்களுக்கான தமிழ்ப் பாடத்திட்டத்தில் சுவடுகள் (நோர்வே) இதழில் வெளியான "பொந்துப்பறவைகள்" என்னும் சிறுகதையைச் சேர்த்துள்ளது.

19. 'முகநூல் இலக்கியம்' – இந்த முகநூலால் நீங்கள் அடைந்த இலக்கியம் சார்ந்த நன்மைகள் / தீமைகள் என்ன?

முகநூல் என்னைப் பொறுத்தவரையில் ஆரோக்கியமான விளைவுகளையே அதிக மாகத் தருவதாகக் கருதுபவன். எழுத்தாளர்

ஒருவரின் பத்திரிகைகள், சஞ்சிகைகள் ஆகியவற்றில் வெளியாகும் பத்தி எழுத்து களைப் போன்றவையே "முகநூற் பதிவுகள்" என்பது என் கருத்து. முகநூல் மிகவும் இலகுவாக அதிகமான வாசகர்களிடம் உங்கள் முகநூற் பதிவுகளைக் கொண்டு செல்கின்றன. மேலும் "முகநூல்" நீங்கள் விரும்பும் கலை, இலக்கிய ஆளுமைகள் பலருடன் நட்பு பேணிட வழிவகுக்கின்றது. அவர்களது எண்ணங்களை, உங்களது எண்ணங்களை ஒருவருடனொருவார் உடனுக்குடன் பகிர்ந்து கொள்வதைச் சாத்திய மாக்கியுள்ளது. சமூக ஊடகமான "முகநூல்". மேலும் உடனுடன் தகவல்களை அறிய முடிகின்றது. அரசுகளால் மானுட உரிமை மீறல்களை, முன்பு போல் மூடி மறைக்க முடியாது. இந்த விடயத்தில் முகநூல் போன்ற சமூக ஊடகங்களின் பணி போற்றுதற்குரியது. எந்தப்புதிய தொழில் நுட்பமும் ஆரோக்கியமான விளைவுகளையும், கூடவே எதிர்மறையான விளைவுகளையும் ஒருங்கே கொண்டிருக்கும். ஆறறிவு படைத்த மானுடர்களாகிய நாம்தாம் நல்லதைப்பிரித்து அல்லதைத் தவிர்க்க வேண்டும். இந்த வகையில் என்னைப் பொறுத்தவரையில் "முகநூல்" போன்ற சமூக ஊடகங்களின் வரவை ஆரோக்கியமான வரவாகவே காண்கின்றேன்.

20. கனடாவில் ஆரம்பத்தில் வெளிவந்த கையெழுத்துப் பிரதிகள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் இவை பற்றி....

கனடாவில் 84இல் "புரட்சிப்பாதை" கையெழுத்துச் சஞ்சிகையாக வெளிவந்தது. சுமார் பதினைந்து இதழ்களுக்குள் வெளி யாகியிருக்கலாம். கனடாவில் நான் எழுதிய படைப்புகள் முதலில் வெளிவந்தது அக்கை யெழுத்துச் சஞ்சிகையில்தான். 86,87 காலகட்டத்தில் நான் "குரல்" என்றொரு கையெழுத்துச் சஞ்சிகையினை நடாத்தியிருக் கின்றேன். மான்ரியால் நகரிலும் வேறு சில கையெழுத்துச் சஞ்சிகைகள் வெளிவந்துள்ள தாக அறிகின்றேன். அவை பற்றிய போதிய விபரங்கள் கைவசமில்லாததால் இத்தருணத்தில் விரிவான பதிலினைத் தர முடியவில்லை. இது பற்றிய விரிவான ஆய்வுகள் செய்யப்பட்டு, ஆவணப்படுத்தப்பட வேண்டியது மிகவும் அவசியம் என்று கருதுகின்றேன்.

21. எழுத்தாளர்களில் பலர், எழுதுவது ஒன்றாகவும் அவர்கள் நடந்து கொள்ளும் விதம் நேர் முரணாகவும் உள்ளது. இவர் களை மனதில் வைத்துக் கொண்டு – 'படைப்பாளியைப் பாராதே, படைப்பைப் பார்' என்ற கோசம் பற்றி உங்கள் கருத்து என்ன?

சமூக, அரசியற் செயற்பாடுகளை முன்னெடுக்கும் ஒருவர் எழுதும் படைப்பு களைப் பொறுத்தவரையில் அவர்களது வாழ்க்கை யையும், எழுத்தையும் பிரித்துப் பார்க்க முடியாது. ஆனால் அவர்கள் தாம் செய்த தவறுகளை உணர்ந்து, தம்மைச் சத்தியசோதனை செய்து, அதன் விளைவாக எழுதுபவர்களாக இருப்பின் ஏற்றுக்கொள்ளலாம்.

மானுட வாழ்க்கையென்பது மானுடரின் ஆழ்மன, வெளிமன உணர்வுகளுக்கிடையிலான போராட்டமே. ஆழ்மனத்து உணர்வுகளை எல்லாராலும் அடக்கிச் சாதிக்க முடிவதில்லை. இதனால்தான் பகுத்தறியும் வெளிமனம் தவறென்று கூறும் விடயங்கள் பலவற்றை, ஆழ்மனத் தூண்டுதல்களால் மானுடர்கள் பலர் புரிந்து விடுகின்றார்கள். இந்த நிலை யினை நாம் புரிந்து கொள்ள வேண்டும். சூதாட்டத்துக்குத் தம்மை அடிமையாக்கியவர் எழுத்தாளர் தஸ்தயேவ்ஸ்கி. அதற்காக அவரது நாவல்களின் மகத்துவத்தை நாம் மறக்க முடியுமா?

நான் வாசித்த பல படைப்புகளை அவற்றை எழுதியவர்களின் வாழ்க்கை வரலாற்றை அறிந்தபின் வாசித்தவனல்லன். முதலில் ஒரு படைப்பு கூறும் பொருள், அதன் நடை, பாத்திரப்படைப்பு, கதைப்பின்னல், பாத்திரங் களுக்கிடையிலான உரையாடல், அது கூறும் பொருள் எனப் பலவற்றை உள்ளடக்கியது. கூறும் பொருள் மட்டுமே அப்படைப்பின் வெற்றியை அல்லது தரத்தை நிர்ணயிப்பதில்லை.

இந்த வகையில் பொதுவாக எழுத்தாளர் ஒருவரின் தனிப்பட்ட வாழ்க்கை, அவரது குறை, நிறைகள் அவரது படைப்பொன்றினை வாசிப்பதற்குத் தடையாக இருப்பதில்லை, இருக்கக்கூடாது என்பேன்.

22. புலம்பெயர்ந்த எழுத்தாளர்கள் சுயாதீன மாக எதையும் எழுதக்கூடிய சூழ்நிலையில் இருக்கின்றார்கள். அவர்களது போரியல் இலக்கியம் சார்ந்த படைப்புகள் பற்றி நீங்கள் என்ன சொல்ல வருகின்றீர்கள்?

யாரும் போரியல் சார்ந்த படைப்புகளை எழுதலாம். போரில் ஈடுபட்டவர்கள் மட்டுமே எழுத வேண்டுமென்பதில்லை. ஆனால் போரியல் வாழ்வனுபவம் அற்ற ஒருவர் அவ்விடயத்தில் போதிய ஆய்வுகள் செய்து அவற்றின் அடிப்படையில் எழுத வேண்டிய தேவை உள்ளது. ஆனால் அவ்வனு பவத்தினூடு வந்த ஒருவருக்கு அந்தப் பிரச்சினை இல்லை. மிகவும் இயல்பாக எவ்விதமான சான்றுகளும் தேவைப்படாத நிலையில் அவரால் எழுத முடியும். புலம் பெயர்ந்த எழுத்தாளர்கள் சுயாதீனமாக எதையும் எழுதலாம் என்ற சூழலில் எழுது வதற்கு முடியும் என்பதால், அவர்களது போரியல் இலக்கியம் சார்ந்த அவர்களது படைப்புகளைக் குறைத்து மதிப்பிட முடியாது. எழுதப்படும் படைப்பின் தன்மை மட்டுமே அதன் தரத்தைத் தீர்மானிக்க முடியும்.

அதே சமயம் ஊரில் சுயாதீனமாக எழுத முடியாத சூழலில் வாழும் ஒருவரும் கூடப் போரியல் இலக்கியத்தைப்படைக்க முடியும். உதாரணமாகக் குறியீடுகள் மூலம் அவ்விதமான புனைவுகளைப் படைக்க முடியும். நான் என்ன கூற வருகின்றேனென்றால் மேலோட்டமாகப் பார்த்தால் ஒரு குடும்பத்தின் கதையாகத் தென்படும் கதையானது இன்னுமோர் ஆழ்ந்த அர்த்தத்தில் இன்னுமொரு பொருளினைத்தர முடியும். ஒரு குடும்பம் என்பது ஒரு நாட்டின் அரசின் தவறுகளை விமர்சிப்பதாக அமையும் வகையில் இருக்கலாம்.

இவ்வகையான படைப்புகளில், புகலிடத் தமிழ் எழுத்தாளர்கள் தம் படைப்புகளில், அண்மையில் வெளியான "பார்த்தனீயம்" முக்கியமானதொரு படைப்பு. அதன் பாத்திரப் படைப்புகள் சிலவற்றில் எனக்கு உடன்பாடில்லை என்றாலும், இந்தியப் படைகளின் இலங்கைத்தமிழர்கள் மீதான அடக்குமுறைகளைப் பதிவு செய்தல் என்னும் அடிப்படையில் அது முக்கியமானது. சோபாசக்தி, சயந்தன், குணா கவியழகன் போன்றோரின் படைப்புகளிலும் போரியற் சூழல் விபரிக்கப்பட்டுள்ளது. தம் அனு பவங்களின் அடிப்படையில் அவர்கள் எழுதும் படைப்புகளும் முக்கியத்துவம் வாய்ந்தவை வரலாற்றினைப் பதிவு செய்கின்றன அல்லது ஆவணப்படுத்துகின்றன என்னும் வகையில். குணா கவியழகனின் படைப்புகள் போராட்ட காலத்து அனுபவங்களை, யுத்த முடிவுக்குப்பின்னரான தடுப்பு முகாம் அனுபவங்களை ஆவணப்படுத்துகின்றன.

23. இலக்கிய உலகில் / வாசகர் பரப்பில் கவனம் பெறாத பல புலம்பெயர்ந்த எழுத்தாளர்களின் படைப்புகள் அசுர கதியில் பல மொழிகளில் மொழிமாற்றம் செய்யப்படுவது பற்றி?

தமிழ் இலக்கிய உலகு பல குழுக்களாகப் பிளவுண்ட நிலையில் எழுத்தாளர்கள் தற்போ துள்ள தொழில்நுட்ப வசதிகளின் அடிப் படையில் தம் படைப்புகளை மொழிமாற்றம் செய்து வெளியிடுவது வரவேற்கத்தக்கது. அவற்றில் நல்லவை நிலைக்கும். அல்லவை ஒதுங்கும் அல்லது மறையும்.

24. கனடாவில் பிறந்து வளர்ந்தவர்களின் தமிழ், இலக்கிய முயற்சிகள் எப்படி இருக்கின்றன?

பொதுவாக இங்கு பிறந்த குழந்தைகள் பலர் அதிகமாக ஆங்கிலத்திலேயே எழுதி வருகின்றார்கள். எதிர்காலத்தில் இவையே கனடியத்தமிழ் இலக்கியமாக நிற்கப்போவது யதார்த்தம். இப்பொழுதுதான் எழுதத் தொடங்கி யிருக்கின்றார்கள். இன்னும் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். அதே சமயம் கனடாவில் மட்டுமல்ல ஏனைய நாடுகள் பலவற்றில் வாழும் புகலிடத் தமிழர்களின் குழந்தைகள் பலர் தாம் வாழும் நாடுகளின் மொழிகளில் எழுதத் தொடங்கியிருக்கின்றார்கள். சிலர் கவனத்துக்குள்ளாகிய எழுத்தாளர்களாகவும் வளர்ச்சியடைந்துவருகின்றார்கள். இவ்விதமாக எழுதும் இளையவர்களின் படைப்புகள் பற்றிய ஆய்வுகள் செய்யப்படுவது அவசியம்.

(முற்றும்)

○○○

மண்ணைத் தேடிய மனது

வாணமதி
(சுவிற்சர்லாந்து)

தினமும் ஏதோ ஒன்றை அடைந்து விடுவதென கங்கணம் கட்டிக்கொண்டு விரைகின்ற மனிதர்கள் வாரத்தின் இறுதி நாளை தமக்கு மட்டுமே உரிய நாளாகச் சிறை படுத்திவிடுகின்றனர். பாட்டும் கூத்துமென ஒருசாரார் நேரத்தைச் செலவிட மற்றுமொரு சாரார் உடற்பயிற்சி, நண்பர்கள், சுற்றுலா இப்படி ஏதோ ஒன்றில் தம்மை முழுமையாக ஈடுபடுத்தி மூச்சை சாவகாசமாக எடுத்து விடுகின்றனர். இந்த வாழ்வியலை எந்தக் கட்டமைப்பினுள் நிறுத்துவதென இன்று வரை எனக்குப் புரியவில்லை. ஐரோப்பாவில் மட்டுந்தான் இந்த நிலையென்று சொல்ல முடியாது ஈழத்திலும் இந்த நிலைதான்.

அன்றொரு பொழுது அதிகாலையில் ஐந்துமணிக்கு மக்களின் இயக்கம் கதிரவனுடன் போட்டியிட்டுக் கொண்டே ஆரம்பித்துவிடும். வீட்டுவேலை,தோட்டவேலை,வயல்வேலை, அதனைத் தொடர்ந்து தமது அன்றாட கடமைகளை திட்டமிட்டு உற்சாகமாக செய லாற்றினர். மாலை மயங்கும்போது மக்களின் கடமைகள் ஓய்வடைந்ததும் கோயில் என்றும் நூலகமென்றும் ஊரின் மைய நிலையங் களிலும் ஒன்றுகூடி தம்மை மறந்து ஆயிரம் கதைகளை மனவிட்டுப்பேசி அறிந்தவரையும் தெரிந்தவரையும் உறவாக்கி ஒன்றித்து மகிழ்ந்த நாட்கள் யாருக்கேனும் ஞாபகத்தில் உண்டா?

நோயென்று சொல்லும், மன அழுத்த மென்ற சொல்லும் காதுகளில் கேட்டது குறைவுதானே?

போட்டியும் பொறாமையுமற்ற ஓர் உறவுப்பாலம் ஒவ்வொரு கிராமத்தையும் கட்டிப் போட்டிருந்தது. இதனால் தமது தகுதிக்கேற்ற வருவாயையும், வளத்தையும் வைத்து ஆத்ம திருப்தியுடன் வாழ்ந்த மக்கள் மகிழ்ச்சிகரமான வாழ்க்கையை தக்கவைத்துக் கொண்டனர். ஏட்டிக்குப் போட்டியான மனோநிலையை இவர்களுக்கு கற்றுக் கொடுத்தது எது? போரும் அதனால் ஏற்பட்ட இழப்பும் மக்களை எப்படியெல்லாம் புரட்டிப் போட்டுள்ளது?

இடப்பெயர்வு போலவே நமது மக்களது சின்னச் சின்ன மகிழ்ச்சிகளும், மனநிறைவுகளும் இடம்பெயர்ந்தது என்பது வேதனைக்குரியதே.

சிங்களவன் தமிழனை வெட்ட வருகிறான் என்ற வாக்கியமே அனேக கிராம மக்களின் மந்திரம். அதனைத் தாண்டி ஆழப் புதைந்துள்ள அரசியல் சூட்சுமம் அவர்களுக்கு பல வருடங்களாகத் தெரியவே தெரியாது. ஆனாலும் ஒவ்வொரு கிராமமும் எங்கோ வெட்டிக் கொல்லப்படும் தமிழனுக்காக விடிய விடிய நித்திரை முழித்தது. தமது கிராமத்தைக் காப்பாற்ற இரவிரவாக அரிக்கன் விளக்குடன் ஊர் எல்லையில் காவல் இருந்தனர். ஊரடங்கு வந்தால் பிள்ளைகளுக்கு உணவு வேண்டுமென ஒவ்வொரு வீட்டிலும் ஒரு பிடி அரிசி நாளும் சேகரிக்கப்பட்டது. கார்ல்மார்க்சின் பொதுவுடமையில் மக்கள் வாழ்ந்தார்கள். விதியின் சதியில் விண்ணைத் தாண்டிய போதே விந்தையான மனிதனாக என்னினம் மாறிவிட்டது.

அரக்கபரக்க உண்டு அடுத்தவரை வஞ்சித்து தனக்குத்தனக்கென வாழும் மனிதர் களாக மாறிவிட்டனர்.

வெள்ளைக்காரன் குறிபிட்ட மணிநேரம் உழைத்து தனக்காவும் தனது உள உடல் நலத்துக்காகவும் பார்த்து பார்த்து செலவு செய்து நிம்மதியுடன் தனது ஆயுட்காலத்தை நகர்த்திச் செல்கின்றான். ஆனால் நம்மவர் வாழ்வில் தொழிலாளர் சட்ட விதிகளை எதிர்பார்க்க முடியாது. தூங்கும் நேரம் மூன்று மணிநேரமாக இருக்க வேலைசெய்யும் நேரம் மீதமானதாக உள்ளது. கிடைக்கின்ற விடுமுறைநாளில் நாள் முழுவதும் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் உழைத்த பணத்தை சடங்குமுறைகள், சம்பிரதாயங்கள்

பவளவிழா நாயகர் 'சாஹித்யரத்னா' தெணியான்

வடமராட்சி, வல்வெட்டித்துறை, பொலிகண்டி மண்ணின் மைந்தன் தெணியான் 1942 இல் பிறந்தவர். இந்த ஆண்டு, அவரது பவளவிழா ஆண்டாகும்.

ஆரம்பகாலம் முதல் தான் வரித்துக்கொண்ட மார்க்சியக் கொள்கையை முழுமையாக ஏற்று 53 வருடங்களுக்கு மேலாக ஈழத்து இலக்கிய உலகில் காலூன்றி நிற்பவர் தெணியான். இவரது எழுத்துக்கள் சாதியம், வர்க்கபேதம், பெரும்பான்மை மேலாதிக்கம், இன சம்ஹாரம் போன்றவற்றிற்கு எதிராகக் குரல் கொடுப்பவை. சிறுகதைகள், நாவல்கள், குறுநாவல்கள், வானொலி நாடகங்கள், கட்டுரைகள், நூல் விமர்சனங்கள் என ஏராளமாக எழுதிக் குவித்தவர், இவர்.

தமிழ் கவிஞர் வட்டம், சுமங்களாவுடன் இணைந்த தேசிய கலை இலக்கியப் பேரவை, இலங்கை சாஹித்திய மண்டலம், வடகிழக்கு மாகாண கலாச்சார திணைக்களம், இலங்கை சாஹித்திய இலக்கியப் பேரவை, கொடகே தேசிய விருது, தமிழ்நாடு சின்னப்பபாரதி விருது, நாவேந்தன் விருது, இலங்கை கலாசாரப் பேரவையின் கலாபூஷணம் விருது, இலங்கை அரசின் அதியுயர் இலக்கிய விருதான சாஹித்யரத்னா விருது ஆகியவற்றை தனது இலக்கியப் படைப்புகளுக்காகப் பெற்றவர் இவர்.

ஈழத்து இலக்கிய வரலாற்றில் நூறு இதழ்களைத் தாண்டி சாதனை படைத்த சிற்றிதழ்களில் ஒன்றான 'ஜீவநதி'யின் ஆலோசகர்களில் ஒருவராகவும் இவர் திகழ்கிறார்.

ஞானம் சஞ்சிகை ஆரம்பித்து மூன்றாவது இதழிலேயே வாசகர் கடிதம் எழுதி, ஞானம் சஞ்சிகையின் வளர்ச்சிக்கு ஊக்கமளித்தது முதல் இற்றைவரை ஞானம் சஞ்சிகையுடன் நெருக்கமான உறவினைப் பேணி வருபவர் தெணியான். ஞானம் சஞ்சிகை தனது 61ஆவது இதழில் அட்டைப்பட அதிதியாக அவரைக் கௌரவித்து மகிழ்ந்தது. ஞானம் சஞ்சிகையில் தெணியான் எழுதிய சிறுகதைகளில் ஒன்றான "உயர்மானம்" என்ற சிறுகதை பெரும்பாராட்டைப் பெற்று புலம்பெயர் நாடுகளிலும் மீள்வாசிப்பும் மீள்பிரசுரமும் கண்ட சிறப்பினைப் பெற்றது. இவர் தனது சிறுபராய அனுபவங்களை "இன்னும் சொல்லாதவை" என்ற மகுடத்தில் தொடராக ஞானம் சஞ்சிகையில் எழுதியபோது அது பெரும் வரவேற்பினைப் பெற்றது. தெணியான், பரிசுகள் விருதுகள் பெற்றபோதெல்லாம் ஞானம் சஞ்சிகை அவரைப் பாராட்டி மகிழ்ந்தது.

தெணியான் பவளவிழாக்காணும் இவ்வேளையில் அவரைப் பாராட்டி வாழ்த்தி மகிழ்வதில் ஞானம் பெருமையடைகிறது.

எனக்கூறி கணக்கு வழக்கற்ற உணவுகளைச் சமைத்தும், பல தொகைக்கு மண்டபங்களை வாடகைக்கு எடுத்தும் ஆடம்பர உடைகளை ஓர் நாள் விழாக்களுக்காக வாங்கியுடுத்து ஒரு நாளை வீணாக்கி விடுவதுடன் ஓய்வு நேரத்தை பயனுள்ளதாகக் கழித்ததாக அடையாளப்படுத்த முனைகின்றனர். இதன் மூலம் மனவுளைச்சலே அதிகமாகிறதே தவிர உளத்துக்கும், உடலுக்குமான ஓய்வு கிடைக்க வில்லை. இழந்தவைகள் எத்தனையோ எம் ஆழ்மனதில் அழுத்தமாக இருத்தாலும் ஆடம்பர வாழ்வியலும், அடுத்தவரைப் போல வாழவேண்டுமென்ற ஆசையும் பூசிமெழுகி நம்மை நெஞ்சுக்கு நிம்மதியாகவே காட்டு கிறதே தவிர வாழ்க்கையின் அர்த்தம்தனை உணர்த்தியதாக இல்லை.

புலம்பெயர் நாட்டில் நாம் வந்ததன் நோக்கம் உயிரைத் தக்கவைத்தல் என்பதே...

இன்று உயிரை விட விஞ்சியதாக உடமைகள் நோக்கப்படுகின்றன.ஒற்றுமையற்ற ஓர் இனமாக ஒளிந்து ஒளிந்து ஓடுகின்றோம் பணம் தேடுவதற்காக.தேடியதை திட்டமிட்டு செலவு செய்து வாழத்தெரியாது தமது உறவுகளுக்கு வாரிவழங்கி தம்மை புலம்பெயர் செல்வந்தர்களாக அடையாளப்படுத்திவிட்டு அகாலமரணத்தில் முற்றுப்புள்ளி வைத்து ஓய்வடைகின்றனர் ஓசையின்றி.

உறவுகளே ஊரும், உணர்வும் உங்களோடு ஒன்றித்த வலிகள். அந்த வலிகளிலும் சிரித்த காலங்களை நினைத்துப்பாருங்கள். மீண்டு மொருமுறை பயிற்சியோடு முனைந்தாலும் இயல்பான மனசோடு சார்ந்த சிரிப்பை நிலைக்கண்ணாடி காட்டாது.

○○○

கணவனுக்கினிய பெண்

(மொழிபெயர்ப்புக் கவிதை)

தமிழில் : சோ.ப

பிரித்தானிய சாம்ராஜ்யத்திற்போல்
இந்த வீட்டில்
சூரியன் அஸ்தமிப்பதில்லை
அது பற்றி எரிகிறது
தீய்க்கின்றது
எஜமான் இல்லாதபோதும்
அவர் விட்டுச்சென்ற
நகங்களின் இலச்சினையில்
துவாயில், ஊன்றுகோலில்
முத்திரை பொறித்த தாள்களில்
சப்பாத்தில், செருப்பில்
போதை ஏறியவிக்கலில், ஏப்பத்தில், குறட்டையில்
முகக்கோணலில்
வெருட்டில், திட்டுதலில்
அவர் இன்னும் இருக்கிறார்

மூர்க்கமான கர்ச்சனையுடன் அவர் வீட்டில் நுழைந்தார்
முதற்சுற்றில் அவள் செத்தவள் போல் கிடந்தாள்
செத்துப்போன ஒருவன் மீது கரடி பாயாது என்று
ரஷ்ய நாட்டார் கதையில் கிடந்த மனிதனைப் போல்

ஒரு முறையாரோ அவளுக்குச் சொன்னார்கள்
"கோழைகள் ஆயிரம் முறை சாவார்கள்
வீரர்கள் ஒருமுறைதான் இறப்பர்"
ஒரு பிழையும் செய்யாத நீ
ஏன் செத்தவள் போல் நடிக்க வேண்டும்?

அதன்பின். ஒவ்வொருநாளும் 'சாக' அவள் வெட்கப்பட்டாள்
ஒவ்வொருநாளும் சிறிதுநேரம் தயங்கி நின்றாள்
பிறகு முடிவெடுத்தாள்
செத்தவள் போல் மீண்டும் நடிக்க என

நான் ஒரு பறவையாக வேண்டுமெனில்
ஏன் தீக்கோழியாக வேண்டும்?
யாராவது என்னை முகர்ந்து நாக்கைப் பிடிக்கவேண்டுமெனில்
ஏன் நான் பாம்பாகவேண்டும?

பிறகு யாரோ காந்தியை வாசிக்கும்படி சொன்னார்கள்
இப்பொழுது, அடித்து நொறுக்கப்பட்ட போது
சாகும்வரை உண்ணாவிரதமிருந்தாள்
ஆனால். ஐந்தாம் நாள் மாலை
யாராவது தன்னைக் கவனிப்பார்கள் என்று
எதிர்பார்த்து ஏமாந்தாள்

ஒருநாள். சுற்றும் தலையைக் கைகளில் ஏந்தியபடி
தட்டுத்தடுமாறி அடுக்களையுள் போனாள்
ஊசிப்போன ஒரு சப்பாத்தியை மெல்ல இழுத்தாள்
தன் கண்ணீரின் உப்பால் அதை ஈரப்படுத்தினாள்
எனவேநண்பர்களே
கலியுகத்தில் கற்புள்ளபெண்களின் வாழ்க்கை
இப்படித்தான் இருந்தது
கதைதொடர்கிறது
கடைசிப் பகுதியை 'சதி'யே சொல்கிறாள்

எனக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை
கோபப்பட என்னால் முடியவில்லை
கல்பதிக்கப்படாத மண் வீதியில்
கடும் மழைபெய்தபின்
மண் எப்படிக் குழையுமோ
அப்படி இளகிவிடுகிறது
அவருக்கு வேலை அதிகம்
அவருக்கு உடல்நலமும் இல்லை
கூச்சலிட. ஏச
ஏன் என்னை அடித்துத் துவைக்க
உடலில் வலுவில்லை

ஈற்றில் நானும் வசக்கப்பட்டுவிட்டேன்
இப்பொழுது அவருக்குச் சுகமில்லை
ஒருநோயாளியுடன் சண்டைபிடிப்பானேன்?
மன்னிக்கும் பண்பை வளர்த்துக் கொண்டேன்
இப்பொழுது, அவருடைய குறட்டை ஒலியும்
இனிதாய் உள்ளது
உற்றுக் கேட்கிறேன்
கனவு காண்கையில் கூப்பிடுகிறாரா என்று!
அவரால் சொல்ல இயலாதிருக்கலாம்
ஏதோ ஒரு ரகசியம்
அவர் தொண்டைக்குழிக்குள் தட்டுப்படக்கூடும்
நான் கேட்க ஆசைப்பட்ட ஏதோ ஒன்று
என் வாழ்வின் திசையை மாற்றக்கூடிய ஒன்று
பிறகு
இந்தப் பாலைவனத்தில் அடைமழை பொழியும்!

ஹிந்தி: அநாமிகா

ஆங்கிலவடிவம் : ஆர்லீன் சைத்

அமரர் செம்பியன் செல்வன் நினைவாக நடத்தும் சிறுகதைப் போட்டி -2016

இரண்டாவது பரிசு பெற்ற சிறுகதை

2

உ.நிசார்

இனம்

சிறுவன் ஆதில் தனது குஞ்சு வீட்டுக்கள் என்ன செய்வதென்று அறியாதுபோல் அமர்ந்திருந்தான். சற்று முன் தனது வயதையொத்த ஆக்கிலும் அம்ராவும் தன்னை விட்டுப் பிரிந்து சென்ற கவலையே அதற்குக் காரணமாக இருந்திருக்க வேண்டும். தனக்கும் அவர்களுக்கும் இடையே ஏற்பட்ட சிறு முரண்பாடு பெரியதொரு தகராறுக்கு வழி சமைத்ததைப் பற்றிச் சிந்திக்கும் நிலையில் அவன் இருக்கவில்லை. எனினும் அவனது பாட்டனாரான கையூம் ஹாஜியாரை அது வெகுவாகச் சிந்திக்க வைத்துவிட்டது. வெளி விறாந்தையில் போடப்பட்டிருந்த ஒரு கதிரையில் அமர்ந்தவாறு எதிர் வீட்டில் குடியிருக்கும் கலாம் சற்று முன் சொன்னவைகள் எல்லாவற்றையும் ஒவ்வொன்றாக எடுத்து அவர் அலசி ஆராய்ந்து கொண்டிருந்தார்.

"மாமா, இனியும் எங்களால பொருக்க ஏலா, நீங்களும்தான் ஒங்கட இனசனம்களும் தான் இந்த ஊருக்கு வந்து குடியீந்த நாளுல ஈந்து எங்களுக்குப் பிரச்சினைகளைத் தந்து கொண்டே ஈக்குறீங்க. நீங்கள் எல்லாரும் இந்த ஊருக்கு வந்தான் வரத்தானுகள். அப்பிடி ஈக்க, வந்த எடத்துல வந்தோமா, வாழ்ந்தோமா எண்டு செல்லி ஈக்காம என்ன மாமா இதெல்லாம்?

"நீங்க எல்லாரும் இங்க வந்து எங்கட காணி பூமிகள் அபகரிச்சிக் கொண்டீங்க. எங்கட மாப்புளமார எடுத்துக் கொண்டீங்க. யாவாரம் தொழில் பரிச்சிக் கொண்டீங்க".

அப்போது பேரன் ஆதில் தனது குஞ்சு வீட்டுக்குள் இருந்து வெளியே வந்து அடிக்கடி கேட்டருகே செல்வதையும் பாதையை நோட்டமிடுவதையும் காண கையூம் ஹாஜியாருக்குக் கவலையாக இருந்தது. சற்று முன் தனக்கும் தனது இனசனங்களுக்கும் எதிராக கலாம் கொட்டித் தீர்த்ததை நினைத்துப் பார்த்தார். .

"எங்கட புள்ளகளுட படிப்பயும் ஆக்கிரமிச்சிட்டீங்க. ஸ்கோலசிப் பரீட்சயில எங்கட புள்ளகளுக்கு கெடச்ச வேண்டிய எடங்கள் ஒங்கட புள்ளகளுக்கு கெடச்சிக் கொண்டு போகுது. கெம்பஸ் அனுமதியிலயும் எங்கட புள்ளகள மீறி ஒங்கட புள்ளகள்தான் முன்னுக்கு வாராங்க. அரசாங்கத் தொழில் வாய்ப்புகளிலும் எங்கள விட ஒங்களுக்குத்தான் முன்னுரிம கெடச்சுது."

“எப்பவோ ஒரு நாள் அந்த இயக்கத்துக்குப் பயந்து ராவோடு ராவா கையில கெடச்சத்த சுருட்டிக் கொண்டு இங்க வந்ததாகச் செல்லுரீங்க. இதெல்லாம் ஒரு கதயா? ஒங்கள அங்கேந்து அனுப்பி வச்ச அந்த இயக்கத்த எதிர்த்துப் பேச, இல்ல அவங்களுக்கு ஒங்கட நியாயத்த எடுத்துச் செல்ல, ஒங்களுக்குள்ள ஒரு தலைவர் ஈக்க இல்லயா? ஒரு மத்திஷம் ஈக்க இல்லயா? குறைஞ்சது ஒரு ஆம்புள ஈக்க இல்லயா?”

“சரி, அந்த இயக்கத்தச் சேந்தவங்ள விடுங்கோ, ஒங்களோட ஒட்டி உறவாடி அடுத்த ஊட்டுக்காரரு, ஊரு மனிஷரு, நீதி நியாயம் தெரிஞ்சவங்க யாருமெ அந்த இயக்கத்துட சடுதியான தீர்மானத்த எதிர்த்து, ஒங்களுக்கு ஆதரவாய் பேச முன்வர இல்லயா? நீங்கள் எல்லாதாரும் எங்களோட பழகுற மாதிரிதான் அந்த ஜனங்களோடயும நடந்து கொண்டிருப்பீங்க. அவங்கட ஒரு நாய் குட்டியாவது ஒங்களுக்குப் பின்னால வாலை ஆட்ட வராதத்துக்குக் காரணம் அது வாகத்தான் ஈந்திருக்க வேணும்.”

“யுத்தம் முடிஞ்சி பெய்த்திட்டுது, பிரச்சினகளும் படிப்படியாகத் தீந்து கொண்டு வருது. இனி இப்பவாவது ஒங்களுக்கு, ஒங்கட ஊர் தேஷங்களுக்குப் போய் சேரலாம்தானே. என்னத்துக்கு இன்னும் இந்த ஊரக் கட்டிக் காக்க வேணும்?”

கோப்பையொன்று இருந்தது. அவள் தான் கொண்டு வந்தவற்றை கையும் ஹாஜியாருக்கு முன்னால இருந்த மேசை மீது வைத்து விட்டு அவருக்குப் பக்கத்தில் இருந்த கதிரையில் அமர்ந்து கொண்டாள்.

ஆத்திபா, சிறுவனைத் தூக்கித் தனது தோளில் போட்டவாறு உள்ளே செல்ல, கையும் ஹாஜியார் பலகாரம் ஒன்றை எடுத்துச் சாப்பிட்டு விட்டுத் தேநீரைக் குடிக்க ஆரம்பித்தார்.

சிறிது நேரத்தில் ஆத்திபா வெற்றிலைத் தட்டுடன் மீண்டும் அங்கே வந்து கையும் ஹாஜியாருக்குப் பக்கத்தில் இருந்த கதிரையில் அமர்ந்து கொண்டாள். அதன் பிறகு அவள் வெற்றிலைத் தட்டில் இருந்த பாக்கொன்றைத் தேர்ந்தெடுத்து அதைச் சீவிய வண்ணம் தனது பேச்சைத் தொடர்ந்தாள்.

“நாங்கள் என்ன பிரச்சினையைக் கொடுத்தோம் அவர்களுக்கு சின்னப் பிள்ளைச் சண்டையொன்றை வைத்துக் கொண்டு அவர்கள்தான் எங்களுடன் பிரச்சினைப்படுகிறார்கள். நாங்களும் இந்த மண்ணுக்கு வந்து இருபத்தைந்து வருஷங் களைக் கட்டித்திட்டோம். இவர்கள் இன்னும் எங்களைப் பார்த்து வந்தான் வருத்தான் என்று சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள். ரசூல் நாயகம் கூட மக்காவுல இருந்து மதீனாவுக்குப் புலம் பெயர்ந்து போனவர்தான். அவர்களை அன்று மதீனத்து மக்கள் அன்பாதரவா வரவேற்று அனுசரித்து ஆதரித்து நடந்து கொண்டனாலதான் ஒரு மதம், ஒரு கலாச்சாரம், ஒரு பண்பாடு, ஒரு நாகரீகம் உலகத்து உருவாகிச்சிது. இன்று கூட அங்கு வாழுற மக்கள் அதைப் பற்றிப் பெருமை கொள்கிறார்கள். ரசூல் நாயகத்தைப் பின்பற்றி அவர்களுடைய வாழ்க்கை முறைப்படி நாங்களும்தான் அவர்களும்தான் இந்த நாட்டுல வாழ்ந்து கொண்டு இருக்கிறோம். இஸ்லாமியர்கள் எல்லோரும் சகோதரர்கள் என்று நாங்களும்தான் அவர்களும்தான் அறிந்து வைத்திருக்கின்றோம். அப்படி இருக்க அவர்கள் எங்களைப் பார்த்து ஏன் வந்தான் வருத்தான் என்று சொல்லிக் கொண்டு நிற்க வேணும்?

“நாங்கள் இந்த மண்ணுக்கு அகதிகளாக வந்தாலும் ஏதோ வசதி வாய்ப்பு இருந்தவர்கள். இங்கிருந்த காணி, பூமிகளை காசு கொடுத்து வாங்கியது உண்மைதான். அந்தக் காணி, பூமிகளை கொள்வனவு செய்ய அவற்றின் பெறுமதியை விடவும் அதிகமாகப் பணத்தை நாங்கள் கொடுத்திருக்கின்றோம். அவர்களின் மாப்பிள்ளைகளையும் நாங்கள் எடுத்துக் கொண்டதாக எங்களைக் குற்றம் சாட்டுகிறார்கள். அவர்களும் எங்களுடைய மாப்பிள்ளைமார்களை எடுத்துக்கொண்டு தானே இருக்கிறார்கள். ஆனால் அதன் மூலம் புதிய சந்ததியொன்றை உருவாகியிருப்பதை மறந்து பேசுறாங்க. அவர்களுடைய வியாபாரங்களைக் கைப்பற்றியதாகவும் ஒரு குற்றச்சாட்டை வைக்கிறார்கள். இதென்ன கதை இது? வியாபாரக் கொடுக்கல் வாங்கல்கள் நடக்கிற நேரங்களில் எங்களைப்

போல அவர்களும் எத்தனையோ நன்மைகளை அடைந்துதானே இருப்பார்கள்."

"நாங்கள் இங்கே வரப் போனதனால்தான் ஸ்கோலர்சிப் பரீட்சையிலும் கெம்பஸ் அனுமதியிலும் ஒரு போட்டி உருவாகி இந்தப் பிரதேசத்தில் கல்வித் தரம் அதிகரித்திருப்பதை இவர்கள் மறந்திட்டார்கள். அதுமட்டுமல்ல அங்கிருந்து புலம் பெயர்ந்து வந்த ஆசிரியர்கள் இந்தப் பிரதேசத்தின் கல்வித் தரத்தை மேம்படுத்த படுகின்ற உழைப்பையும் அவர்கள் மறந்திட்டார்கள்."

"இவர்கள் கேட்கும் கேள்விகள் சரிதான். ஆனால் அன்று இரவு நாங்கள் பட்ட அவதி எங்களுக்கு மட்டும்தான் தெரியும். இருபத்தாறு மணி நேரத்துக்குள்ள இங்கிருந்து போ என்று அவர்கள் சொல்ல நாங்கள் யாரிடம் போவோம்? யாரிடம்தான் நியாயம் கேட்போம். எங்கட காணி, பூமி, கட்டிய வீடு வாசல், நட்ட மரம், கொண்ட சொத்து சுகம், உழைத்த உழைப்பு, சிந்திய வியர்வை இவையெல்லாவற்றையும் இழந்துதான் நாங்கள் எங்களுடைய உயிர்களைக் கூட பணயமாக வைத்துக் கொண்டுதான் இங்கு வந்து சேர்ந்தோம். பெண்களும், குழந்தை களும், கர்ப்பிணித் தாய்மாரும், உடல் தளர்ந்தவர்களும், வயோதிபர்களும் என்ன சிரமப்பட்டிருப்பார்கள், காடு மேடுகளைக் கடந்து, கடல் வழியாக வந்த அந்தப் பயணம் இன்று கூட எங்களுக்கு கடும் வேதனையைத் தந்து கொண்டிருக்கிறது. அது இவர்களுக்கு எங்கே விளங்கப் போகுது? தலைவலியும் தனக்கு வந்தால்தானே தெரியும்."

"ஒரு விஷயம் நடந்து முடிந்ததற்குப் பிறகு பலரும் பலவிதமான கேள்விகளைக் கேட்பார்கள்தான். ஆனால் அன்று இருந்த சூழ்நிலை, அவர்களுக்கு எங்கே விளங்கப் போகுது? இன்றுகூட என்ன நடக்குது? காலத்துக்குக் காலம் எதேதோ இயக்கங் கள் அவர்களுடைய நன்மைக்காக வேண்டி மக்களை ஒன்று கூட்டுகிறார்கள். ஊர் வலம் போகிறார்கள். ஆர்ப்பாட்டம் செய் கிறார்கள். கூட்டம் வைக்கிறார்கள். நூல் களை வெளியிடுகிறார்கள். ஆனால் அவை எதுவுமே கைகூடவில்லை. அதற்குப்பதிலாக அடிபட்டதும் உதைபட்டதும் பயமுறுத்தப் பட்டதும்தான் எங்களுக்கு பரிசாகக் கிடைத்தது. வந்து போன அரசாங்கங்களும் எங்க ளுடைய தலைவர்களைப் பகடைகளாக்கி விளையாடியதைத்தான் நாங்க கண்டோம்"

"நாங்கள் யாழ்ப்பாணத்திலிருந்து வரும் போது அகதிகளாகத்தான் இந்த ஊர்களுக்கு வந்து சேர்ந்தோம். கொழும்பு, கண்டி, புத்தளம், நீர்கொழும்பு, மாவனல்லை என்று எத்தனையோ இடங்களில் குடியமர்ந்தோம். பனங்குலை ஒன்று நிலத்தில விழுந்து காய்கள் சிதறிப் போனது போல நாங்களும் அங்கும், இங்கும் சிதறுண்டு போனோம். அந்தப் பனங்குலையை திரும்ப பழைய நிலைக்கே கொண்டு வர யாராலதான் முடியும்? அதற்கும் காரணங்கள் இருக்கு. நாங்கள் வந்த வந்த இடங்களில் எங்களுடைய பிள்ளைகளுக்கு கலியாணம் காப்புகளைச் செய்து வைத்திட்டோம். அதன் மூலமாக இங்கே எங்களுடைய சந்ததிகள் பெருகிட்டது. அது மட்டுமல்ல நாங்கள் இந்தப் பகுதியில் காணி பூமி வாங்கிட்டோம். வியாபாரங்களில் நிலையாகிட்டோம். தொழில் வாய்ப்புக்களைப் பெற்றிட்டோம். இவை யெல்லாவற்றையும் துறந்து நாங்கள் எங்களடைய பூர்வீக மண்ணுக்குத் திரும்பவும் போவது

வெந்து தணிந்த காட்டிடை

உணரப்படமுடியாத வலிகளால்
வடிகட்டப்பட்ட சமூகத்தின்
மரத்துப்போன மடியிலிருந்து
தளிர்க்க முனைகிறது
ஒரு புதியசமூகம்

மண்ணுக்கடியில் வேரூன்றத்தோடும்
துரோகத்தின் சாக்கடை நீரோட்டத்தில்
சற்றேகருகிப் போகின்றன
ஆதாரமான ஆணிவேர்கள்

சபிக்கப்பட்ட சருகுகளாய்
திசையின்றிச் சுழலும் காற்றில்
புலனடக்கிப் புழுதியில் வீழ்கிறது
புத்தி ஜீவிகளின் புகார்கள்

முடிவெழுதப்பட்ட முகவுரைகளின் வழி
ஒருசாண் வயிற்றிற்கு
ஆயுட் காலத்தை விலைபேசி
பயணிக்கிறது பாமரன் பாதங்கள்

வெந்துதணிந்த காட்டிடை
வேர்விடுமோ தீர்வென்ற
தீராத தாகத்தீயில்
தீந்துபோகிறது மீதி நாட்கள்

அ.அலந்தன் - சுந்தர்மடம்

சிரமம். இதெல்லாவற்றையும் இங்கே இருப்பவர்களுக்கு விளங்க இல்ல."

"திலகம்பால் அம்மையார் இப்ப கொஞ்ச நேரத்துக்கு முதல்ல என்னோட போன்ல கதச்சா. அவங்க குடும்பத்துல எல்லாரும் போல நுவரெலியாவுக்கு போய் கொண்டிருக்கிற வழியில எங்களையும் கண்டு சுகநலம் விசாரித்துவிட்டுப் போகவர இருக்கிறாங்களாம்."

"என்ன அவங்க எல்லாரும் எங்கட வீட்டுக்கு வரப் போறாங்களாமா? நாங்கள் யாழ்ப்பாணத்தில இருந்து வரும்போது ஐயரும் திலகம்பாலும் எங்கள மிச்சம். உருக்கமா வழியனுப்பி வச்சவங்க அப்ப ரமேஸ், விக்ரம், உமா எல்லாரும் சின்னப் பிள்ளைகள். எங்கட பிள்ளைகளுட வயதிலேயேதான் அந்தப் பிள்ளைகளும் இருந்தாங்க. இனி அவங்க எல்லாரும் சுகமா இருக்கிறாங்கலாமா?"

"ராமேஷும், விக்ரமும் ஜேர்மனிக்குப் போய் நல்லா காசு பணம் சம்பாதிச்சிக் கொண்டு விடுமுறையொன்றுக்கு இப்போ இங்க வந்து இருக்கிறாங்களாம். ரமேஸ் தமிழ் பிள்ளையொன்றைக் கலியாணம் கட்டியிருக்கிறானாம். விகரம் ஜேர்மன் பிள்ளையொன்றைக் கலியாணம் கட்டி யிருக்கிறானாம். ஐயரும் திலகாம்பாலும் பாட்டன், பாட்டியும் ஆகிட்டாங்களாம்."

"பாவம் உமா இளம் வயசிலேயே விதவ யாகிட்டாள். யுத்தம் யாருக்குத்தான் நன்மை செய்யும், அது சரி, ஆத்திபா அவங்க எப்படி எங்கட வீட்டக் கண்டு பிடித்து இங்க வருவாங்க?"

"ஐநியா எங்கட வீடு இருக்கிற இடத்த ரமேஸுக்கு விபரமாகச் சொல்லி வைத்தாள். அவன் அதைச் சரி கண்டு நாங்கள் அதுக்கா சிரமப்படத் தேவையில்லை என்று சொல்லி இருக்கிறான். இன்னும் கொஞ்ச நேரத்துல அவங்க இங்க வந்திடுவாங்க என்று நான் நெனைக்கிறேன்"

ஆத்திபா தான் சீவிக் கொண்டிருந்த பாக்கை இரண்டாக வெட்டி அரியத் தொடங்கினாள்.

"ஆத்திபா நாங்கள் எவ்வளவு காலத்துக்கு பொறகு அவங்களைக் காணப் போகிறோம்."

"உமா, இப்போ எங்கட வீட்டுலதானாம் குடியிருக்கிறதா, அவளுக்கு ஒரு பொடியன். ஒரு பெட்ட என்று ரெண்டு பிள்ளைகள் இருக்கிறாங்களாம். எங்கட ஆட்சேபன இல்லா விட்டால் அந்த வீட்டுட பெறுமதி எங்களுக்குத் தந்து போட்டு உமாவுக்கு அதை வேண்டிக் கொடுக்க அண்ணன்மார் ரெண்டுபேருக்கும் விருப்பம் இருப்பதாக திலகாம்பால்ட பேச்சில் இருந்து எனக்கு விளங்கிச்சிது.

"ஆத்தி அதுவும் நல்லதுதான். நாங்கள்

எங்க இனி யாழ்ப்பாணத்துக்கு போகப் போறோம். எங்கட மறுமக்கள் எல்லாரும் இந்தப் பகுதியச் சேர்ந்தவங்க. அவங்க யாழ்ப்பாணத்துக்கு போய் குடிபதியாவதற்கு விருப்பப்படுவாங்களா?"

"ஆத்திபா, தான் அரிந்த பாக்கை எடுத்து இரண்டு வெற்றிலைச் சுருள்களைச் செய்து அவற்றுள் ஒன்றை கையும் ஹாஜியாரிடம் கொடுத்து விட்டு அடுத்ததை தனது வாயுக்குள் திணித்துக் கொண்டாள்.

"யாழ்ப்பாணத்துல இருக்கிற எங்கட வீட்ட அவங்களுக்குக் கொடுக்க நீங்கள் என்ன விருப்பப்படுரீங்களா?"

"ஆத்திபா, எங்களுக்குப் பொறந்த புள்ளகள் அஞ்சு பேரும் பொம்புளப் புள்ளகளாகவே பொறந்துட்டாங்க. அவங்க அழகு வடிவா இருந்தாலயும் வீடு வளவு நக நட்டு காசு பணம் சீதனம் என்று இந்தப் பகுதி மாப்புளமார் பெரிதா எதிர்பார்க்காதத்திலயும் மூத்த நாலு பேரும் சேர்ந்திட்டாங்க. அவங்க நாலு பேரும் புள்ளகுட்டிகள பெத்து சந்தோஷமா வாழுறாங்க. ஆனா. ஐநியாவுக் குத்தான் நல்ல ஒரு எடம் வந்து வாய்க்க இல்ல. அவளுக்கும் இப்போ வயது முப்பது ஆகிட்டது. அவளைக் கரை சேர்க்க தேவை யான காசு பணமும் எங்களிட்ட இல்ல. அதனால நீ விருப்பம் எண்டால் மட்டும் யாழ்ப்பாணத்து இருக்கிற எங்கட வீட்ட ஐயருக்குக் கொடுத்துப் போட்டு அந்தக் காசு எடுத்து ஐநியாவுட கலியாணத்தச் செறப்பாச் செஞ்சி போடுவோம்."

"நான் விருப்பம் தான். நீங்கள் நெனக்கிற மாதிரியே செய்து போடுவோம். தாய் தகப்பன் ஹயாத்தோட இருக்கக்குள்ளதான் புள்ளகளும் கலியாணம் காப்புகள் நடந்தேற வேணும். அப்பதான் அவங்கட சக்கராத்து நேரத்துல சந்தோஷமாக கண்ண மூடிக் கொள்ள முடியுமாக இருக்கும்.

அப்போது அவர்களது வீட்டுக்கு முன்னால் ஆடம்பர ஜீப் வண்டியொன்று வந்து நின்றது. சற்று நேரத்தில அங்கிருந்த சிலர் அதிலிருந்து இறங்கிக் கொண்டனர். அவர்கள் ஐயர் வீட்டுக் குடும்பம்தான் என்பதை விளங்கிக் கொண்ட ஆத்திபா உடனே பாதைவரை ஓடிவந்தாள். அதைத் தொடர்ந்து கையும் ஹாஜியாரும் வந்தார். வீட்டின் கதவோரமாக ஐநியா, நின்று கொண்டு அங்கு வந்திருப்பவர்களை எட்டிப் பார்த்தாள்.

கையும் ஹாஜியாரும் ஆத்திபாவும் வந்திருப்பவர்களை மிகவும் அன்பாதரவாக வரவேற்று வீட்டுக்குள் அழைத்து வந்தனர். நீண்ட காலத்துக்குப் பிறகு இவ்வாறு சந்திக்கக் கிடைத்ததையிட்டு இரு குடும்பத் தவர்களுக்கும் மிக்க மகிழ்ச்சியாக இருந்தது.

ஐயர், திலகாம்பாள், விக்ரம், ரமேஸ் அவர்களது மனைவிமார், உமா, ஐயரின் பேரக் குழந்தைகள் என எல்லோரும் அங்கு வந்திருந்தனர்.

சுகநலம் விசாரித்து இரு குடும்பங் களினதும் இன்றைய நிலைகளைக் கேட்டறிந்து, யுத்த அவலங்களை நினைவு கூர்ந்து, ஊர் புதினங்களைக் கதைத்து முடிய தேநீர் விருந்துபசாரம் நடைபெற்றது. அதன் பிறகு திலகாம்பால், கையும் ஹாஜியாரின் குடும்பத்தவர்களுக்குத் தான் கொண்டு வந்திருந்த பரிசுப் பொருட்களைக் கொடுக்க ஆரம்பித்தாள். அவற்றுள் உணவுப் பண்டங்கள், பழவர்க்கங்கள், உடைகள், சிறுவர்களுக்கு விளையாட்டுப் பொருட்கள் என்பன இருந்தன. அது மட்டுமல்ல ஐநியாவின் பாழடைந்த கழுத்தையும், கைகளையும் கண்ணுற்ற திலகாம்பாள் தனது கழுத்தில் இருந்து மாலைகளில் ஒன்றையும் கைகளில் இருந்த வளையல்கள் இரண்டையும் எடுத்து அவற்றை அணிவித்து மகிழ்ந்தார். அதன் பிறகு ஐயரும் திலகாம்பாலும் கையும் ஹாஜியாரையும் ஆத்திபாவையும் ஒரு புறமாக அழைத்து வந்தனர்.

"கையும், நான் உங்கட பேச்சில் இருந்து நீங்களோ உங்கட பிள்ளைகளோ, யாழ்ப்பாணத்துக்கு மீண்டும் வரமாட்டீங்கள் என்பதே நாங்கள் விளங்கிக் கொண்டோம். அதனால அங்கே இருக்கிற உங்கட வீட்டை உமாவுக்குக் கொடுத்து விடுங்கோ. நீங்கள் அதுக்காக என்ன விலை கேக்குறீங்களோ அதை தருவதற்கு விக்ரமும், ரமேஸும் தயாராய் நிக்கிறாங்க."

"எங்களால இனியும் யாழப்பாணத்துக்கு வர முடியாத காரணத்தை நான் உங்களிடம் சொல்லி விட்டேன். அதனால அங்கே

இருக்கிற எங்களின் வீட்டை உங்களுக்குக் கொடுப்பதில் எனக்கோ, ஆத்திபாவுக்கோ எங்கட பிள்ளைகளுக்கோ எந்த ஆட் சேபனையும் இல்ல. நாங்களும்தான், நீங்களும் தான், எங்கட முன்னோர்களும்தான் ஒரே குடும்பத்துச் சகோதரர்களைப் போல ஆண்டாண்டு காலம் எங்களுக்கு இருந்த நட்ப நாங்க நல்லா விளங்கி வைத்திருக்கிறோம். அதனால அந்த வீட்டுக்கு ஒரு விலை சொல்ல என்னால முடியாது."

அப்போது திலகாம்பால் ஒரு சைகையைச் செய்ய ரமேஸ் அவ்விடத்துக்கு வந்து சேர்ந்தான். "அங்கிள் நீங்கள் சொன்ன தெல்லாவற்றையும் எங்களுக்குள் இருக்கும் அந்த நட்பு இந்தக் கொடுக்கல், வாங்கலுக்கு குறுக்கே இருக்கக் கூடாது. நீங்களும் ஐந்து பெண் பிள்ளைகளுடைய ஒரு தகப்பன். ஐநியதாவுக்கு இன்னும் திருமணம் நடக்கவும் இல்ல. அதற்காக உங்களுக்கு காசு பணம் தேவை. நீங்களும் சந்தோஷமா கழிக்க வேண்டும். நான் உங்களுக்கு ஒரு ஓபன் செக் ஒன்றை தரப் போகிறேன். நீங்கள் அதைப் பெற்றுக் கொண்டு உங்களுக்கு விருப்பமான தொகையை அதுல எழுதி பணமாக்கிக் கொள்ளுங்கள்."

அவன் தனது கையில் தயாராய் வைத்திருந்த செக்கை எடுத்து கையூம் ஹாஜியாருக்கு கொடுக்க முற்பட்டான்.

"ரமேஸ் அந்த வீட்டை நாங்கள் கண்டு வெகு காலமாகுது. அது என்ன நிலையில் இருக்கிறதென்று கூட எங்களுக்குத் தெரியாது. உமாவுக்குத்தான் அந்த வீட்டை நீங்கள் வேண்டிக் கொடுக்கப் போகிறீர்கள். அவ இருக்கிற நிலையில் அவவுக்காக வேண்டப் போற ஒரு சொத்துக்கு என்னால ஒரு விலை சொல்ல முடியாது. உமாவிலயும்தான் எண்ட பிள்ளைகளிலும்தான் நான் அன்று ஒரு வேறுபாட்டைக் காணவில்லை. அவர்கள் எல்லோரையும் நான் எண்ட பிள்ளைகளாகவே தான் பார்த்தேன். அதனால அந்த வீட்டுக்கு ஏதோ ஒரு விலையை நீங்கள்தான் நிர்ணயிக்க வேண்டும்?

அதன் பிறகு இருதரப்பினரும் ஒரு முடிவுக்கு வந்தனர். அதன்படி பெரியதொரு தொகை பணத்தை ரமேஸ் கையூம் ஹாஜியாருக்கு அளிக்க அவர் அதை மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டார்.

அப்போது ஆதிலின் குஞ்சு வீட்டில் ஐயரின் பேரக் குழந்தைகளும் விளையாடிக் கொண்டிருப்பதை கையூம் ஹாஜியார் கண்ணுற்றார்.

"ஐயரே எண்ட பேரக் குழந்தையும் உங்கட பேரக் குழந்தைகளும் அங்கே விளையாடிக் கொண்டிருப்பதைப் பாருங்கள். எங்கட பிள்ளைகளும் ஒரு காலத்தில் அப்பிடித்தான் யாழப்பாணத்தில் குஞ்சு வீடு கட்டி விளையாடினார்கள். ஆனால் நாங்கள் பிரிய வேண்டும் என்று இறைவன் நாட்டம் வைத்திருக்கின்றான். அதனால் நாங்கள் என்னதான் செய்வோம்?

"கையூம் நானா நீங்கள் அதைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை இன்று யாழ்ப்பாணம் என்றால் என்ன, கொழும்பு என்றால் என்ன, கண்டி என்றால் என்ன எல்லா இடங்களிலேயும் தூரச் சென்று வர வசதிகள் இருக்கு. நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்பட வேண்டாம். எல்லாம் சந்தோஷமாக நடக்கும். ஐநியாவிண்ட கலியாணத்துக்கு சொல்லுங்கோ நாங்கள் கட்டாயம் வந்து கலந்து கொள்வோம்.

அவர்கள் விடைபெறும் நேரம் நெருங்கிவிட்டது. அதனால் ஒவ்வொரு வரும் ஒவ்வொருவரிடம் இருந்து உருக்கமாக விடை பெற்றுக் கொண்டனர்.

திடீரென வீட்டுக்குள் சென்ற கையூம் ஹாஜியார் வீட்டு உறுதியுடன் அங்கே வந்து அதை ஐயரிடம் கையளித்தார்.

"ஐயரே, நான் கூடிய கெதியில் யாழப்பாணம் வருவேன். வந்ததும் உமாவின் பெயருக்கு உறுதியை மாற்றித்தருவேன்.

ஐயரும் அவருடன் வந்தவர்களும் கவலையோடு அங்கிருந்து புறப்பட்டுச் சென்றனர். உடன்பிறப்பு, கூட்டம், குடும்பம், மதம், சமூகம், கலாசாரம் என்பவற்றைத் தாண்டி இனம் என்பதற்கு இன்னுமொரு அர்த்தமும் இருப்பதை கையூம் ஹாஜியார் அப்போது விளங்கிக்கொண்டார்.

○○○

மதச்சார்பின்மை (செகுலரிசம்) என்ற கருத்தை ஆதரிப்போர் ஜனநாயக சமூகங்களில் அரசு மதச்சார்பற்றதாக இருத்தல் வேண்டும் என்று கூறுவர். மதச்சார்பற்ற அரசு என்ற கருத்தில் இரு அம்சங்கள் உள்ளன.

1. திருச்சபைக்கும் அரசுக்கும் இடையில் பிரிப்பு இருத்தல்வேண்டும்: Seperation of the Church and State என்ற ஆங்கிலத் தொடரின் மொழி பெயர்ப்பாக அமைவதே இக்கூற்றாகும். இச் சொற்றொடரில் "திருச்சபை" என்ற சொல் மதத்தைக் குறித்து நிற்கிறது. மதச்சார்பின்மையில் வரலாற்றை எடுத்து நோக்கினால் அது கத்தோலிக்கத் திருச்சபைக்கு எதிரான போராட்டத்தில் ஆரம்பித்தது என்பது தெரியவரும். இன்று இந்து மதம், பௌத்தம், கிறிஸ்தவம், கத்தோலிக்கம், இஸ்லாம் முதலிய எல்லா மதங்களையும் குறிப்பதாக இச்சொல்லைக் கருதுதல் வேண்டும்.

2. அரசின் நடுநிலை: அரசு நாட்டில் உள்ள எல்லா மதங்களையும் சேர்ந்த மக்களை நடுநிலையாகவும் பக்கச் சார்பின்றியும் நடத்துதல் வேண்டும். வேறு வார்த்தையில் கூறுவதாயின் அரசு எந்தவொரு மதத்திற்கும் சார்பானதாக இருத்தல் ஆகாது. அரசு மதங்களைத் தூரத்தில் வைத்திருக்க வேண்டும் என்பதோடு எல்லா மதங்களும் சமதூரத்தில் வைக்கப்படுதல் வேண்டும். இவ்விரு அம்சங்களைக் கொண்டதாக அரசு இருப்பதனால் மூன்று வகைப் பயன்கள் கிடைக்கின்றன என்று கூறப்படுகிறது.

அவையாவன:-

அ) வழிபாட்டுச் சதந்திரம், மக்களுக்கு வழிபாட்டு சுதந்திரம் கிடைக்கின்றது. இது ஜனநாயக நாட்டில் இருக்க வேண்டிய அடிப்படை உரிமையாகும். அரசு - மதம் பிரிப்பு இருந்தால் மட்டுமே இந்த உரிமைக்கு உத்தரவாதம் கிடைக்கும்.

ஆ) நாட்டில் உள்ள எல்லா மதங்களுக்கிடையிலும் சமத்துவம் இருக்கும். ஏதாவது ஒரு மதம் அரசு மதமாகவோ அல்லது அரசுக்குக் கிட்டியதாகவோ இருந்தால் நாட்டில் மதச்சமத்துவம் இருக்காது.

இ) நாட்டில் வாழும் வெவ்வேறு மதப்பிரிவினர்களையும் பாதிக்கும் முடிவுகள் எடுக்கப்படும்போது யாவரும் அம்முடிவுளின் பங்காளிகளாக இருத்தல் வேண்டும். அப்போதுதான் முடிவுகள் ஐக்கியத்தோடு மேற்கொள்ளப்படும். சகோதரத்துவம் நிலவும் நவீன காலத்தில் ஜனநாயகக் கருத்துக்களின் தோற்ற மூலமாக அமைந்த பிரஞ்சுப் புரட்சியின் இலக்குகளாக சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற மூன்று கொள்கைகள் அமைந்தன. இம்மூன்று கொள்கைகளின்படி மேற்கூறிய மூன்று பயன்களையும் விளக்கலாம், மதச்சார்பின்மையின் இப்பயன்களை நவீன காலத்துச் சட்ட அரசியல் கருத்துக்களுடனும் தொடர்புபடுத்தியும் நோக்கலாம்.

கந்தையா சண்முகலிங்கம்

மதச் சார்பின்மையும் சிறுபான்மைப் பண்பாடுகளும்

மதச்சார்பின்மையின் பயன்கள்:

பிரஞ்சுப்புரட்சியின் இலக்குகள்	மதச்சார்பின்மையின் பயன்கள்	சட்ட அரசியல் கருத்துக்கள்
சுதந்திரம்	மதச்சுதந்திரம்	வழிபாட்டுச் சுதந்திரம் என்னும் மனித உரிமை
சமத்துவம்	மதச்சமத்துவம், மதச் சிறுபான்மையினர் பாரபட்சமாக நடத்தப்படாமை	சமத்துவமாக நடத்தப்படுவதற்கான உரிமை
சகோதரத்துவம்	ஐக்கியம்,பங்கேற்பு, சகோதரத்துவம்	ஆளப்படுவோரின் சம்மதம் இல்லாமல் ஆட்சி செய்தல் ஆகாது.

மதச்சார்பின்மையை இன்னொரு கோணத்திலும் நோக்கலாம். மதச்சார்பின்மை இருநிலைகளில் வெளிப்படுகிறது.

1. தனிநபர் நிலை : தனிநபர்களதும், குழுக்களதும் உணர்வுநிலையில் வெளிப்படும் மதச்சார்பின்மை
2. நிறுவன வடிவில் வெளிப்படும் மதச்சார்பின்மை :சட்ட அரசியல் நிறவனங்களிலும் அமைப்புக்களிலும், பொதுவாழ்விலும் அரசியலிலும் வெளிப்படும் நிறுவனம்சார் மதச்சார்பின்மை.

முதலாவது வகையை ஆங்கிலத்தில் Secularity என்ற சொல்லால் குறிப்பிடுவர். இதனைத் தமிழில் உணர்வுநிலை மதச்சார்பின்மை என்று கூறலாம். இரண்டாவது வகையை ஆங்கிலத்தில் Secularism என்றே குறிப்பிடுவார். இதனை நாம் இக்கட்டுரையில் நிறுவன நிலைப்பட்ட மதச்சார்பின்மை என்று குறிப்பிடுவோம்.

மக்களில் பெரும்பான்மையினர் மதப்பற்று உள்ளவர்களாய் உள்ளனர். உணர்வு நிலையில் மதச்சார்பு அற்றவர்களாய் இருப்போர் எண்ணிக்கை மிகக் குறைவே. ஜனநாயக நாட்டில் எந்த மதத்தையும் சாராதவராய் மதநம்பிக்கையற்றவராக இருப்பதற்கும் ஒருவருக்கு உரிமை உள்ளது. பொதுத்துறை நிறுவனங்கள் அதிகாரத்தை செலுத்துவன. அரசியல் அதிகாரம் நிறுவனங்களூடாகச் செயற்படுகிறது. இந்நிறுவனங்கள் மதச் சார்பற்றனவாய் பாராபட்சம் காட்டாது எல்லா மக்களையும் நடுநிலையோடு நடத்த வேண்டும்.

வரலாற்று நோக்கில் மதச்சார்பின்மை

லத்தீன் மொழியில் 'செக்குலம்' என்ற சொல்லிற்கு 'இன்றைய காலம்' 'இந்த உலகம்' என்ற அர்த்தங்கள் உள்ளன. 'செக்குலம்' என்ற லத்தீன் மொழிச் சொல்லில் இருந்து தோன்றிய 'செக்குலர்' என்ற ஆங்கிலச் சொல் மத்திய காலத்தில் மதச்சார்பின்மை என்ற இன்றைய பொருளில் உபயோகிக்கப்படவில்லை. மடாலயங்களுக்குள் தம்மை முடக்கிக் கொண்டு தவத்தில் ஈடுபட்ட மதகுருமாரை பக்தர்களான குருமார் (Religious Priests) என்று அக்காலத்தில் குறிப்பிட்டனர். மடாலயத்தை விட்டு வெளியே சென்று மக்களுடன் பணியாற்றியவர்கள் 'செக்குலர் பிரீஸ்ட்ஸ்' (secular Priests) எனப்பட்டனர். இவ்வுலக வாழ்க்கையோடு தொடர்பு கொண்ட துறவிகளை அழைப்பதற்கு உபயோகப்படுத்தப்பட்ட சொல் காலப்போக்கில் மதச்சார்பற்றவர்களைக் குறிக்கவும் மதச்சார்பின்மை என்னும் கருத்தைக் குறிப்பிடவும் உபயோகிக்கப்பட்டது. 'செக்குலரைஷேசன்' என்ற சொல் நவீனத்துவம் வளர்ச்சியுற்றபோது மக்கள் மதத்தின் பிடியில் இருந்து விடுதலை பெற்றதைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப் படுகிறது. ஆயின் மதச்சீர்திருத்த இயக்கம் எழுச்சியுற்ற காலத்தில் கத்தோலிக்க திருச்சபையின் சொத்துக்களைப் பறித்து மதம்சாராத வேலைகளுக்குப் பயன்படுத்தியதையும் செக்குலரைசேசன் எனக் குறிப்பிட்டனர்.

பாடசாலையில் 'ஹியாப்' அணிதல் தொடர்பாக ஐரோப்பிய நாடுகளிற்கிடையே வேறுபட்ட கொள்கைகள் பின்பற்றப்பட்டன. ஜேர்மனியில் முஸ்லிம் மாணவிகள் 'ஹியாப்' அணியலாம் ஆனால் முஸ்லிம் ஆசிரியைகள் ஹியாப் அணிதல் ஆகாது என முடிவு செய்யப்பட்டது. பிரித்தானியாவில் 'ஹியாப்' பிரச்சினை பற்றி அரசு எப்பொது முடிவையும் திணிக்கவில்லை. ஒவ்வொரு பாடசாலை நிர்வாகமும் இதுபற்றி முடிவுசெய்யலாம் என அங்கு தீர்மானிக்கப்பட்டது.

புனிதமானது, மறு உலகம்சார்ந்தது, சமயச் சார்புடையது என்ற கருத்துக்களுக்கு எதிர்க் கருத்துடைய சொல்லாக 'செக்குலர்' என்ற சொல் இன்று உபயோகிக்கப்படுகிறது. இச்சொல்லின் வரலாறு அரசியலில் இச்சொல் உபயோகிக்கப்படும் அர்த்தத்தைப் புரிந்து கொள்வதற்கு உதவுகிறது.

'செக்குலரிசம்' ஒரு அரசியல் கருத்தாக வளர்ச்சியடைவதற்கு அமெரிக்காவின் விடுதலைப் புரட்சியின் பயனாக எழுந்த சிந்தனைகள் உதவின. அக்காலம் முதல் அரசை மத நிறுவனங்களிடமிருந்து வேறுபடுத்தி நோக்கும் சிந்தனை இச்சொல்லின் ஊடாக வெளிப்பட்டது. புரட்சியின் பின் ஏற்படுத்தப்பட்ட அமெரிக்கக் குடியரசு 1780 ஆம் ஆண்டு தொடக்கம் வெளியிட்ட ஒரு டொலர் நாணயத்தின் பின்புறத்தில் 'Novosordo seculorum' என்ற லத்தின் மொழி வாசகம் பொறிக்கப்பட்டிருந்தது. இதன் பொருள் 'புதிய காலத்தின் ஒழுங்கமைப்பு' என்பதாகும். அரசன் - திருச்சபைப் பிணைப்பை அறுத்துப் பொது வாழ்வை (Public Life) முடிமன்னர் அதிகாரத்தில் இருந்து மட்டுமல்லாது திருச்சபையின் மத அதிகாரத்தில் இருந்தும் விடுவித்த புரட்சிகர மாற்றமே குடியரசின் தோற்றமாகும். அவ்வகையில் அமெரிக்கக் குடியரசு 'புதிய காலத்தின் ஒழுங்கமைப்பு' ஆகும். ஒரு டொலர் நாணயத்தில் பொறிக்கப் பட்ட வாசகத்தின் அர்த்தம் இதுவே. குடியரசின் மதச்சார்பின்மையின் குறியீட்டு வடிவிலான வெளிப்படுத்தல் இதுவாகும்.

மதச்சார்பற்ற அரசின் வரலாற்றில் இருமரபுகள் உள்ளன. இவ்விரு மரபுகளாவன.

1. அமெரிக்கப் புரட்சி மரபு
2. பிரான்சியப் புரட்சி மரபு

அமெரிக்கப் புரட்சி மரபின் அறிவுசார் உள்ளடக்கம் பிரான்சியப் புரட்சி மரபில் இருந்து வேறுபட்டது. இவ் வேறுபாட்டிற்கு வரலாற்றுக் காரணங்கள் உள்ளன. முடிமன்னர்களின் சர்வாதிகாரம் கத்தோலிக்க திருச்சபையின் ஒடுக்குமுறை என்ற இரண்டிற்கும் எதிரான தாகப் பிரஞ்சுப் புரட்சி விளங்கியது. அங்கு மன்னர் ஆட்சியை ஒழிப்பது மட்டுமன்றி கத்தோலிக்க திருச்சபையின் அதிகாரத்தையும் ஒழிப்பது புரட்சியின் இலக்காக இருந்தது. அரசுக்கும் திருச்சபைக்குமு இடையிலான பிணைப்பை அறுப்பதன் மூலம் திருச் சபையின் அதிகாரத்தை ஒழிக்க முடிந்தது. அமெரிக்காவில் அப்படியான தேவை யிருக்கவில்லை. அங்கே புரட்சிக்கு முன்னரே புரட்டத்தாந்திய மதமும், மதச் சீர் திருத்தக் கருத்துக்களும் பரவியிருந்தன. சமய வாழ்க்கையில் தனிநபர் சுதந்திரமும் சுயத்துவமும் வளர்ச்சி பெற்றிருந்தன. இக்காரணத்தால் அமெரிக்கப் புரட்சி வாதிகள் மதம் தொடர்பாக மென்போக்கு உடையவர்களாக இருந்தனர். லிபரல் முற்போக்கு புரட்டத்தாந்தியர்களதும், இறை நம்பிக்கையுடையோரதும் பங்களிப்புடன் அங்கு புரட்சி நடைபெற்றது. அமெரிக்கா, பிரான்ஸ் ஆகிய இரு நாடுகளிலும் மதச்சார்பின்மை தொடர்பான அரசுக்கொள்கையில் வித்தியாசம் இருப்பதைக் காணலாம் அமெரிக்க சுதந்திரம் போரில் கத்தோலிக்க திருச்சபையின் மீதான எதிர்ப்பு முதன்மை பெறவில்லை. பிரான்சில் கத்தோலிக்க திருச்சபையைப் புரட்சிவாதிகள் தீவிரமாக எதிர்த்தனர். அதன் அதிகாரத்தையும் அது அரசுடன் கொண்டுள்ள தொடர்பையும் ஒழிப்பது புரட்சியின் நோக்கமாக இருந்தது. இக்காணரத்தால் பிரான்ஸ் நாட்டில் இன்று வரை கடைப்பிடிக்கப்படும் கொள்கை கடும் போக்கு மதச்சார்பின்மையாகும்.

பிரான்ஸ் போன்ற நாடுகளின் கடும் போக்கு மதச்சார்பின்மை இன்று பன்மைப் பண்பாட்டுவாதம் (Multi culturalism) என்ற கருத்தோடு முரண்படுவதாக உள்ளது. இம்முரண்பாட்டினை முஸ்லிம் பெண்கள் தம்முகத்தை மறைக்கும் வகையில் உடையணிதல் தொடர்பான பிரச்சினையை உதாரணமாகக் கொண்டு விளக்கலாம்.

பிரான்ஸ் நாட்டில் 2004 ஆம் ஆண்டில் ஸ்ரசி (Stasi) விசாரணைக் குழு முஸ்லிம்

மாணவிகள் பாடசாலைக்குச் செல்லும் போது 'ஹியாப்' அணிவதைத் தடை செய்யும் முடிவை அறிவித்தது. கல்வி நிறவனங்கள் பொதுத்துறை நிறுவனங்கள் ஆகும். அங்கே சமய அடிப்படையில் வேறுபாடு காட்டப்படுவது தவறு. முஸ்லிம் மாணவிகள் தம் சமயம் சார்ந்த வழமையை பாடசாலைக்குள் நுழைப்பது அரசின் மதச்சார்பின்மைக் கொள்கையைப் பகிரங்கமாக மீறுவதாகும் என்று கூறப்பட்டது. குறிப்பாகப் பொதுத்துறைப் பணியாளராகிய முஸ்லிம் பெண் ஆசிரியைகள் 'ஹியாப்' உடையுடன் பாடசாலைக்குச் செல்வது முறையற்றது என்றே வாதிடப்பட்டது. பிரஞ்சுக் குடியரசின் மிக அடிப்படையான மதச்சார்பின்மை கொள்கையைப் பொதுத்துறை நிறுவனங்களில் செயற்படுத்தப்படுவதற்கு முஸ்லிம் பெண்கள் 'ஹியாப்' அணிவது தடையாக உள்ளது என அரசு கருதியது. அதனால 'ஹியாப்' குறியீட்டு வடிவிலான எதிர்ப்பு, என்றும் வீம்புச்செயல் என்றும் வாதங்களும் முன்வைக்கப்பட்டன.

'ஹியாப்' பிரச்சினையில் பிரான்ஸ் அரசு கடும்போக்கு மதச்சார்பின்மை நோக்கைக் கடைப்பிடிப்பதைக் காணலாம். பிரஞ்சுப் புரட்சிக் காலத்தின் மதச்சார்பின்மைக் கொள்கை இன்றைய சூழ்நிலைக்குப் பொருத்த மற்றது. மதங்கள் தொடர்பாக அரசின் நடுவுநிலை முக்கியமான ஒரு விடயம்தான். ஆனால் அக் கொள்கையை ஒரு உயிரற்ற மூடப்பக்தியின் நிலைக்கு மாற்றக்கூடாது. பிரான்ஸின் நகரங்களில் முஸ்லிம்கள் மதச் சிறுபான்மையினராக உள்ளனர். அவர்களின் பண்பாட்டு அடையாளங்களைப் பேணும் உரிமை அவர்களுக்கு உள்ளது. அது மதிக்கப்பட வேண்டும். பன்மைப் பண்பாடுகள் அருகருகே சமத்துவமாகவும் ஐக்கியமாகவும் இருத்தல் ஜனநாயகம் செழிப்பதற்கு அத்தியாவசியமானதாகும். ஆகையால் மதச் சார்பின்மையில் கடும்போக்கு இருத்தல் ஆகாது. சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாக்கக் கூடிய மென்போக்கு மதச் சார்பின்மையே இன்றைய தேவை எனப் பன்மைப் பண்பாட்டுவாதிகள் கூறுவர். பாட சாலையில் 'ஹியாப்' அணிதல் தொடர்பாக ஐரோப்பிய நாடுகளிற்கிடையே வேறுபட்ட கொள்கைகள் பின்பற்றப்பட்டன. ஜேர்மனியில் முஸ்லிம் மாணவிகள் 'ஹியாப்' அணியலாம் ஆனால் முஸ்லிம் ஆசிரியைகள் ஹியாப் அணிதல் ஆகாது என முடிவு செய்யப்பட்டது. பிரித்தானியாவில் 'ஹியாப்' பிரச்சினை பற்றி அரசு எந்தப் பொது முடிவையும் திணிக்கவில்லை. ஒவ்வொரு பாடசாலை நிர்வாகமும் இது பற்றி முடிவுசெய்யலாம் என அங்கு தீர்மானிக் கப்பட்டது. இவ்வாறான வேறுபட்ட முடிவுகள் சிறுபான்மைப் பண்பாடுகள் தொடர்பான சகிப்புத்தன்மையின் அவசியம் உணரப்படுவதன் அடையாளம் ஆகும். கனடா ஒரு மதச்சார்பற்ற அரசு ஆகும். அங்கு சிறுபான்மை மதங்களிற்கு வழங்கப்பட்டுள்ள சுதந்திரமும், மதச்சார்பின்மையும், பன்மைப் பண்பாட்டுவாதமும் ஒன்றிணையும் சிறப்பைக் காணலாம்.

❍❍❍

பகிர்வோம்....

ஈழமும் தமிழும்

பாவலர் சரித்திர தீபகம் என்னும் ஆ. சதாசிவம்பிள்ளை *1886*இல் எழுதிய நூலில் வண்ணார்பண்ணையைச் சேர்ந்த ***அநந்தசுப்பையர்*** பற்றி,

தாசீப் பிரியர், ஆதலாற் சிற்றின்பமே இவரின் கீர்த்தனைகளின் முக்கிய சாரம். இவர் பாடிய பதங்கள் ஒவ்வொன்றும் 'அநந்த சுப்பையன்' என்றே முடியும்

என்னும் குறிப்புள்ளது.

*1899*ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பெற்ற ***வண்ணை வைத்தீஸ்வர வாலாம்பிகா தோத்திர கீர்த்தனம்*** என்னும் நூலில் அநந்த சுப்பையன் பற்றிய மேலதிக பல தகவல்களைக் காணமுடிகின்றது.

அநந்தசுப்பையரின் இயற்பெயர், ***ஸ்ரீதாச பிரம்மம்.*** இவர் ***ஆதிநாராயண கணேசையரின்*** புத்திரர். அத்துடன் ***கூழங்கைத் தம்பிரான்*** இவருடைய ஆசிரியர். இவரின் நூலுக்கு கூழங்கைத் தம்பிரான் உரைச் சிறப்புப் பாயிரம் வழங்கியுள்ளர்.

இவர் பல கீர்த்தனைகளையும், பதங்களையும் பாடியதோடு மட்டுமல்லாது *1575* பாடல்களில் அமைந்த ***அத்வைதசார அனுபூதி விளக்கம்***, *4555* பாக்க ளுடைய ***நவராத்திரி மான்மியம்***, *400* பாக்களில் அமைந்த ***பாகவத புராண சாரம்***, *30* பாக்களில் அமைந்த ***திருவிராமீச நிரோட்டக அந்தாதி*** ஆகிய நூல்களையும் இயற்றியுள்ளார் என்னும் குறிப்புகள் உள்ளன.

புலவர் வரலாற்று நூல்களில் ஒதுக்கப்பட்டுள்ள இவ்வறிஞரின் சில கீர்த்தனைகள் இன்று எமக்கு கிடைக்கப்பெறுகின்றன.

மண்

சிறுகதை

தி.கேதீஸ்வரன்

விமான நிலையத்திலிருந்து வெளியே வந்த ஷாலினி தன்னை அறியாமலேயே நிம்மதிப் பெருமூச்சொன்றை வெளியிட்டாள். பெருமளவில் எதிர்பார்த்திருந்தபோதும் கடந்து சென்ற சில மணிநேரத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் அவள் உள்ளத்தை வெகுவாகப் பாதித்திருந்தன.

கையிலிருக்கும் பையை நெஞ்சோடு அணைத்துக் கொள்கிறாள். தந்தையின் அருகிலிருக்கும்போது ஏற்படும் தைரியம் உள்ளத்தில் பரவியபோதும், வழமையாக மென்மையாக அணைத்து ஆறுதல்படுத்தும் அவர் சிறுகலசத்தினுள் சாம்பலாக அடங்கிக் கிடக்கும் உண்மை அவள் கண்களைப் பனிக்கச் செய்தது.

'நான் தவழ்ந்த என்ட வீட்டு மண்ணில என்ட சாம்பல எண்டாலும் தூவிடுவியா என்ட செல்லம்'

ஊரை உறவைத் துறந்து உயிர் வாழமட்டுமே வெளிதேசம் வந்து, மீண்டுமொரு முறை சொந்தமண்ணில் கால் பதித்து விடமாட்டோமா? என்ற கனவினை அங்கு காத்திருக்கும் பயங்கரத்தின் நிதர்சனத்தில் கலைத்துவிட்டு ஏக்கத்தில் வாழ்ந்திடும் ஆயிரக்கணக்கான உறவுகளின் குரலாக அவள் தந்தையின் குரல் அவள் செவிகளில் மீளவும் எதிரொலித்தது.

இருபத்தைந்து வருடங்களாக தாயுமான வனாக இருந்த தந்தையின் கடைசி விருப்பத்தை நிறைவேற்ற மூன்று வருடங் களுக்குபின் கிடைத்த அச்சந்தர்ப் பத்தைத் தவறவிட அவளும் விரும்பவில்லை. அதற்காகப் பட்டபாடு கொஞ்சநஞ்சமல்ல. என்ன செய்வது அமெரிக்காவில் பிறந்தாலும் ஈழத்தமிழனுக்கு மகளாய் பிறந்துவிட்டாளே!

சென்றவாரம் தொலைபேசியில் தொடர்பு கொண்ட மாமா "ரகுவின்ட கனவு பலிக்கிற காலம் கனிஞ்சுட்டுது புள்ள" என்றார். அவர் தன் சகோதரியின் கணவன் என்பதற்கு மேலாகத் தன் உற்ற நண்பனாக ரகுராமனின் ஏக்கத்தை அறிந்தவர்.

நாட்டில் ஏற்பட்டிருக்கும் ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள மாற்றங்களில் ஒன்றாக அதிஉயர்பாதுகாப்பு வலயம் என்று முள்வேலிக்குள் அடைக்கப் பட்டிருக்கும் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலப்பரப்பில் சிலபிரதேசங்கள் விடுவிக்கபட விருப்பதாகவும் அதில் அவர்களது கிராமமும் அடங்குவதாகவும் கூறினார். ஆனாலும் மாற்றம் ஆட்சியில் மட்டுமே நடைமுறைகளிலல்ல என்பதை இன்றைய சோதனைக் கெடு பிடிகளும் விசேடவிசாரணைகளும் அவளுக்கு உணர்த்தியிருந்தன.

*****

அவர்களது ஊரைநோக்கி விரைந்து கொண்டிருந்த விசேடபேரூந்தில் அமர்ந்திருந்த ஷாலினிக்கு தன் அருகில் அமர்ந்திருந்த மாமா உணர்ச்சிவசப்பட்டிருப்பதாய் தோன்றியது. பிறகென்ன தான் பிறந்த மண்ணை முப்பதைந்து வருடங்களின் பின் காணப்போகிறாரே! தன் வேர்களைச் சுமந்திருந்த மண்ணிலிருக்கின்றேன் என்ற உணர்வு அவளது உடலிலும் மெல்லிய சிலிர்ப்பை ஏற்படுத்தியது.

தனது ஊர் மண்ணை இதுவரை மிதித்திராத போதும் தந்தையின் வார்த்தை களால் அவ்வூரை அவள் முழுமையாக

அறிந்திருந்தாள். பச்சைப்பசேல் என்ற வயல்களும் தென்னந்தோட்டங்களும் சூழ்ந்த தன் ஊரின் அழகை கண்களில் ஒரு மயக்கத் தோடு அவர் வர்ணிப்பார். ஊரின் மத்தியில் இருக்கும் செல்வவிநாயகர் ஆலயத்தில் தான் செய்த குறும்புகளையும் வீட்டிற்கு அடுத்திருக்கும் பாடசாலையில் இருந்து மதில் பாய்ந்து வருவதைப் பற்றியும் பலகதைகள் சொல்லியிருக்கிறார்.

தனது நாற்சதுர வீட்டைப்பற்றியும் அதைச் சுற்றியுள்ள தோட்டத்தைப் பற்றியும் அங்கு தான் கழித்த இன்பமான பொழுதுகளையும் மீட்டிப்பார்க்கையில் அவர் கண் கலங்குவதைப் பலமுறை கண்டிருக்கிறாள். அவ்விடம் அவருக்கு எவ்வளவு தூரம் முக்கியமானதாக இருந்தது என்பதை அவளால் இப்போது விளங்கிக் கொள்ளக்கூடியதாய் இருக்கின்றது.

யோசனையில் மூழ்கியிருந்த அவள் பேரூந்து நிறுத்தப்பட மெல்லக் கலைந்தாள். மாமாவின் கைகளைப் பற்றியவாறே கீழே இறங்குகையில் அவரது கைகளும் மெல்ல நடுங்குவதை அவளால் உணர்ந்துகொள்ள முடிந்தது.

பாழடைந்த ஒரு கோவிலின் அருகில் பேரூந்து நிறுத்தப்பட்டிருந்தது. அக் கோவிலைத் தவிர கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் எந்தக் கட்டடமும் கண்ணில் பட வில்லை. அவள் பார்வையை மெல்லச் சுழல விட்டாள். அந்த வரண்ட பூமியில் ஆங்காங்கே சில முறிந்த தென்னைகள் மட்டும் தோட்டாக் காயங்களுடன் பரிதாபமாகக் காட்சியளித்தன.

"மாமா எங்கட ஊருக்கு இன்னும் கனதூரம் போகணுமா..."

ஷாலினி கேட்டவாறே மாமாவைப் பார்த்தாள். அவர் பதில் சொல்லவில்லை அவர் கண்களில் நீர்வழிய ஒரு சிலையைப் போல் நின்றிருந்தார்.

அவள் அக்கலசத்தை தாங்கியிருக்கும் துணிப்பையை நெஞ்சோடு அணைத்தவாறு அசைவற்றுப் போகிறாள். தந்தையின் பலகீனமான குரல் அவள் செவிகளில் மீண்டும் மீண்டும் எதிரொலிக்கின்றது.

'நான் தவழ்ந்த என்ட வீட்டுமண்ணில என்ட சாம்பல எண்டாலும் தூவிடுவியா என்டசெல்லம்..'

❍❍❍

இன்னாவு வுரிப்தீன்

புதுக்க விதை

புதுக்க விதைதூவி
புதுக்கவிதை எழுதவெனப்
புறப்பட்டேன்.
என்முன்னே
அதிகாரத்தோடு
ஆங்கிருவர் நின்றிருந்தார்.
யாரப்பா நீங்கள்
என்னவேண்டும்? என்றேன்?
இருவருமே ஒன்றி
எனைப்பார்த்து நெடுநேரம்
எக்காளமிட்டார்கள்.
பின்னர்
அடிமுட்டாள் நீயெம்மை
அறியாயோ ஏன்மறந்தாய்
நேற்றுவரை
நாம்தானே உன்னை
நேசித்துக் காத்தவர்கள்.
புரிந்தது எனக்கு
எதுகையும் மோனையுந்தான்.
என்னதிலே நிற்பதென.
மீண்டுமவர் எனைப்பார்த்து
புதுக்கவிதை என்றால்
புரியுமா உன்றனுக்கு?
எங்களை விட்டுவிடு.
என்றாலும் நீமுயலும்
இலக்கியத்தைக் கற்காமல்
எழுதிடநீ ஏன்முனைந்தாய்?
வாக்கியத்தைத் துண்டாக்கி
வடிவமற்று அடுக்குவது
புதுக்கவிதை ஆகாது.
ஓசையைத் தூக்கி
ஒருபுறத்தில் வைத்தாலும்,
சீராகச் சொல்லைச்
சிலையொன்று வடிப்பதுபோல்
வாசித்தால் நெஞ்சுள்ளே
வீறுகொண்டு பாய்கின்ற
வார்த்தை பொறுக்கி
வைக்குமிடம் வைத்தாலே
புதுக்கவிதையாகும்.
புரிந்துகொள்நீ என்றார்கள்.
மூக்குடைந்து போனேன்.
என்றாலும் கவியெழுதி
ஏளனப் படாதென்னை
காத்தருள் செய்தோரைக்
கைதூக்கி நன்றிசொல்லி
மெல்லநடந்தேன்
மூக்கில்கை வைத்தவனாய்.

நாட்டிய கலாநிதி **கார்த்திகா கணேசர்**
அவுஸ்திரேலியா

பக்தி இயக்கத்தில் ஆடலின் பங்கு

சமண மதத்தை எதிர்த்து சைவசமயம் போர் தொடுத்த பொழுது, சமணர்களால் வெறுத்து ஒதுக்கப்பட்ட லலித கலைகளையே சைவர்கள் ஆயுதமாகக் கொண்டனர். இந்திய முதல் பிரதமரான ஜவகர்லால் நேருவிடம் French அறிஞர் மல்றோய் கேட்டாராம். "உயர்ந்த சிந்தனையைக் கொண்ட பௌத்தத்தை எவ்வாறு இந்தியா எதுவித ஆர்பாட்டமும் இன்றி நாட்டிலிருந்து கலைத்துவிட்டது" என. இதற்கு நேருவால் பதில் கூற முடியவில்லை. உலகின் பல நாடுகளிலும் மதப்போராட்டம் என்பது இரத்தக்கறையிலேயே முடிவடைவது, ஆனால் பௌத்தத்தையும் ஜைனத்தையும் ஒழிப்பதற்கு "பக்தி இயக்கம்" வாட்போருக்குப் பதிலாக வேல்விளி மாதரை கோயில்களிலே ஆடவைத்தனர். இத்தகைய கவர்ச்சிக்கு முன்னே பௌத்த போதனைகளும், சமண சிந்தனைகளும் மக்களைக் கவர முடியவில்லை. பக்தி இயக்கம் தெற்கிலிருந்து வடக்கு வரை நடைபெற்ற இயக்கம்.

தமிழகத்திலே சங்கப் பாடல்களிலே காணப்பட்ட பொது மக்களின் உணர்வுகளான இன்பம், துன்பம், காதல், காமம், வீரம் யாவும் பக்தி இயக்கத்தினரால் இறைபால் கொண்ட பக்தியாயிற்று. சிலப்பதிகாரத்தின் வரிக்கூத்து காதலனுடன் கூடி இன்புறல் பின் பிரிவால் துன்புறுதல், ஊடல், கூடல் யாவும் இறைமேற்கொண்ட காதலாக வர்ணிக்கப்பட்டது. இங்கோ கோயில் கொண்டவரே நாயகன். ஆடல் நங்கையோ தன்னை இறைவனின் காதலியாகக் கொண்டு ஆடுகிறார். இதுவே பிறேம பக்தி அல்லது மதுர பக்தியாயிற்று. இறைவனோ பரமாத்மா, ஆடல் நங்கையோ ஜீவாத்மா என வர்ணிக்கப்பட்டது. அதுவரை வணிகருக்கும், மன்னருக் கும், நில சுவாந்தாருக்குமாக 1008 பொற் காசுக்கு ஆடிய ஆடல் நங்கை யர் தேவதாசிகள் என்ற பெயர் மாற்றம் பெற்று கோவிலில் இருந்து மானியம் பெற்று கோவில்களிலே ஆடினார்கள்.

இங்கு பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பியவர்கள் கூறுவது மனம் கொளத்தக்கது. "ஒரு கால சிருஷ்டி யானது, ஒரு புறத்தில் அது தோன்றிய காலத்தின் உற்பத்தியாகும், அக் காலத்தின் கண்ணாடியாகும். அதை ஆக்கியோனும் அதன் முதலாம் சுவைஞரும், எந்தச் சமூகத்திற்கு உரியோராக இருந்தாரோ அந்தச் சமூகத்தின் வரலாற்றைப் பிரதி பலிப்பவர். மறுபுறத்தில் அதனைக் காலத்தின் உற்பத்திப் பொருளாக மாத்திரம் கொள்ளாது, அந்தக் காலத் தையே உற்பவிப்பதாக, கடந்த காலத்தின் கண்ணாடியாக மாத்திர மல்லாது, வருங்காலத்தின் விளக் காகவும் கொள்ளலாம்."

கி.பி 7ம் நூற்றாண்டிலும் அதன் பின்னரும் தோன்றிய இராச்சியங் களினது உருவாக்கத்திலும், ஸ்திரப் பாட்டிலும் பக்தி இயக்கத்தின் இடம் முக்கியமானது. பக்தி இயக்கம் வெறும் மத இயக்கமாக மட்டும் இருந்துவிடவில்லை. அது வழிபாட்டி டங்களைக் கல்லினால் கட்டியது. இக்கோவில்கள் அவை சுட்டும் ஆத்ம ஈடேற்றத்துக்காக மாத்திரம் முக்கியத் துவம் பெறுவதன்று. அதனிலும் பார்க்க அவை கட்டப்பெற்ற இடத்தின் சமூகப் பொருளாதார அலுவல்களிலும், அக்காலத்தின் சமூகப் பொருளாதார அலுவல்களிலும்

அவை அச்சாணியாக முக்கியத்துவத்தைப் பெற்றன. சோழர்களின் சமூகப் பொருளாதார அமைப்பின் தொழிற்பாட்டில் கோவில்கள் முக்கிய இடத்தை வகித்தன என நீலகண்ட ஸாஸ்திரி அவர்கள் *Administration and Social life under the Pallavas Co pas* என்ற கட்டுரையில் குறிப்பிடுகிறார்.

பக்தி இயக்க காலத்திலே சைவ நாயன்மார்களும் வைணவ ஆழ்வார்களும் கோயில் கோயிலாக ஊர் ஊராகச் சென்று இறைபுகழ் பாடினார்கள். இசையும் நடனமும் இந்த இயக்கத்தின் அங்கமாகி புத்துயிர் பெற்று புதுப்பொலிவுடன் விளங்கியது. புதுப் புது கோயில்கள் கட்டப்பட்டன. அவற்றிற்கு தலபுராணம் பாடப்பட்டது. இசையும் ஆடலும் கோவிற் கலைகளாக மாறின. பக்தி இயக்கம் பல இலக்கியங்கள் தோன்றுவதற்கு காரணமா யிற்று. வடநாட்டு இதிகாசங்கள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது. புராணங்கள் இறை மகிமையைக் கூறியது. புராணங்களுடன் இணைந்தே கோவில் கலைகள் வளர்ந்தன. ஆடலுக்கும் பாடலுக்கும் முக்கிய கருப் பொருளாக அமைந்ததும் புராணங்களே.

சங்க காலத்திலே அரசனைப் புகழ்ந்த பாடல்கள் பக்தி இயக்கத்தில் இறையைப் பாடும் பாடலாயிற்று. அரசன் ஊர்வலமாகச் சென்று குடிமக்களைக் கண்டமை கோவிலிலே இறைவன் ஊர்வலமாக வெகு படாடோபமாக நடந்தேறியது. சிலப்பதிகாரத்திலே அரசனது ஊர்வலத்திலே ஆடல் நங்கையர் ஆடிவந்தனர். அதையே பின் பக்தி இயக்க காலத்தில் இறை ஊர்வலத்திலும் ஆடல் இணைந்தது. ஆடல் கோவிலின் பிரிக்க முடியாத அம்சமாயிற்று.

கோயில் கிரிகைகள் யாவும் மக்களுக்குப் புரியாத ஸமஸ்கிருத மொழியிலேயே நடை பெற்றன. இந்தப் பின்னணியில் மக்களுக்கு புரிந்த மொழியான தமிழில் பாடப்பட்ட நாயன் மாரின் தேவாரங்களும், ஆழ்வார்களின் பாசு ரங்களும் பக்தியை வளர்க்கும் இசையாகவும் ஆடலாகவும் கோவில்களிலே இடம்பெற்றன.

கோயில் கிரிகைகளை நடத்துவதற்கான நடைமுறைகளை ஆகமங்கள் நியமனங்கள் என ஸமஸ்கிருத மொழியிலேயே எழுதினர். இவ்வாறு ஆக்கப்பட்ட ஆகமங்களிலே ஆடும் தேவதாசிகள் எவ்வாறு வேறுபட்ட வர்ண உடைகள் அணிய வேண்டும். வேறுபட்ட ஆபரணங்கள் அணிய வேண்டும், அவர்கள் சிகை அலங்காரம் எவ்வாறு அமைய வேண்டும் என்பவை எல்லாம் முறையாக எழுதப்பட்டுள்ளன.

பக்தி இயக்க காலகட்டத்திலே சிவனே முழுமுதற் கடவுளாகப் போற்றப்பட்டார். சிவனே பஞ்சகிருத்தியங்களான ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பவற்றைச் செய்பவர் என்ற சிந்தனை ஓங்கி வளர்ந்தது. சிதம்பரத்திலே கோவில் கொண்டு ஈடேற்றத்திற்காக ஆடுகிறார் என்ற சிந்தனை வளர, நாயன்மாரும் அச்சிந்தனையைப் பரப்ப தேவாரங்களைப் பாடினார்கள்.

நித்திய பூஜையின் போது தேவாரங்களை ஓதுவது, தேவதாசிகளின் நடனங்கள், எவ்வாறு நடைபெற வேண்டும் என்பன யாவும் ஆகமங்களால் விதிக்கப்பட்டன. சைவ நாயன்மாரும் வைணவ ஆழ்வார்களும் ஊர் ஊராகச் சென்று இசையுடன் பாடி மதத்தைப் பரப்ப, அவர்கள் சிந்தனைகளையும் பாடல் களையும் தேவதாசிகள் ஆடல்களாக எடுத்துக் காட்டினர்.

திருவெம்பாவையை பார்த்தால் இது உரையாடலாக நாடக அமைப்பைக் கொண்ட தாக இருப்பதை நாம் காணலாம். இது கோவிலிலே ஆடுவதற்காக அமைக்கப்பட்டது. அன்று கோவில்களிலே ஆடப்பட்ட ஆடல் எவ்வாறு அமைந்தது என்பதற்கு இது ஒரு நல்ல எடுத்துக்காட்டு, திருவாசகத்தில் வரும் அம்மானை, பொற்சுண்ணம் போன்றவை பெண்களின் விளையாட்டுகள். இவை விளை யாட்டிற்கும் ஆடலுக்கும் இடமளிக்கின்றன. தேவரடியார் என்ற ஆடல் நங்கையர் ஆடிய ஆடலின் அழகை நாயன்மார் வாயிலாக நாம் அறிகிறோம்.

கோயிலை வலம் வந்து முடிவு வாத்தியத்துடன் நர்த்தகிகள் ஆடிய ஒலியை மழையென எண்ணி மந்திகள் மரமேறி முகில்களைப் பார்த்தனவாம். எத்துணை அருமையான கற்பனை.

"வலம் வந்த மடவார்கள் நடமாடி முழுவதிர மழை என்று அஞ்சி
சிலமந்தி அலமந்து மரமேறி முகில் பார்க்கும் திருவையாறே"

"காந்தாரம் இசை அமைத்துக் காரிகையர் பண்பாட
கவினோர் வீதி தேம் தேம் என்று அரங்கேறிச்
சேயிழையார் நடமாடும் திருவையாறே"

இவ்வாறாக சமயகுரவரான நாயன்மார்கள் கோவிலில் நடந்த ஆடலை வர்ணித்துள்ளனர். சுந்தரமூர்த்தி நாயனார் சிவனாரின் புகழ் பாடி ஊர் ஊராகச் சென்றவர் திருவாரூரைச் சென்றடைகிறார். இங்கு கோயில் கொண்டி ருக்கும் தியாகேசரைப் பாடியவர், பரவை நாச்சியார் என்ற கோவில் தாசியிடம் தன் உள்ளத்தைத் பறிகொடுத்தார், அவரை தனது இரண்டாவது மனைவியாக்கினார். இவரது முதல் மனைவியார் சங்கிலி நாச்சியார். இவர் திருவொற்றியூர் கோவிலை சார்ந்த தேவதாசி.

தமிழ் இலக்கியத்திலே தலைவனிடம் தன்னை முழுமையாக ஒப்படைத்த தலைவி அவனைப் பிரிந்திருக்கும் காலத்தில் படுகின்ற வேதனையை, தவிப்பைப் புலப்படுத்துவதாக அமைவது தூது. தலைவனைப் பிரிந்து ஏங்கும் தனிமையை தவிப்பினை பறவை, தென்றல் போன்றவற்றிடம் வெளிப்படுத்தி அவற்றைத் தூது போகுமாறு வேண்டுவது மிகுந்த இலக்கிய சுவை நிறைந்தது. இவ்வாறான பாடல்கள் ஆடுவதற்கு ஏற்றவை. இவற்றை இன்றும் பரதநாட்டியத்தில் கையாண்டு வருகிறார்கள். இவ்வாறான தூது திருஞானசம்பந்தரால் பாடப்பட்டுள்ளது.

"திருதோணி புரத்துறையும் நீராரும் சடையானை" அடையத் துடிக்கும் பதிகம் இது.

கோவிலில் ஆடிய தேவதாசிகள் இத்தகைய சிருங்கார ரசம் நிறைந்த பாடல் கட்கு அபினயிப்பது மதுர பக்தி எனப்பட்டது. பரமனோ பரமாத்மா, அவனை அடையத் துடிக்கும் பக்தர்கள் ஜீவாத்மாக்கள். பக்தர்கள் காதல் கொண்ட தலைவியாகத் தம்மைக் கொண்டு இறைமேல் பாடுவதோ, ஆடுவதோ, ஜீவாத்மாவான பக்தர், பரமாத்மாவான இறையை அடையத் துடிப்பதாக கொள்ளப்படும்.

"பாராரே எனையொருகால் தொழுகின்றேன் பாங்கமைந்த
காராரும் செழுநிறத்துப் பவளக்கால் கபோதங்கள்
தேராரும் நெடுவீதித் திருத்தோணி புரத்துறையும்
நீராரும் சடையாரும் கென்னிலைமை நிகழ்தீரே!

கமல மலர் ஆசனத்தில் செங்கதிர்கள் சாமரை வீச வீற்றிருக்கும் அன்னமானது அவள் நிலையை திருத்தோணிபுரத்துதீசனுக்கு கூறலாம் அல்லவா? அதுவும் கூறவில்லை. எனவே தனது துயரைக் கூறுவதற்கு இணை பிரியா அன்றில்களை அழைக்கிறாள், குயிலையும் ஏன் பூவையும் கூட வேண்டுகிறாள். எவையும் இவளுக்காக தூது போகவில்லை. துன்பக்கடலில் ஆழ்ந்து தவிக்கும் அவளுக்கு அப்பெருமான் திருநாமத்தைக் கூறி கூறி ஆறுதல்தர தான் வளர்த்த கிளியிடம் கேட்கிறாள். அவன் திருநாமத்தையாவது கேட்கவாவது செய்யலாம் எனக் கிளியை அழைக்கிறாள்.

"சிறையாரும் மடக்கிளியே இங்கேவா தேனோடு பால்
முறையாலே உணத்தருவேன் மொய்பவளத்தொடு தாளந்
துறையாரும் கடற்றோணி புரத்தீசன் துளங்கு மீளம்
பிறையாளன் திருநாமம் எனக்கொரு கால் பேசாயே."

இனிமையும் பக்திப் பரவசமும் மிக்க தமிழ் பதிகங்களை மக்களுக்கு உணர வைப்பதற்கு பாடலுக்கு விளக்கம் கொடுப்பதாக ஆடல் அமைந்திருக்கும்.

சங்ககாலத்தின் பின் சமணரும் பௌத்தரும் தமிழ்ச் சமுதாயத்தை தம் கொள்கைகளில் வாழ வழி நடத்திச் சென்றனர். சமண பௌத்த தத்துவங்கள் தமக்கெனச் சங்கங்கள் நிறுவி அவ்வமைப்பின் வழிமுறையாகச் செயல்பட்டு வெற்றிபெற்றன. அதேபோன்ற அமைப்புக்களே அமைத்துக்கொள்ளாத சைவ, வைணவக் கொள்கைகள், தமக்கென வகுத்துக் கொண்ட புதிய வகை ஆயுதமே பக்தி இயக்கம். சைவ பக்தி இயக்கத்திற்கு தேவார ஆசிரியர்களே தலைமை தாங்கினர். தமிழ் பாடல்களை ஆயுதமாக்கி மற்றைய சமயங்களை புறங்கொண்டு ஓடச் செய்தனர்.

இறைவழிபாட்டிற்கென இனிய எளிய தமிழ் பாக்களை பாடி சகலரையும் தம்பால் ஈர்த்தனர். அதற்கு அனுசரணையாக இனிய இசையுடன் அவற்றை ஆடலாக ஆட தேவதாசிகளை நியமித்தனர். ஊர்தோறும் கட்டப்பட்ட கோயில்களில் பாடிய பதிகங்கள் மக்களுக்கு இறையை அவர்களது ஆக்கியது. அவர்கள் ஊர் பெயர்கள் பதிகங்களில் இடம் பெறும் போது அதைப் பாடும் ஊர்மக்களுக்கு இறைவன் தம்முடையவர் என்ற எண்ணத்தை வலுப்படுத்தியது. நாயன்மார்கள் தம்வாழ்வில் தாம் நிகழ்த்திய அற்புதங்களையும் பாசுரங் களாக பாடினார்கள்.

சைவ, வைணவ பக்தி இயக்கம் புற சமயங்களை ஒடுக்குவதற்கு தமிழையும் இசையையும் ஆடலையும் பயன்படுத்தியது. நீதி நூல்களையும், காப்பியங்களையும்

சமண, பௌத்தர் புனைந்து கொண்டிருந்த அக்காலத்திலே எளிமை கொஞ்சும் இனிய தமிழிலே இசையுடன் பாடி, அதற்கமைய நளினமாக பெண்கள் ஆடி மனதைக் கொள்ளை கொண்ட பக்தி இயக்கம் வெகு இலகுவாக சமண பௌத்தத்தை மக்களிட மிருந்து பிரித்தேவிட்டது.

இறைவன் "ஒரு ரூபம் ஒரு நாமும் ஒன்றும் இல்லாதவன்" என்பதை நன்கு அறிந்தவர்கள் தேவார ஆசிரியர்கள்.

மண்ணல்லை விண்ணல்லை வலயமல்லை
மலையல்லை கடலல்லை வாழ்வல்லை
எண்ணல்லை எழுத்தல்லை வெளியுமல்லை
இரவல்லை பகலல்லை யாவுமல்லை

பெண்ணல்லை ஆணல்லை பேருமல்லை
பிறிதல்லை யாரையும் பெரியோய் நீயே
உண்ணல்லை நல்லார்க்கும் தீயையல்லை
உணர்வரிய ஒற்றியூர் உடைய கோவே.

என ஆளுடைய அரசர் திருவாக்கால் அறியலாம். இவற்றை எல்லாம் உணர்ந்தும், எளிய மக்களுக்கு இதை உணர்த்த முடியாது. அதனால் அவர்கட்கு இறையை உணர வைக்க வேண்டும். கடவுளை மனிதருக்கு மிக அருகில் கொண்டு வந்தனர். அல்லலுறும் மனிதர் அவனை அணுகவேண்டும். அதனால் அவர்கட்கு புரிந்த உறவிலே அவனைக் காண வைத்தார்கள். அப்பனும், அம்மையும், மாமியும், மாமனும், ஒப்புடைய மாதரும், ஓரூரும், சுற்றமும், ஒண்பொருளும், இப் பொன்னும், இம்மணியும் இம்முத்தும் ஆகிய அத்தனையும் அவனே என்றனர். இறையை சாமானிய மனிதன் தனதாக தன்னில் ஒருவனாக ஆண்டவனை அணுக வழிவகுத்தனர்.

இவ்வாறான இறைவனின் மேன்மையை மக்களுக்கு புரியவைக்க அதீத கற்பனை யுடனான புராணங்கள் தோன்றின. மாமேருவை மத்தாக்கி வாசுகியை நாணாக்கி பாற்கடலைக் கடைந்தனர். இவையாவும் கலையம்சத்துடன் அழகாக இசையுடன் கதையாகக் கூறப்பட்டது. பக்தி பரவசத்துடன் மக்கள் கேட்டனர். கேட்டும் வருகின்றனர். இறையே அம்மனும் அப்பனும் பிள்ளைகளுடன் குடும்பஸ்தன் னாகிறான். அறிவியல் வளர்ந்துவிட்ட இன்றைய காலத்திலும் கதைகேட்கும் ஆர்வம் மக்களிடம் குறையவில்லை. அதீத கற்பனைப் பாத்திரத்தைப் படைக்கும் சினிமாவை இரசிக்கத்தான் செய்கிறார்கள். இவையெல்லாம் நடக்கக் கூடியதா என சிந்திக்காமல் இரசிக்கின்றார்கள். இதற்குக் காரணம் என்ன? மனிதனது அடி மனதில் புதைந்துகிடக்கும் ஆதிகால மனிதனின் அச்ச உணர்வு, வியப்புணர்வு குழந்தைத் தன்மை மனிதனை விட்டுப் போகவில்லை. வாழ் விலிருந்து மாறுபட்ட ஆச்சரியமான விஷயத் தைக் காணவோ கேட்கவோ துடிக்கிறது மனிதமனம். ஏதோ ஒன்றைக் கேள்விப்பட்டால் அதைப் பார்ப்பதற்கு கூட்டம் கூடிவிடு கிறது. இந்த மனித உணர்வை நிறைவு செய்யும் வகையில் புராணக் கதைகளை முன்னிறுத்தி பாடல்களை ஆக்கினார்கள். இதன் மூலம் தாம் வழிபடும் கடவுளின் பெருமையையுணர்ந்து தமது வழிபாட்டினை மக்கள் பயபக்தியுடன் செய்தனர். இந்தப் புராண கதைகளை மையமாகக் கொண்டு இந்திய ஆடற்கலை மட்டுமல்ல, இசை, ஓவியம், சிற்பக்கலையாவும் வளர்ந்துள்ளன. இத்தகைய புராணங்களை கிரேக்க, எகிப்திய, நாகரீகங்களிலும் காணலாம். கற்பனையே கலைகளின் உற்றுவாய் போலும், ஆடல் மூலமாகவே ஆண்டவனை மக்கட்கு எடுத்து விளக்கியவர்கள், ஆண்டவனையே ஆடலரசனாக, ஆனந்த தாண்டவனாக கண்டதில் வியப்பில்லை.

❍❍❍

பகிர்வோம்....

ஈழமும் தமிழும்

1614ஆம் ஆண்டளவில் போர்த்திக்கேச துறவியார் ஒருவர் இந்தியாவின் கோவா-கொச்சின் பிரதேசத்தி லிருந்து மரக்குற்றியொன்றை யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவந்துள்ளார். இந்த மரக்குற்றியைக் கொண்டு மாதா சிலையினை யாழ்ப்பாணத்து ஆசாரியார் ஒருவரைச் செய்யும்படி பணித்துள்ளார். ஆசாரியார், தமது வீட்டில் வைத்து சிலை செய்யத் தொடங்கியுள்ளார். இதன்போது பற்பல அற்புத நிகழ்வுகள் அண்டிய பிரதேசங்களில் நிகழ்ந்ததை ஆசாரியாரும் மக்களும் கண்டனர். இதன் காரணமாக ***அற்புத மாதா*** என்னும் பெயரினை இந்த மாதா சிலை பெற்றுக்கொண்டது. இந்தச் சிலையானது தற்பொழுது கோவாவில் வைக்கப்பெற்றுள்ளது.

புகழ்பெற்ற இந்தச் சிலையைச் செய்த தமிழ்க் கலைஞரின் பெயர் **ஆனைக்குட்டி ஆசாரி** ஆகும்.

"அட்டேன்ஷன்" பொலீஸ் அதிகாரிகள் விறைப்பாய் நின்றனர், மேலதிகாரி அனைவரையும் நோட்டமிட்டார், அவர்களின் நேர்த்தியைக் கண்களால் மேய்ந்தார், ஆடைகள் அனைத்தும் தூய்மையாகவே இருந்ததைப் பரிசோதனையின் பின்னர் உறுதிப்படுத்திக் கொண்டார். மேற் கொண்டு அவர் எதுவும் பேசவில்லை. பொலிசார் அனைவரும் நெஞ்சை நிமிர்த்தி அலாதி கம்பீரத்துடன் நின்றனர்.

புன்னகையின் பின்னுள்ள மர்மம்

"இந்நாட்டின் சட்டத்தை மதித்து, அதன் தரத்தைக் காத்து அதை நிலைநாட்ட எனது உயிரையும் அர்ப்பணித்து ஈடுபாட்டுடன் எப்போதும் செயற்படுவேன்.'

காக்கிச் சட்டையின் மகோன்னதத்தை நிலைநாட்ட அவர்கள் எடுத்துக் கொண்ட சத்தியப்பிரமாணத்தின் அதிர்வுகள் அவர்களுக்குள்ளால் நகர்ந்திருக்க வேண்டும், அவர்கள் போர்த்தியிருந்த அமைதி அப்படித்தான் இருக்கும் என்று சொன்னது.

போக்குவரத்துப் பொலிசாரின் பக்கம் ஆழமான பார்வையொன்றை வீசியெறிந்தார் மேலதிகாரி, அவர்கள் ஒருமுறை அசைந்து மீண்டும் விறைப்பாகும் அளவுக்கு அது அர்த்தமிக்க தாகவும், தாக்கமிக்கதாகவும் இருந்தது. எல்லோரும் புதிதாய் அன்றுதான் பதவியேற்றது போன்ற உணர்வுடன் அவரவர் கடமைகளைப் பொறுப்பேற்றனர், அமைதியாகக் கலைந்து சென்றனர். தினமும் காலையில் இப்படித்தான் அவர்கள் புதிதாய்ப் பட்டை தீட்டப்படுவர், ஆனால் பிரதிபலிப்பது என்னவோ வழமையான பழைய பிம்பம்தான்.

****

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரைப் போக்குவரத்துப் பொலிசார் நிறுத்தினர். பவ்வியமாக ஒரு புன்னகையுடன் அவர்கள் சைக்கிளை ஓரம் கட்டினர்.

பொலிஸ் சிப்பாய் அவர்களை நெருங்கி வந்து விசாரித்தான்.

"வாகன லைசன்ஸ் இருக்குதா?"

"இல்ல சேர்"

"ஆள் லைசன்ஸ் இருக்குதா?"

"இல்ல சேர்"

"இன்ஷூரன்ஸ் இருக்குதா?"

"இல்ல சேர்"

"இதெல்லாம் இல்லாம சைக்கள் ஓட ஏலாது என்பது உனக்குத் தெரியாதா?"

"தெரியும் சேர்"

"பைன் அடிச்சா பதினைந்தாயிரத்துக்கு மேல வரும் தெரியுமா"

"தெரியும் சேர்"

"இந்த சைக்கிள் உன்னோடதா?"

"இல்ல சேர்"

சிப்பாய் முறைத்துப் பார்த்துக் கொண்டே ..அப்படின்னா இறங்கு கீழ இந்த சைக்கிள் ஸ்டேசனுக்குத்தான் கொண்டு போகனும், உனக்கும் வழக்குப் போடனும்"

திருடன் புன்னகைத்தான்; ஐயாயிரம் ரூபாய் நோட்டை நீட்டினான்

சிப்பாய் முகம் மலர்ந்து பல்லெல்லாம் தெரிய இழித்துக் கொண்டே அவர்களை போகப் பணித்தான். மேலதிகாரி கேட்டான் "என்ன ராலாமி? ஏதும் பிரச்சினையா?"

சிப்பாய் சொன்னான் "இல்லை சேர் ரொம்ப நல்லங்க "

மேலதிகாரி புன்னகைத்தான்

அவர்கள் கையசைத்து விட்டு விடைபெற்றுச் சென்றனர்.

ஜனாதிபதி உரையாற்றினார் "இந்த நாட்டின் சட்ட ஒழுங்கை நிலை நாட்ட அனைவரும் அர்ப்பணிப்புடன் பாடுபடவேண்டும்"

அதிகாரிகள் முகத்தை முகத்தைப் பார்த்துப் புன்னகைத்துக் கொண்டனர்.

ஜனாதிபதி உரையாற்றிக்கொண்டே இருந்தார்.

❍❍❍

குறுங்கதை

முஸ்டீன்

நூல் :
ஞானப்பழம் (பாநாடகம்)
ஆசிரியர்:
அகளங்கன்
வெளியீடு:
வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் (2017)
விலை:
ரூபா 200.00

ஞானப்பழம் என்ற பெயரில் அமைந்த சைவசமயம் சார்ந்த இந்நூலில், ஞானப்பழம், ஞானக்குழந்தை, நாமார்க்குங் குடியல்லோம், நம்பி ஆரூரர், பிட்டுக்கு மண் சுமந்த பெருமான் ஆகிய ஐந்து பாநாடகங்கள் அடங்கியுள்ளன. ஆசிரியர், மேடை நாடகம், வானொலி நாடகம், நாட்டிய நாடகம் போன்றவற்றை எழுதிய அனுபவத்தோடு இந்தப் பாநாடக நூலைத் தந்துள்ளார். இந்தப் பாநாடகங்கள் படித்துப் பயன்பெறவும் நடிப்பதற்கும் ஏற்றவகையில் நல்ல தமிழில் எழுதப்பட்டுள்ளன. இந்த நாடகங்களின் விடயப் பொருட்கள் புராணங்களிலிருந்து பெறப்பட்டவை. தற்காலத்தில் சமய பாட நூல்களிலும் மாணவர்கள் இவற்றைப் படித்து இந்நாடகங்களின் விடயப் பொருட்களுடன் பரிச்சயம் உடையவர்களாக இருப்பர். இந்நாடகங்களில் இடம்பெற்றுள்ள தேவாரங்களை மனனம் செய்திருப்பர். அந்த வகையில் இப் பாநாடகங்கள் மாணவர்களைப் பெரிதும் கவரவல்லன.

பாடசாலை மாணவர்கள் நடிப்பதற்கு ஏற்ற வகையில் அமைந்த இந்நாடகங்களை எழுதி நூலாக்கித் தந்த அகளங்கன் பெரும் பாராட்டுக்குரியவர். தமிழ்ப் பிள்ளைகள் கல்வி கற்கும் பாடசாலை நூலகங்கள் யாவற்றிலும் இந்நூல் இடம்பெறவேண்டும்.

பகிர்வோம்....

ஈழமும் தமிழும்

மாதகல் பகுதியைச் சேர்ந்த கந்தகுலோத்துங்க முதலியார் என்பவர் கி.பி.1760களில் வாழ்ந்தவர். இவரின் மகனான ***சீமான் கணக்கர்*** என்பவர், தஞ்சை அரசிடம் தமது புலமையைக் காட்டி ***கவீச்சுரன்*** என்கிற பட்டத்தையும் அனேக விருதுசின்னங்களையும் பெற்றுள்ளார். இவரின் மகனும் ***அந்தோனிப்பிள்ளை நாவலர்***, என்ற நாவலர் பட்டத்தைத் தாங்கிய பெரும் புகழ்படைத்த வித்துவானாக விளங்கியுள்ளார் எனும் இலக்கியப் பதிவுகள் உள்ளன.

காற்றுமகன்

பொலிகை ஜெயா – சுவிஸ்

நீலவான வீதியில்
நீவரைந்த கோலத்தில்
நீண்டு சென்ற
ஓவியன் தீட்டிடாத
ஒரு கோடிவர்ணம்
அற்புத ஆதவன்
ஆனந்தக் கதிர்களால்
ஆங்காங்கே
ஆலம் குருவிகள்
ஆர்ப்பாட்டத்துடன்
சிறகு விரித்தன
சின்னதுக்கு இரைதேடி
மூடுபனிதென்பட
மூச்சைப் பிடித்தது போல்
முத்தாரமுகத்துடன்
இலங்கை வேந்தன்
இராவணனின் புஸ்பகம்
இலங்காபுரிக்கு பறந்தது
ஆதவன் மறைவிலும்
அம்புலியின் வரவிலும்
அண்டம் காக்கா தூங்கிட
அன்னம்மா அரிசியிடிக்க
அந்தோனி அணியத்துடன்
அறகுளா மீன்பிடிக்க
அரவம் ஊர்ந்திட
ஆந்தை அலறிட
வெளவால் இலுப்பையில்
பழம் தின்ன
காவல் காத்திடும்
கந்தனின் வைரவர்
குரைத்து சிணுங்கி
கள்வனைக் காட்டி நின்றது

அரசியல் தத்துவமேதை

நிக்கோலா மாக்கியவல்லி

புலேந்திரன் நேசன்
உதவி விரிவுரையாளர்,
மெய்யியல் உளவியல் துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்.

உலக மெய்யியல் தினம் *UNESCO* அமைப்பினால் *2002* ஆம் ஆண்டு தொடக்கம் ஒவ்வொரு வருடமும் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. வருடத்தின் நவம்பர் மாதம் மூன்றாவது வாரத்தின் வியாழக்கிழமைகளில் இந்நிகழ்வு சர்வதேச அளவில் நடைபெறுகின்றது. பாரிசில் உள்ள *UNESCO* வின் தலைமைச் செயலகத்தில் இடம்பெறும் பிரதான நிகழ்வுகளைத் தொடர்ந்து ஏனைய நகரங்களில் இது தொடர்பான ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன. இந்த வருடமும் நவம்பர் *19*ம் திகதி வியாழக்கிழமை கொண்டாடப்பட்டது.

அறிமுகம்

இத்தாலியின் புளோரன்ஸ் நகரம் பெற்றெடுத்த தவப்புதல்வனாக அரசியல் தத்துவத்தில் ஒரு திருப்பு முனையாகத் திகழ்ந்த மாக்கியவல்லி காணப்படுகின்றார். புளோரன்ஸ்நகரத்தில் *1469*ஆம் ஆண்டு வைகாசி மாதம் *3*ஆம் திகதி நிக்கலோ மாக்கியவல்லி பிறந்தார். மறுமலர்ச்சிக் காலத் தத்துவவாதியான இவரது குடும்பம் பணவசதியோ, சமூக அந்தஸ்த்தில் உயர்ந்த குடும்பமாகவோ இருந்திருக்கவில்லை. ஆனால் நகரமட்ட மானிட வட்டத்திற்குள் புகழ்வாய்ந்த குடும்பமாக காணப் பட்டிருந்தது. மாக்கியவல்லி புளோரன்ஸ் பல்கலைக்கழகத்தில் தனது உயர்கல்வியை பூர்த்தி செய்ததுடன் இலத்தீன் மொழி, மானிடவியல் ஆகிய துறைகளில் புலமை வாய்ந்தவராகவும் காணப்பட்டிருந்தார். இவர் தனது *29*ஆவது வயதில் *Florentine* குடியரசின் இரண்டாவது *Chancellor* பதவியை பொறுப்பேற்றுக் கொண்டதுடன் வெளிவிவகாரங்களுடன் தொடர்புடைய விடயங்களுக்கு பொறுப்பாகவும் இருந்தார். இது அவருக்கு அரசியல் பற்றிய தெளிவினைப் பெறுவதற்கு பெரிதும் உதவியிருந்தது.

மாக்கியவல்லியின் ஆய்வு நூல்களில் *'Prince' 'Discourse'*ஆகிய இரு நூல்களும் மிகவும் பிரபல்யமானதுடன் இவருடைய அனுபவத்தில் இருந்து பிறந்தவைகளுமாகும். *1513*ஆம் ஆண்டு நடுப்பகுதியில் *Prince* என்ற நூலை எழுதியிருந்தார். மிகவும் அர்ப்பணிப்புடனும், கவனத்துடனும் எழுதப்பட்ட இந்நூல் ஆட்சியாளனுக்கு ஆலோசனை வழங்குகின்ற நூலாகவே இருந்தது. *'Discourse'* என்ற நூலில் குடியரசுகளுக்கு இடையிலான உடன்படிக்கை ஒன்றிற்கு வருவதனூடாக கலப்பு அரசாங்கம் ஒன்றை உருவாக்க மாக்கியவல்லி முற்படுகின்றார். இந்நூல் பெருமளவிற்கு புளோரன்ஸ் நகரத்தின் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டே எழுதப்பட்டிருந்தது. ஆயினும் *1512*ஆம் ஆண்டு *The Art of War* என்ற நூல் ஒன்றை இதற்கு முதல் மாக்கியவல்லி எழுதியிருந்தமை குறிப்பிடத்தக்கது. பொதுவாக மாக்கியவல்லியின் அனேக எழுத்துக்

களுக்கான சரியான காலம் இன்றுவரை தர்க்கத்திற்குரியதாகும்.

The Prince என்னும் நூலானது இவருக்கு பெருமையை தேடித்தந்த நூலாகவும், ஓர் அரசன் எவ்வாறு தன் அதிகாரத்தைக் கைக் கொள்ளவேண்டும், குடியாட்சியில் நிகழும் தவறுகளை நீக்கி முடியாட்சியினால் எவ்வாறு ஓர் பூரணத்துவ அரசாட்சியை நடத்த முடியும் என்பதை வழிகாட்டுவதாக இந்நூல் காணப்படுகின்றது.

மத்திய காலத்தில் இத்தாலி அரசியல் ரீதியாக Florence, Milan, Naples, enice, Rome என ஐந்து பெரும் அரசுகளாக பிரிக்கப் பட்டிருந்தன. ஐக்கிய இத்தாலியினை உரு வாக்கக்கூடிய அதிகாரம் யாரிடமும் காணப் பட்டிருக்கவில்லை. ஐந்து அரசுகளும் வெவ் வேறு திசைகளில் சென்றதுடன் சர்வாதிகாரப் போக்குடனும் செயற்பட்டன. இத்தாலியில் ஒற்றுமை காணப்படாமையால் அச்சுறுத்தலும், ஆக்கிரமிப்பும், எப்போதும் இருந்து வந்ததுடன், இதிலிருந்து மீளுகின்ற ஆர்வமும் இருக்கவில்லை. இத்தாலி இவ்வாறு பலவீனப் பட்டு இருக்கும்போது திருச்சபையும், பாப் பாண்டவரும், தம்மை மேலும் பலமான நிலையில் நிலைநிறுத்தி வைத்துக் கொள் வதிலேயே முழு முயற்சியில் ஈடுபட்டனர். பாப்பாண்டவரினதும், திருச்சபையினதும் இச் செயற்பாடு மாக்கியவல்லிக்கு வெறுப்பினை ஏற்படுத்தியது. மாக்கியவல்லி திருச்சபைக்கும், பாப்பாண்டவருக்கும் எதிரான கருத்துக்களை உருவாக்கி திருச்சபையின் பிடியிலிருந்து இத்தாலியை மீட்க விரும்பினார்.

மேலும் இத்தாலியை அந்நியர்களின் ஆதிக்கத்திலிருந்து விடுவித்து, சிதறுண்டு கிடந்த சிற்றரசுகளை ஒன்றுபடுத்தி வலிமை யானதொரு நாடாக உலக அரங்கில் உயர்த்த வேண்டும் என்ற வேட்கை மாக்கியவல்லியின் மனதில் ஆழமாக வேரூன்றி இருந்ததை உணரமுடிகிறது. அதிகாரங்களை ஒருமுக மாகக் குவித்துத் தன்னகத்தே வைத்துக் கொள்ளும் வலிமை மிக்க முடியாட்சியால் தான் இதனைச் செம்மையாகச் செய்ய முடியும் எனக் கருதியதோடு அதற்குச் செயல் வடிவமும் கொடுத்தார். புகழ் மிக்கதும் நீண்ட பாரம்பரியச் சிறப்பு வாய்ந்ததுமான 'மெடிசி' அரச பரம்பரையின் ஆட்சியால் மட்டுமே இத்தாலியின் காயங்களைக் குணப்படுத்திக் கண்ணீரைத் துடைத்து தலையை நிமிர்த்த முடியும் என்று மாக்கியவல்லி திட்டவட்டமாக நம்பினார். அவரின் சிந்தனைக்கு செயலு ருவமும் கொடுக்கலானார்.

The Prince கூறும் இளவரசனின் அதிகாரம்

இளவரசன் 'சிங்கத்தைப் போல் வீரத்துடனும் நரியை போல் தந்திரத்துடனும்' செயற்படல் வேண்டும். என்ற வகையிலே மாக்கியவல்லி இளவரசனுக்கு அதிகாரத் தினை எவ்வாறு பேணுவது என்பது தொடர்பாக ஆலோசனை வழங்குகின்றார். ஆட்சியாளன் பெருந்தன்மையுடனும் தாராண் மைச் சிந்தனையுடனும் நடந்துகொள்வதை தவிர்க்க வேண்டும். எப்பொழுது எது அவசியமோ அதனை வெளிப்படுத்தக் கூடிய பலமுடையவனாக ஆட்சியாளன் இருக்க வேண்டும். அரசு ஒன்றினை பலம், பாதுகாப்பு, திறமை, நீடிப்பு என்பவற்றுடன் ஆளுவது இளவரசனின் பொறுப்பாகும். எவ்வேளையிலும் பிறரைவிட உயர்நிலையினை எடுக்கக் கூடியவனாகவும், எதனையும் தொடக்கி வைக்கக் கூடியவனாகவும் ஆட்சியாளன் இருக்க வேண்டும். பயம் என்பது தெரியாதவனாக இருக்க வேண்டும். பயம் தெரியாதவனாக இருந்தால்தான் ஆட்சியாளன் மீது பயபக்தி மக்களுக்கு ஏற்படும். ஆளுவதற்கான வழிமுறைகளை தெரிவு செய்வதில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். சொத்துக்களையும், பெண்களையும் தனக்காக தேடுவதை விரும்பக் கூடாது. இவைகளில் ஆட்சியாளன் நாட்டமுள்ளவனாக இருந்தால் மக்களின் ஆதரவை இழப்பதுடன் மக்களில் தங்கியிருக்க வேண்டியும் ஏற்படும். சூழ்நிலைகளுக்கு ஏற்ப தன்னை மாற்றி நற்குணத்துடனும், கொடூரத்துடனும் நடந்து கொள்ள வேண்டும். தனக்கு உதவியாக அலுவலர்களையும், ஆலோசகர்களையும், தெரிவு செய்யும் போது மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். தனக்கு கீழ்ப்படிய மறுப் பவர்களை, கட்டுப்பட மறுப்பவர்களை தெரிவு செய்யக்கூடாது.

ஆட்சியாளன் தனது நிலப்பிரதேசத்தினை விஸ்தரிக்க முயற்சி செய்த வண்ணம் இருக்க வேண்டும். பலவீனமான அரசுகளை தாக்குகின்றவனாகவும், பலமான அரசுகளுடன்

கூட்டுச் சேர்ந்து 'அதிகாரச் சமநிலையினை' பேணுகின்றவனாகவும் இருக்க வேண்டும். ஆட்சியாளன் ஒருபோதும் தனித்து இயங்குகின்ற கொள்கையினைப் பின்பற்ற முயற்சிக்கக் கூடாது. கூட்டாக இயங்குகின்ற கொள்கையினை எப்போதும் பின்பற்று கின்றவனாக இருக்க வேண்டும். உள்நாட்டு மட்டத்திலும், சர்வதேச மட்டத்திலும், 'நடுநிலை வகித்தல்' என்ற கொள்கையினை உருவாக்கி பின்பற்றுதல் என்பது சாத்தியமற்றதாகும். எனவே தான் மாக்கியவல்லி 'சிறப்பான பக்கத்தில் சாய்ந்திருப்பது எப்போதும் சிறப்பானது' என்ற கருத்தினை முன் வைக்கின்றார்.

துணிவு, வீரம், தந்திரம், கூர்மையான மதிநுட்பம் போன்ற பண்புகள் கொண்டவனாக இளவரசன் காணப்படல் வேண்டும். இவைகள் யாவும் அதிகாரப் போராட்டத்தில் ஒரு ஆட்சியாளனுக்கு அவசியமானதாகும். ஆட்சியாளன் போதிய துணிச்சலுடன் தனது எதிரியுடன் யுத்தம் புரியவேண்டும். பொறி களை வைக்கக்கூடிய தந்திரம் தெரிந் தவனாக இருக்க வேண்டும். துணிவு, தந்திரம், இவைகள் இரண்டும் அரசியல் வாழ்க்கைக்கு ஒரு ஆட்சியாளனுக்கு அவசியமானதாகும்.

குடியாட்சியின் மீதான நம்பிக்கையற்ற தன்மையும், அதன் மூலம் முடியாட்சியை சிபார்சு செய்தலும்.

மறுமலர்ச்சி எனும் அறிவுப் புரட்சி தோற்றம் பெற்ற இத்தாலியினை ஒருமைப் படுத்த வலிமை மிக்க முடியாட்சியையே ஏற்படுத்த முழு மூச்சாக செயற்பட்டார். மாக்கியவல்லியின் கருத்துப்படி மனிதர்கள் அடிப்படையில் பலவீனமானவர்களாகவும், இழிவானவர்களா கவுமே காணப்படுகின்றார்கள். நன்றியில்லா தவர்களாகவும், வஞ்சனைமிக்கவர்களாகவும், அச்சம் நிறைந்தவர்களாகவும், அபாயத்தினை சந்திக்கத் தயங்குகின்றவர்களாகவும் காணப் படுகிறார்கள். மனிதர்களது மனவிருப்பங்கள் நிறைவற்றனவாகவும், மனதில் திரும்பத் திரும்ப இவ்விருப்பங்கள் வருகின்றவை களாகவும் காணப்படுகின்றன. அடிப்படையில் மனித இயல்பு சுயநலமானதும், தற்பெருமை மிக்கதுமாகும். மனித வாழ்க்கை அடிப் படையில் மிருகங்களின் வாழ்க்கை போன்றதாகும். ஆனால் தமது பாதுகாப்புக் கருதி சர்வதேச

ஊழல் கொண்ட சமுதாயம் ஒருபோதும் தானாகத் திருந்தமாட்டாது. எனவே அதனைத் திருத்துவதற்கு ஆட்சியாளனே முயற்சி எடுக்க வேண்டும்.

ரீதியாக தமக்கிடையில் ஐக்கியப்படல் வேண்டும் என எண்ணுகின்றார்கள்.

ஒழுக்கக் கேடானது, தீயது என்பவற்றி லிருந்து நல்லது, நேர்மையானது எனக் கருதப்படுகின்றவைகளை தரம் பிரித்து அறிந்து கொள்ளும் ஆற்றல் மனிதர்களிடம் காணப்படுகின்றது. ஆயினும் ஒழுக்க மற்றவர்களாகவே மனிதர்கள் வாழ்கின்றார்கள். சமூகத்தில் நல்லதைச் செய்ய வேண்டும் என்ற நிர்ப்பந்தத்திற்கு உள்ளாக்கப்படுவதால் தமது ஒழுக்கமற்ற பண்பை மனிதர்கள் மறைக்கின்றார்கள் என மாக்கியவல்லி வாதிடுகின்றார்.

மனிதன் சமூக விரோதியாகவும், நேர்மையில்லாத் தன்மை கொண்டவனாகவும், அராஜகம், பணப்பேராசை, காமவெறி போன்ற குணாம்சங்கள் கொண்டவனாகவும் காணப்படுகின்றான். சொத்துக்களை கைப் பற்றிக் கொள்வதற்காக தனது தந்தை யினை கூடக் கொலைசெய்வதை ஏற்றுக் கொள்ளுகின்ற மன உணர்வு கொண்டவனாக மனிதன் காணப்படுகின்றான். மனிதனது நாட்டமெல்லாம் அதிகாரம், சொத்து, புகழ் இம்மூன்றினையும் எவ்வாறான வழி வகைகளை பின்பற்றியாவது தேடுவது, அடைவது என்பதாகவே உள்ளது. இதனால் மனிதன் ஆக்கிரமிப்பு, சட்ட விரோதமாக கைப்பற்றுதல், போன்ற மன உணர்வினால் தூண்டப்படுகின்றவனாக காணப்பட்டான். மக்களின் சந்தோசமான மகிழ்ச்சியான வாழ்க்கை என்பது மட்டுப்படுத்தப்பட்டதாக மாறியது. இது சமூக வாழ்க்கையில் அதிருப்தியை ஏற்படுத்த சமூக முரண்பாடு, அராஜகம் என்பன முதன்மையடையலாயிற்று என மாக்கியவல்லி கூறுகின்றார். மனிதனிடம் நேர்மையினையும், நீதியையும் அடிப்படையில் ஏற்படுத்த வேண்டுமாயின் ஒழுக்கம் நிறைந்த ஆட்சியாளனிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைக்க வேண்டும். இவ்வாட்சியாளன் மனிதர்களுக்கிடையில் பலமும், துணிவும் உள்ள தலைவனாகவும், ஆட்சியாளனாகவும், உருவாக வேண்டும் என மாக்கியவல்லி வாதிடுகின்றார்.

அரசுக் கட்டமைப்பு

ஆட்சியாளன் புதிய அரசை உருவாக்கவும், பழைய அரசை புதிப்பிக்கவும், பழைய அரசாங்கத்தினை புதிப்பிக்கவும் முயற்சிப்பவனாக இருக்க வேண்டும். ஆட்சியாளன் அரசை உருவாக்குகின்ற கலைஞன் மட்டுமல்ல. சமுதாயத்தினை, பொருளாதாரத்தினை, சமயத்தினை உருவாக்குகின்ற கலைஞனாகவும் இருக்க வேண்டும்.

ஆட்சியாளனின் சட்டங்கள் அரசியலுக்கு ஆரோக்கியத்தினையும், தெளிவினையும், தருவதாக இருக்க வேண்டும். ஊழல் கொண்ட சமுதாயம் ஒருபோதும் தானாகத் திருந்த மாட்டாது. எனவே அதனைத் திருத்துவதற்கு ஆட்சியாளனே முயற்சி எடுக்க வேண்டும். வெற்றிகரமான அரசு ஒன்றினை உருவாக்க தனிமனிதனே முயற்சிக்க வேண்டும். மக்களின் இயல்புகளை அடிப்படையாகக் கொண்டே சட்டங்களும், ஆட்சியும் உருவாக்கப்படல் வேண்டும்.

பலமான அரசு ஒன்று உருவானால் தான் பொது விவகாரங்களில் மக்கள் பங்குபற்றமுடியும். குடியரசு ஒன்றில்தான் தாராண்மை என்பது சாத்தியமானதாகும். நாட்டுபற்று உள்ளவர்கள்தான் உண்மையானவர்களாகவும், நேர்மையானவர்களாகவும் காணப்படுவார்கள். இவர்களால் தான் தாராண்மை பாதுகாக்கப்படும். அரசு அயலவர்களைத் தொடர்ந்து அவதானித்து வரவேண்டும். அயலவர்களிற்குள் அரசின் குறிப்பிட்ட எதிரி காணப்படுவான். இவ் எதிரியை அழிப்பதற்காக அரசு தனது அதிகாரத்தினையும், நிலப்பரப்பினையும் அதிகரிக்க கட்டாய முயற்சி செய்ய வேண்டும். இவ்விடத்தில் அரசை மாக்கியவல்லி வரை விலக்கணப்படுத்தும்போது 'பாது காப்பினைப் பேணுவதற்காக பலத்துடன் ஒழுங்கமைக்கப்பட்டதே அரசு' என்கின்றார்.

அரசு பலம் பெறுவதற்கு இராணுவத்தின் முக்கியத்துவத்தினை மாக்கியவல்லி எடுத்துக் காட்டுகின்றார். சிறப்பானதும், பலமானதுமான அரசு மக்கள் இராணுவத்தினை கொண்டிருக்குமாயின் அது வெற்றிகரமாக செயற்படமுடியும். அரசு பலம் பெறுவதற்கு மக்கள் இராணுவ அமைப்பை சிறப்பாக கட்டியெழுப்ப வேண்டும். மக்கள் இராணுவம் அரசு ஒன்றின் பிரதான தூணாகும். இதற்காக மக்களில் 17 வயதிற்கும் 40 வயதிற்கும் இடைப்பட்ட ஆண்கள் அனைவருக்கும் கட்டாய இராணுவப் பயிற்சி வழங்கப்பட வேண்டும். இவர்கள் இராணுவ நுட்பங்கள் யாவும் கற்றவர்களாகவும், உளவியல் ரீதியாக எவ்வேளையிலும் யுத்தத்தினை சந்திக்க தயாரானவர்களாகவும் இருக்க வேண்டும்.

திறமை வாய்ந்ததும், சிறப்பான ஒழுக்கம் நிறைந்ததும், கீழ்படிவினைக் கொண்டதும், ஆயுதங்களைக் கொண்டதுமான இராணுவக் கட்டமைப்பினை உருவாக்கி பராமரிக்க வேண்டியது ஆட்சியாளனின் கடமையாகும். மிகவும் சிறப்பாக பயிற்றப்பட்ட இராணுவத்தினை கொண்டிருக்கும் அரசு, தனது அயலவர்களிலிருந்தும் ஏனைய ஆக்கிரமிப்பு நோக்கம் கொண்ட அரசுகளிலிருந்தும் எழும் அச்சுறுத்தல்களை முறியடிக்க முடியும் என மாக்கியவல்லி ஆலோசனை கூறுகின்றார். மாக்கியவல்லி இது தொடர்பாக மேலும் கூறும்போது 'ஒவ்வொரு அரசினதும் பிரதான அடித்தளமாக சிறப்பான சட்டங்களும், சிறப்பான ஆயுதங்களுமே இருக்க வேண்டும். அரசு ஒன்று சிறப்பான சட்டங்களினையும், சிறப்பான ஆயுதங்களினையும் கொண்டிருக்காவிட்டால் எங்கே சிறப்பான சட்டங்களும் ஆயுதங்களும் காணப்படுகின்றனவோ அதனைத் தவிர்க்க முடியாது பின்தொடரவேண்டி ஏற்படும்' என்கின்றார்.

மாக்கியவல்லி அரசையும், ஆட்சியாளனையும் பலம், அதிகாரம் என்ற நோக்கிலேயே பார்க்கின்றார். இவரைப் போன்று இவருக்குப் பிற்பட்ட காலத்திலும் அரசையும், ஆட்சியாளனையும் அதிகார நோக்கில் பலர் பார்த்துள்ளனர்.

அந்த வகையிலே தொகுத்து நோக்கும் போது 'மறுமலர்ச்சிக்கால முதுபெரும் தத்துவவாதியான இவரது சிந்தனைகள் அராஜகமும், ஒற்றுமையும் இன்றி சிதைவுண்டு பகைமை புரையோடிக் காணப்பட்ட இத்தாலிய தேசங்களை ஒருமைப்படுத்தி ஒரு குடையின் கொண்டு வந்து நல்லாட்சி மிளிர பெரிதும் சர்வவல்லமை பொருந்திய முடியாட்சியையே சிபார்சு செய்ததுடன், அதற்குச் செயலுருவமும் கொடுக்க முனைந்தார். அரசுக் கட்டமைப்பு, படைஅமைப்பு, நிர்வாக அமைப்பு, இராணுவம்' என அனைத்து விடயங்களையும் தெளிவாக தத்துவக் கண்ணோக்கிலே தெளிவு படுத்தியுள்ளமையும் சிறப்புக்குரியதாகும்.

❍❍❍

ஒரு பொய்!

உஷா ஜவாகர்
அவுஸ்திரேலியா

அது 23ம் திகதி பெப்ரவரி மாதம் 2017 ஆம் ஆண்டு. பானு கண்ணனைத் திருமணம் செய்துகொண்டு சிட்னிக்கு வந்து நான்கு வருடங்கள்தான் ஆகின்றன. சிட்னியில் .ஃபிளெயிங்டனில் யாரோ ஒரு பணக்காரரின் பின்வீட்டு அனெக்ஸில்தான் பானுவும் கண்ணனும் தங்கியிருந்தார்கள்.

இருவரும் வெவ்வேறு .ஃபக்டரிகளில் வேலைபார்த்து வந்தார்கள். டன் டன்னாக வந்து குவியும் மரக்கறிகளில் நல்லதைத் தெரிவு செய்து பொலித்தீன் பைகளில் போட்டு பாக் செய்து கொடுக்கவேண்டும். அது இலேசான வேலையல்ல. காலை 5.30 மணிக்குத் தொடங்கினால் மதியம் 2.30 மணி வரை கால்கடுக்க நின்று வேலைசெய்ய வேண்டும்.

இருவரும் வேலைக்குச் செல்வதால் அவர்களது வாழ்க்கை வண்டி தடம்புரளாது சீராகவே ஓடிக்கொண்டிருந்தது. பானுவுக்கு இப்போதுதான் 24 வயதாகிறது. மீனைப் போல் விழிகள். புள்ளிமானைப் போல் மருண்ட பார்வை. ஒடிசலான தேகம் நல்ல களையான தோற்றம். அதுதான் அவளுக்கு 20 வயதிலேயே திருமணம் முடிந்துவிட்டது. பேசிச் செய்த திருமணம்தான். கண்ணன், பானுவுக்கு தூரத்துச் சொந்தம்.

பானுவின் தாய் கனகம் அம்மாள் இருந்த ஒரே ஒரு காணியையும் விற்றுத்தான் பானுவின் திருமணத்தை ஒப்பேற்றினாள். பானுவின் தந்தை சில வருடங்களுக்கு முன் காலமாகிவிட்டார். ஒரே ஒரு அண்ணன் இயக்கத்திற்கு சிரித்த முகத்துடன் செந்தழிப் புடன் சென்றவன் சீர்குலைந்த சவமாகத்தான் திரும்பிவந்தான். பானுவுக்குக் கீழே ஒரு தங்கை. அவள் பெயர் கீதா. அவள் இப்போது பத்தாம் வகுப்பு படிக்கிறாள். கடைசித்தம்பி ரவி! யாழ்நகர் போரின் உக்கிரத்தால் சூழப் பட்டிருந்தபோது பிறந்தாலோ என்னவோ மூளை வளர்ச்சி குறைந்தவனாய் இருந்தான். காதும் கேட்காது பேசவும் வராது.

பானுவுக்கு சிட்னியில் யாரையாவது இளவயதினரைப் பார்க்க நேர்கையில் அவளது தம்பி, தங்கையின் முகம் நெஞ்சிலே நிழலாடும். கண்களின் ஓரம் நீர் கசியும்.

சிட்னியில் இருந்து யாராவது யாழ்ப்பாணம் போகிறார்கள் என அறிந்தால் சில நல்ல தரமான உடைகளை தனது தங்கைக்கும் தம்பிக்கும் வாங்கி அனுப்புவாள். பானுவுக்கு தனது அம்மா வுக்கு கொஞ்சம் பணம் அனுப்ப மிகவும் ஆசையாக இருந்தது. கண்ணனிடம் தன் ஆசையை மெல்ல, "கண்ணா என்ர அம்மாவும் அங்க சரியாக கஸ்டப்படுகிறா. என்ர சம்பளத்தில் 400 அனுப்பவா?" எனத் தயங்கித் தயங்கிக் கேட்டாள்.

"அதெல்லாம் உன்ர மாமா உன்ர குடும்பத்தை கவனமா பார்த்துக் கொள்ளு வார். நீ ஒண்டும் இங்கிருந்து காசு அனுப்பத் தேவையில்லை. இங்க நாங்கள் உழைக்கிற ஒவ்வொரு டாலரையும் சேர்த்தாத்தான் இரண்டு அறையுள்ள பிளாட் ஒன்றை

எங்கேயாவது வாங்கலாம். அல்லாட்டி காலம் முழுக்க இந்த ஒரு அறைக்குள்ளேதான் நாங்கள் எங்களின்ர சீவியத்தை நடத்த வேண்டும்" என கண்ணன் சீறிப்பாய்ந்தான்.

"அதில்லை கடைசித்தம்பி ரவிக்கு அடிக்கடி வலிப்பு வருகிறதாம், அதுதான் மருந்து வாங்க எண்டாலும் கொஞ்சம் காசு அனுப்ப யோசிச்சேன்" என கண்கள் கலங்க கூறிய பானுவைப் பார்த்து, "உன்ர யோசனை எல்லாம் நாங்கள் வாங்கப் போகிற வீட்டிலதான் இருக்க வேணும் தெரியுதா? இந்த குளிருக்க கார் ஒன்றுகூட வாங்காமல் நான் காசைச் சேர்க்கிறேன்! நீ என்னெண்டால்....." என 'புலம்பியபடி அப்பால் சென்றான் கண்ணன். கண்ணனுக்கு தானும் தன்குடும்பமும் நன்றாக இருந்தால் சரி! சில ஆண்கள் அப்படித்தானே வாழ்ந்து வருகிறார்கள். நான் என்ன வெளியாட்களுக்கா? உதவி செய்ய விரும்புறன். என்ர அம்மாவுக்கும் சகோதரங்களுக்கும்தானே உதவி செய்ய விரும்புறன். இந்தக் கண்ணனுக்கு இது விளங்கினாத்தானே!' தனக்குள் புலம்பியபடியே அன்று படுக்கைக்குச் சென்றாள் பானு.

அடுத்த மாதம் மார்ச் மாதம் சிட்னி முருகன் கோவில் திருவிழாவுக்காகக் கொடியேறியது. வெஸ்ட்மீட்ல் (West mead) அமைந்திருக்கும் முருகன் கோவில் திருவிழா. அது ஆரம்பித்துவிட்டால் அங்கு சைவர்களுக்கு பெரிய கொண்டாட்டம்தான். முருகன் கோவிலுக்கு வெளியே முருகன் மயிலுடன் நிற்கும் படத்தைப் பெரிதாகக் கீறி வைத்துவிடுவார்கள். இரவில் கோவிலைச் சுற்றிவர பல்புகள் பளீரிட்டுக் கொண்டிருக்கும்.

10நாள் திருவிழாவில் ஒவ்வொருநாள் மதியச் சாப்பாட்டுக்கும் பூசைக்கும் ஒவ்வொரு Suburb ஐ சேர்ந்தவர்கள் பொறுப்பெடுப்பார்கள்.

அதைவிட சிட்னியில் உள்ள பெரும்பாலான வசதி படைத்த பெண்கள் 10 நாள் திருவிழா என்றால் 20 சேலை எடுத்து வைப்பார்கள். காலை ஒரு சேலை, மாலை ஒரு சேலை ஒரு நாளுக்கு இரண்டு சேலை 10 நாளுக்கும் 20 சேலை. கணக்குப் பாருங்கள் சரியாக இருக்கும். அதைவிட உள்ள தங்கச்சங்கிலி, நெக்லெஸ், தங்கக்காப்பு, தங்க மோதிரம் எல்லாவற்றையும் போட்டுக் கொண்டுவந்து நிற்பார்கள்.

சிட்னி முருகன் கோவில் திருவிழாக் காலங்களில் அங்குள்ள வீடுகளில் நிச்சயம் களவு போகும். வீட்டினர் கோயிலில் இருக்க கள்வர்களுக்கு வீடுகளுக்குள் புகுந்து களவெடுப்பது எவ்வளவு சுலபம், அதைவிட விஷேசம் முருகனுக்கு அன்று சாயம்காலம் பூசைக்கு பச்சை நிறத்தில் பட்டுச் சாத்தினால் இந்த சில குறிப்பிட்ட மேல்தட்டுப் பெண்கள் தாங்களும் பச்சை நிறப் பட்டுச்சேலை உடுத்தி வருவார்கள். முருகனுக்கு சிவப்பு நிறத்தில் பட்டு சாத்தினால் இதே பெண்மணிகள் சிவப்பு நிறப் பட்டுச்சேலை அணிந்து வர தவறவே மாட்டார்கள்.

அன்று, சிட்னி முருகன் கோவில் தீர்த்தத்திருவிழா, காலையிலேயே முருகன் கோவிலுக்கு வெளியே தீர்த்தமாடிவிட்டார்.

இரவு பூசைக்கு பானுவும் கண்ணனும் கிளம்பினர்கள். பானு தன் அம்மாபோட்ட ஒரு பவுண் தங்கச் சங்கிலியை கழுத்தில் அணிந்துகொண்டு கிளம்பினாள். அவளது தாலிக்கொடி அவர்களது நண்பரின் வங்கி லாக்கரில் தூங்கிக் கொண்டிருக்கிறது.

சிட்னி முருகன் கோவிலில் நாதஸ்வரக் கச்சேரி பிரமாதமாக அரங்கேறிக் கொண்டி ருந்தது. திருவிழாவுக்கென பிரத்தியேகமாக இலங்கையில் இருந்து இரண்டு பெயர் பெற்ற நாதஸ்வரக் கலைஞர்கள் அழைக்கப் பட்டிருந்தார்கள்.

நாதஸ்வரக் கலைஞர்களும், தவில் வித்துவான்களும் பல பக்திப் பாடல்களையும், சில சினிமாப்பாடல்களையும் மிக மிக இனிமை யாக வாசித்துக் கொண்டிருக்க மகுடிக்குக் கட்டுப்பட்ட நாகம் போன்று பக்தர்கள் கூட்டம் ஆடாமல் அசையாமல் மெய்மறந்தபடி கானமழையில் நனைந்து கொண்டிருந்தார்கள். நாதஸ்வரக் கலைஞர்கள் இப்போது "கந்தா வா கடம்பா வா" என கந்தனைக் மனமுருகி அழைத்துக் கொண்டிருந்தார்கள்.

கோவில் மணிக்கூடு இரவு 9 மணி ஆகிவிட்டதைக் காட்டிக் கொண்டிருந்தது. திடீரென கோயில் மின்சார விளக்குகள் அணைந்தன. ஒரு நான்கு நிமிடத்திற்கு கும்மிருட்டு, ஆங்காங்கே ஆலய விளக்கு களில் இருந்து மட்டும் தீப ஒளி வெளிவந்து கொண்டிருந்தது.

சில குழந்தைகளின் அழுகுரல்கள்,

சில பெண்மணிகளின் கூக்குரல்கள் சில கிழவிகளின் முணுமுணுப்புகள் மட்டுமே ஒலித்துக் கொண்டிருந்தன.

அப்பாடா, நாலே நாலு நிமிடத்தில் போன கரண்ட் வந்துவிட்டது.

ஆனால், நாலைந்து பெண்மணிகள் தங்கள் கழுத்தைத் தடவிப் பார்த்து விட்டு "என்ர தங்கச் சங்கிலியைக் காணேல! என்ர தங்க நெக்லெஸை காணேல!" என கூக்குரலிட்டார்கள். அப்படி சப்தம் எழுப்பியவர் களில் பானுவும் ஒருத்தி. கோவில் சங்க உறுப்பினர்களில் இரண்டு பேர் சங்கிலியைத் தொலைத்தவர்களை கவுண்டர் (Counter) அருகே அழைத்துச் சென்று அவர்களது பெயர், விலாசம், தொலைபேசி இலக்கம் எத்தனை பவுண் சங்கிலி அல்லது எத்தனை பவுண் நெக்லஸை தொலைத்திருக்கிறார்கள் என்ற விபரங்களைப் பதிவு செய்துகொண்டார்கள். அந்தக் கோவில் சங்க உறுப்பினர் அந்தக் குறிப்பிட்ட பெண்மணிகளைப் பார்த்து "சிட்னி முருகன் சந்நிதானத்தில இப்படி அசம்பாவிதம் நடந்தது மிகவும் மனவருத்தத்திற்குரியது. உங்களது சங்கிலிகளை களவெடுத்தவர்களை நாங்கள் எப்படியாவது கண்டுபிடித்து உங்கள் சங்கிலிகளை உங்களிடம் ஒப்படைக்க எங்களா லான எல்லா முயற்சிகளையும் எடுபோம்" என உறுதி கூறினார். அந்தப் பெண்களும் மிக மனவருத்தத்துடன் அப்பால் சென்றனர்.

கோவிலால் புறப்பட்டு வீடு வரும்வரை கண்ணன் பானுவுடன் பேசவில்லை. முகத்தை தூக்கி வைத்துக் கொண்டே வந்தான். பானு கவலை யீனமாக இருந்ததாற்தான் அவளது சங்கிலி தொலைந்துவிட்டது என்பது அவனது வாதம்.

இந்தச் சம்பவம் நடந்த இரண்டாம் நாள் பானு தன் பர்ஸில் ஒளித்து வைத்திருந்த தன் சங்கிலியை எடுத்துக் கொண்டு தமிழ்நகைக் கடை ஒன்றிற்குச் சென்று, தன் நகையை விற்றாள்.

நகைக்கடைக்காரர் தந்த 450 ஐ கவனமாக எடுத்துக் கொண்டு தன்தோழி ரமா வீட்டிற்குச் சென்றாள்.

"ரமா நீ நாலு நாளில் இலங்கைக்குப் போறாய்தானே! இந்த 450 டாலரை என் அம்மாவிடம் கவனமாகக் கொடுத்துவிடு! நான் உன்னிடம் காசு தந்தவிபரத்தை கண்ணனிடம் மட்டும் சொல்லிப் போடாதே! ப்ளீஸ்ரமா" என கெஞ்சலோடு கூறிவிட்ட தன் வீட்டை நோக்கி நடந்தாள் பானு!!

"அப்பனே முருகா! என்ர புருஷன் கண்ணனுக்கு, என்ர சங்கிலி தொலைந்து போய்விட்டது எண்டு பொய் சொல்லிட்டு நான் இப்படிச் செய்றது பெரிய பிழைதான். ஆனா அவரே முன்வந்து என்ர அம்மாவுக்கு நான் காசு அனுப்ப உதவியிருந்தா நான் இப்படி செய்திருக்கமாட்டேன்.

என்னை மன்னிச்சிடு முருகா!

தன் உள்ளம் உருக முருகப் பெருமானிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டே தன்வீடு திரும்பிக் கொண்டிருந்தாள் அந்தப் பேதைப்பெண் பானு!!

❍❍❍

நூல் :
ஊர் ஒன்றின் பெயரறிவோம்
ஆசிரியர்:
உடப்பூர் வீரசொக்கன்
வெளியீடு:
இளம் தாரகை வட்டம்
விலை:
ரூபா 275.00



புத்தளம் மாவட்டம் ஒரு காலத்தில் தமிழரின் பாரம்பரியம், இருப்பு, பண்பாடு விழுமியங்களைக் கொண்ட பிரதேசமாக விளங்கியது. அந்த நிலைமை படிப்படியாகச் சீரழிந்து அடையாளங்கள் அழிந்து போகும் நிலையில். அவற்றை வரலாற்றுப் பதிவாக்கும் நோக்கில் ஆசிரியரால் இந்த நூல் எழுதப் பட்டுள்ளது. இந்நூலில் 77 கிராமங்கள் பற்றிய விபரங்கள் உள்ளன. தமிழ் பேசும் மக்கள் வாழ்ந்தார்கள் என்பதை இனம் காட்டும் முகமாக இருந்த ஊர்ப்பெயர்கள், பேர்மாறி நிலைமாறிப் போன அவலத்தையும் ஆசிரியர் குறிப்பிட் டுள்ளார். அத்தோடு இம்மாவட்டத்தில் அரசியல் அரங்கில் தமிழர்கள் கோலேச்சிய நிலைமை மாறி இன்று அம்மக்களுக்கான அரசியல் தலைமைப் பீடம் அற்றுப்போன நிலைமை பற்றியும் குறிப்பிடுகிறார்.

ஆய்வு நோக்கில் எழுதப்பட்ட இந்த நூல், புத்தளம் மாவட்டத்தின் அடையாளங்களைத் தேடுவோருக்குப் பல வரலாற்றுத் தகவல்களைத் தரவல்ல நூலாக அமைந்துள்ளது. சிறந்த இந்நூ லைத் தந்த ஆசிரியர் உடப்பூர் வீர சொக்கன் பாராட்டுக்குரியவர்.

யாசகம் குட்டிக்கதை

ஒரு ஊரிலே ஒரு அரசன் இருந்தான். யாசகன் ஒருவன் அவனிடம் யாசகம் கேட்டுச் சென்றான். அரசன் சொன்னான்: "ஒரு வருடம் என்னிடம் சேவை செய். உனக்கு ஒரு யானை தருகிறேன்" என்று.

யாசகன் ஒப்புக் கொண்டான்.

ஒரு வருட முடிவில் அரசன் சொன்னான்: "என்னால் ஒரு யானை தரமுடியாது. பதிலாக இன்னும் ஒரு வருடம் தொடர்ந்து சேவகம் செய். உனக்கு ஒரு குதிரை தருகிறேன்" என்று.

யாசகன் ஒப்புக்கொண்டான்.

இரண்டாம் வருட முடிவில் யாசகன் குதிரை கேட்டுச் சென்ற போது அரசன் சொன்னான்: "என்னால் ஒரு குதிரை தர முடியாது. இன்னும் தொடர்ந்து ஒரு வருடம் ஊழியம் செய். உனக்கு ஒரு பூனை தருகிறேன்" என்று.

அதனை நம்பி மூன்றாவது வருடமும் யாசகன் ஊழியம் செய்தான். மூன்றாவது வருட முடிவில் யாசகன் பூனையைக் கேட்டு அரசனிடம் சென்றான்.

அரசன் சொன்னான். "என்னால் ஒரு பூனை தர இயலாது. இன்னும் தொடர்ந்து எனக்கு ஒரு வருடம் ஊழியம் செய். உனக்கு ஒரு புழுவாவது தருவேன்" என்று, வேறு வழியில்லை.

யாசகன் தொடர்ந்தும் ஊழியம் செய்து கொண்டிருக்கிறான்.

அரசனை நம்பினோர் கைவிடப்படார்.

○○○

இ.ஜீவகாருண்யன்

சிங்கள நண்பனுக்கு

சிங்கள நண்பனே
பேதமில்லாமல்
உன்னோடு
பழகத்தான் ஆசை
உங்கள்
அப்பிளையும்
எங்கள்
மாம்பழத்தையும்
இணைத்து வைத்த
இனிய காலம்
ஏன்
எங்கள்
மனங்களை மட்டும்
இன்னமும்
இணைக்க
மறுக்கிறது
உன் வீடு
உன் நிலம்
உனக்குச் சொந்தம்
என் வீடும்
என் நிலமும்
எனக்குச் சொந்தமென
உரை நீ
மறுத்தால்
நம் நாடு
நமக்கெப்படிச்
சொந்தமாகும்
ஆண்டாண்டாய்
பட்ட வலி
போதும்
யுத்தம் தகர்த்து
இணைந்த
எங்கள் கைகள்
இதயங்களையும்
இணைக்கட்டும்
வருவாயா
தருவாயா.....

புலோலியூர் வேல்நந்தன்

2005ம் ஆண்டு தமிழ்நாட்டில் நண்பருடன் ஒரு பிரபல சிந்தனையாளர் வீட்டிற்குப் போகிறேன். அது சென்னை யிலிருந்து சிறிது தொலைவில் உள்ள அறிஞர் கோ.தென்கச்சி சுவாமிநாதன் இல்லம். வீட்டை அடைந்தபோது அவரது மகளார் சொன்னார்; "அப்பா இப்போதுதான் உங்கள் பாரதியாருடன் வெளியே போகிறார்" என்று. வந்தது யாரென்று உணர்ந்து கொண்டோம்.

அது ஒரு பேச்சுப்போட்டி இளம் குருத்துக்கள் தம் தமிழ் ஆளுமையை வெளிப்படுத்துகின்றன. நடுவர் தமிழ்க் கடல் நெல்லைக்கண்ணன் அவர்கள் அந்தச் சிறார்கள் தம் பேச்சினை மெருகேற்ற பாடல்கள் பகருகின்றனர். பாரதி வந்தார், பாரதிதாசன் வந்தார் பார்த்தாயிற்று. அடுத்து வந்த இருவர் தொட்டது இந்த ஈழத்துப் பாரதியின் பாடல்களைத்தான். கேட்கப் பெருமையாய் இருந்தது. தமிழ்நாட்டில் எத்தனை கவிஞர்கள். இருந்தும், பாரதி, பாவேந்தர் என்ற வரிசையில் அடுத்து வரும் கவிஞனாய் இவர் மிளிர்வதைப் பார்க்கிறேன். குழந்தைகள் மனதுள் கொடிகட்டி பறப்பது சமகாலத்து தமிழகத்து எந்தக் கவஞனுக்கும் கிடைத்திராத பெருமை. "பட்டினி இருந்து பசியால் மெலிந்து" அந்த பாடலை அச் சிறுவன் உணர்வூட்டி மெருகேற்றி அழகு தமிழில் சொற்பெருக்காற்றிய போழ்து நெல்லைக்கண்ணன் நெகிழ்வுற்றுக் கண் கலங்கிப் போகிறார். தமிழ் நாட்டின் பட்டி தொட்டியெங்கும் புஷ்பவனத்தாரின் குரலில் "தமிழா நீ பேசுவது தமிழா?" என்று கம்பீரம் களைகட்டுகிறது.

1980 களில் கியூபாவின் ஹவானாவில், உலக இளம் கவிஞர் மாநாடு. கவிஞர் "எங்கள் மகாகவி" என்று பாரதி பற்றி ஆங்கிலத்தில் அரைமணி நேரம் பேசினார். அந்த மாநாட்டுக்கு விடுதலைக் கவிஞன் - சிலி நாட்டின பாபுலோ நெருடா வந்திருந்தார். நெருடா இலங்கையில் சிலியின் கொன்சல் ஜெனரலாக 1976ல் இருந்தவர் என்பது பலர் அறியாதது.

நெடிய உருவம், நீண்ட நாசி, துருவும் கண்கள், சுருளும் தலைமுடி, பின்னால் நீண்டதாய் முன்னால் வழுக்கையாய், லெனின் முறைத்தாடி, மீசைக்குக் கீழே மெதுவாய் நகை உதிரும் உதடுகள், நலம் கேட்கும் வார்த்தைகள், வரவேற்கும் கரங்கள், வாரியணைக்கும் நட்புரிமை, தன்மான உணர்வுகாட்டும் பரந்த நுதல், அங்கே கோடிட்டு நிற்கும் சிந்தனைக் கீறுகள், இந்த ஒற்றை நாடி உடம்பா இத்துணை எழுச்சியையும், உணர்ச்சியையும் கொட்டித் தீர்க்கிறது என்று கரைந்து போவோம் கவிஞரை நேரில் பார்த்தால்,

தன் இனத்தவனைத் தட்டி எழுப்பவும், திட்டி நெருக்கவும், எட்டி உதைக்கவும் கூட இந்தக் கவிஞனால்தான் முடிகிறது. "நாயே உனக்கு ஒரு நாடா? எச்சில் நாடும் உனக்கு வரலாறா?" என்ற தயக்கமின்றிக் திட்டும் தனித்துவம் இந்தக் கவிஞனுக்கு மாத்திரம் தான் உண்டு.

மாஸ்டர் சிவலிங்கம் அவர்களின் வில்லிசை யில் வரும் - முழக்கம் முருகப்பாவின் குரலில் முழங்கும் "வேரோடு சாயுமா வெல்லாமல் போகுமா போராடும் மேனிகள் புண்ணோடு

வீழுமா” வரிகள் கவிஞரை மக்கள் முன் அறிமுகப்படுத்தியிருந்தது.

உணர்ச்சிக் கவிஞனாகி அப்புறம் தமிழகத்தின் கல்வி பெற்ற நாட்களில் பேரா சான் மு.வ, நாம் தமிழர் தினத்தந்தி ஆதித் தனார், கண்ணதாசனின் ‘தென்றல்’ எனப் பல அறிமுகங்கள் இவருக்குண்டு. பாவேந்தரை தன் ‘ஆசான்’ எனக் குறிப்பிட்டிருக்கிறார். இலங்கைக்குத் திரும்பியவர் அறப்போராளியாய் அரச சிறைக்குள் அடைபட நேர்ந்தது.

வாந்தியாய் இரத்தம் சிந்த வறுத்தெடுத்த கொடுமை. அதனால் ஏற்பட்ட காசநோய் - நான்கு ஆண்டுகள் நரகத்திலிருந்து விடுபட்ட போது அவர் குடும்பமே நலிந்து துவண்டு போய் நின்றது. மரணபயமும் வறுமையும் கவிஞரின் குடும்பத்துடன் ஒட்டிநின்றன. எனினும் குறையாத உறுதியுடன் கொள்கைவழி நின்றார் களத்தில். தன்பின் வந்த காளையை பலிகொடுத்து ஆகுதி ஆக்கியவர் கவிஞர்.

பிறந்த இடத்தில் தேடுதல் பெயர்ந்த இடத்தில் நெருக்குதல் என்று அவர் சந்தித்த சோதனை அவர் வாழ்வின் போதனைகள் ஆயின. தோல்விகள் தொடரத் தொடர துணைப் படிகளாயின. துன்பங்கள் தந்த துயரங்கள் - துணிவுகளாகி கவிதைகள் ஆயின. இவர் பற்றிய ஆய்வு பேராசிரியர் அரசேந்திரனால் நூல்வடிவில் உள்ளது. ஒரு விடுதலைப் போராட்டத்தின் ஓயாத அலைச்சல்களில் இவர் சந்தித்த சிறைச் சாலைகள், தலைமறைவுப் பொழுதுகள், கடல் கடந்த பாய்ச்சல்கள், நிலைகலைந்த தன் குடும்பம் பற்றிய ஏக்கங்கள், வறுமைகள், வந்த இடத்து அமைதியின்மை எனத் துன்பங்கள் தொடர்ந்து கொண்டுதான் உள்ளன. எனினும் அவையெல்லாம் தமிழ் பெற்ற தகைமைகள் ஆகிவிட்டன. புண்பட்ட நெஞ்சம் புனலாக மேல் எழுகின்றது. அனலாக வீசுகிறது. உணர்ச்சிக் கவிஞர் இன்று உலகக் கவிஞராகிவிட்டிருக்கிறார். அலைகடலுக்கு அப்பால் இந்தத் தேசியத்தின் சிம்மக் குரல் கேட்கிறது. “கால வெள்ளத்தைக் கடந்து நிற்கும் கவிதைக் கருவூலங்கள் இவர் படைப்புகள்” என்கிறார் பழ - நெடுமாறன். “இவர்கள் எல்லாம் ஈட்டிகள்” என்கிறார் கலைஞர். மு.க.

தென்தமிழ் ஈழத்தின் தேனாட்டில் உதித்தவர் கவிஞர். நாள் 24.04.1935. மட்டக் களப்பிலும், பின்னான கல்வி பச்சையப்பன் கல்லூரியிலும் இருந்தது. பேராசான்மார் மு.வ., மா.கி.தசரதன், சஞ்சீவி என இவரது ஆசிரியர்கள் பெயர் கேட்டாலே அடித்தளம் தெரிகிறது. ஆங்கிலத்திலும் கவிதை புனையும் ஆற்றலுமுண்டு. “தமிழைத் தொடுவதும் என் உயிரைத் தொடுவதும் ஒன்றே” என்கிற கவிஞர் “நான் ஒரு படகோட்டி நானே எனக்கு வழிகாட்டி” என்கிறவர்.

இவர் கவிதைகள் பற்றிய தகவல்கள் தரமுடியவில்லை; அவை முடிவற்று நீளும் என்பதால், ஆக, இந்தக் கவிஞனின் வாழ்வும் அவற்றின் அனுபவங்களும் துன்பங்களுள்ளே தோய்ந்திருப்பவை. எனினும் துணிவு ஒன்றே பயணத்தின் வரலாறு ஆகிப்போகிறது. கவிஞர் பட்ட துன்பங்கள் அவரை அழிக்கவில்லை மாறாக செழிக்க வைத்திருக்கிறது. துயர் கொடுக்க நினைத்துத் துன்பமே துயரப்பட்டிருக்கிறது - தோல்வியையும் கண்டிருக்கிறது. இதோ!

காத்தமுத்து சிவானந்தன் என்ற நம் கவிஞர் காசி ஆனந்தன் - வள்ளுவம் இப்படி வடிவமைத்திருக்கிறது.

“அடுக்கி வரினு மழிவிலா லுற்ற
விடுக்க ணிடுக்கப் படும்”

குறள் - 625.

○○○

நூல் :
பூதத்தம்பி (இசைநாடகம்)
ஆசிரியர்:
த.கலாமணி
வெளியீடு:
ஜீவநதி வெளியீடு
விலை:
ரூபா 200.00

ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் யாழ்ப் பாணத்தில் வாழ்ந்த பூதத்தம்பி என்பவரது வாழ்வில் இடம்பெற்ற துயர சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு த.கலாமணி அவர்களால் எழுதப்பட்ட இசைநாடக நூல் இது. இந்த இசை நாடகம் இதுவரை 60க்கும் மேற்பட்ட மேடையேற்றம் கண்டுள்ளது. 200க்கும் மேற்பட்ட இசைநாடகங்களில் நடித்ததில் பெற்ற அனுபவத்துடன் ஆசிரியரால் பிரதியாக்கம் செய்யப்பட்ட இந்நாடகம் நடிப்பதற்கு மட்டுமன்றி படித்துச் சுவைக்கவும் ஏற்ற வகையில் எழுதப்பட்டிருப்பது பாராட்டுக்குரியது. நாடகப் பிரதிகளின் ஆக்கம் குறைந்துவரும் இக்காலகட்டத்தில் இத்தகைய நூல்கள் வெளிவருவது காலத்தின் தேவையாகிறது.

ஞானத்தின் கண்ணீர் அஞ்சலி

முற்போக்குக் கவிஞர் எழுத்தாளர் ஏ.இக்பால்

கலாபூஷணம் கவிஞர் ஏ.இக்பால் அவர்கள் 04.08.2017 அன்று காலமானார் என்ற செய்தி ஈழத்து இலக்கிய நெஞ்சங்களைப் பெரிதும் கவலைக்குள்ளாக்கியுள்ளது.

கவிஞர், சிறுகதை ஆசிரியர், விமர்சகர், பத்தி எழுத்தாளர், நூலாசிரியர், வெளியீட்டாளர், பாடநூலாசிரியர், சமூக ஊழியன் எனப் பல்துறை ஆளுமையுடன் விளங்கியவர் இக்பால் அவர்கள்.

கிழக்கின் அக்கரைப்பற்றில் பிறந்து மேற்கின் தர்கா நகரில் வாழ்ந்த றிபாயா ஆசிரியை மணந்து அங்கு வாழத்தொடங்கியது முதல் கிழக்குக்கும் மேற்குக்கும் ஓர் இலக்கியப் பாலமாய் அமையும் வாய்ப்பு இக்பாலுக்குக் கிட்டியது.

அறிஞர் எம்.சி.சித்திலெப்பை அவர்களைப் பற்றி இவர் எழுதிய 'மறுமலர்ச்சித் தந்தை' என்ற நூல் 1972ல் சாகித்திய விருதைப் பெற்றது. இவரது இலக்கியச் செயற்பாடுகளுக்காக கலாபூஷணம், கலைஞர், இலக்கிய மாமணி, இலக்கிய வாருதி ஆகிய பட்டங்களையும் உலக இஸ்லாமிய இலக்கிய ஆராய்ச்சிக் கழகத்தினரின் கௌரவப் பத்திரத்தையும் பெற்றவர்.

ஞானம் சஞ்சிகையின் ஐந்தாவது இதழில் (2000 ஒக்டோபர்) 'மாற்ற முடியாத மரபு' என்ற தலைப்பில் இவர் எழுதிய கவிதை முதலில் வெளியாகியது. அதைத் தொடர்ந்து ஏராளமான கவிதைகள், கட்டுரைகள், பத்தி எழுத்துக்கள், விவாதங்கள், வாசகர் கடிதங்கள் எனப் பலவற்றை ஞானம் சஞ்சிகையில் இவர் எழுதியுள்ளார்.

2016 ஒக்டோபர் ஞானம் இதழில் இவரது 'உண்மை' என்ற கவிதை வெளியாகியது. இக்கவிதையே தனது வாழ்க்கையில் ஏ.இக்பால் எழுதிய கடைசிக் கவிதையாகும். ஞானம் சஞ்சிகையின் வளர்ச்சியில் ஏ.இக்பாலின் இலக்கிய பங்களிப்பு அளப்பரியது.

அன்னாரது மறைவால் வாடும் அவரது குடும்பத்தினருக்கும் இலக்கிய நெஞ்சங்களுக்கும் ஞானம் அனுதாபத்தை தெரிவித்து கண்ணீர் அஞ்சலி செய்கிறது.

தமிழ்நாடு திண்டுகல்லில் இலங்கை மலையக இலக்கியக் கருத்தரங்கு

மலைநாட்டு எழுத்தாளர் மன்றம், அவுஸ்திரேலிய தமிழ் எழுத்தாளர் சங்கம் ஆகியவற்றுடன் இணைந்து தமிழ்நாடு திண்டுக்கல் காந்தி கிராம பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையினர் "மலையக இலக்கியம்" என்ற தலைப்பில் இரண்டு நாள் பன்னாட்டுக் கருத்தரங்கு செப்டம்பர் 8, 9 ஆம் திகதிகளில் நடைபெறவிருக்கிறது.

செப்படம்பர் 8 ஆம் திகதி காலை ஆரம்பமாகவுள்ள இப் பன்னாட்டுக் கருத்தரங்கில் மலையகத் தமிழ் இலக்கியம், மக்களின் வரலாறு, கலை, இலக்கியம், நாவல், சிறுகதை,கவிதை, நாட்டார் இலக்கியம் மலையக இதழியல் முதலான தலைப்புகளில் விரிவான ஆய்வுக்கட்டுரைகள் சமர்பிக்கப்படவுள்ளன. மேற்படி இரண்டு நாட்களிலும் தொடக்க விழாவைத் தவிர காலை, மாலை அரங்குகள் என நான்கு அமர்வுகள் இடம்பெறவுள்ளன.

திண்டுக்கல் காந்தி கிராம பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் தி.சு. நடராசன், அதன் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் பா. ஆனந்தகுமார், தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் சு. பாஸ்கரன், இந்திய மொழிகள் துறை பேராசிரியர் வ. ராசரத்தினம், பேராசிரியர் சுந்தர்காளி, பேராசிரியர் இரா.காமராசு, பேராசிரியர் போத்திரெட்டி ஆகியோரும் அவுஸ்திரேலிய தமிழ்ச் சங்கத்தின் தலைவர் மாத்தளை சோமு, மலைநாட்டு எழுத்தாளர் மன்றம் சார்பில் அதன் தலைவர் தெளிவத்தை ஜோசப், இணைச்செயலாளர் ஜி.சேனாதிராஜா, பாராளுமன்ற உறுப்பினர் மல்லியப்புசந்தி திலகர், மூத்த எழுத்தாளர், மு. சிவலிங்கம், மற்றும் கொழுந்து ஆசிரியர் அந்தனி ஜீவா, ஊடகவியலாளர் கே. பொன்னுத்துரை ஆகியோர் பங்கு பற்றிச் சிறப்பிக்கவுள்ளனர். இதில் பல நாடுகளில் இருந்தும் தமிழறிஞர்களும், பேராசிரியர்களும், எழுத்தாளர்களும் பங்குபற்றிச் சிறப்பு செய்யவுள்ளனர்.

அஞ்சலிக் குறிப்பு

செம்மொழி வல்லான் மானுட நேயன் முதுநிலைத் தமிழ் விரிவுரையாளர் கலாநிதி.எஸ்.வை.ஸ்ரீதர்

சப்ரகமுவ பல்கலைக்கழக மொழிகள் துறையில் கடந்த 22 வருடங்களாக ஒன்றாகப் பணிபுரியும் முதுநிலைத் தமிழ் விரிவுரையாளனாகவும், ஆப்த நண்பனாகவும் விளங்கிய குழந்தையுள்ளம் கொண்ட மானுடநேயன் கலாநிதி எஸ்.வை.ஸ்ரீதர் திடீர் சுகயீனமுற்று எம்மைவிட்டுப் பிரிந்தமை ஆறாத் துயரை ஏற்படுத்தியுள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழகத்திலே தமிழ் மொழியைச் சிறப்புப் பாடமாகப் பயின்று சிறப்புப்பட்டம் பெற்று இதன்பின் முதுகலைமாணிப்பட்டம் பெற்றுள்ளதுடன் கலாநிதிப் பட்டத்தையும் பெற்றுக்கொண்ட இவர் மாணவர்களாலே பாராட்டுப் பெற்ற நல்லதோர் தமிழாசான்: மொழிபெயர்ப்பாளன்: அடிப்படை இலக்கண இலக்கிய விடயங்களைத் தெளிவுறப் போதிக்கும் ஆற்றலும், ஆளுமையும் திறமையும் மிக்கவர். தமிழகத்திலும் இலங்கையிலும் சர்வதேச ஆராய்ச்சி மாநாடுகளிலேயும் பங்கேற்றவர். ஊவா வெல்லஸ பல்கலைக்கழகத்துத் தமிழ்ப்பாடத்தின் பரீட்சகராகவும் பணிபுரிந்தவர்.

திருவையாறு கரந்தைத் தமிழ்ச் சங்கம் ஒளவைக் கோட்ட அறிஞர் பேரவை, வவுனியா அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேசுரர் திருக்கோயில் என்பன இணைந்து நடாத்திய 14 ஆவது அனைத்துலக உரைநடை மாநாட்டுத் தொடக்க விழாவிலே பங்கேற்று உரை நிகழ்த்தியவர். தமிழகத்து அறிஞர் பெருமக்கள் 40 பேரை அழைப்பித்துத் தொடக்க நாள் விழாவைப் பொலிவுற அமைத்த பெருமை கலாநிதி எஸ்.வை.ஸ்ரீதர் அவர்களையே சாரும். அவரது பங்களிப்புகள் விதந்து குறிப்பிடத்தக்கவை.

பல்கலைக்கழகத்துக்குக் கல்விமான்கள், குறிப்பாகத் தமிழ்த்துறைசார் புலமை யாளர்களது அன்புக்குப் பாத்திரராய் விளங்கிய இவர், எவர் எவ்வுதவியைக் கேட்டாலும் மனங்கோணாது செய்துதவுவார். பரோபகாரி, பண்பன், ஆபத்துக்கு உதவும் அருமை நண்பன்: சப்ரகமுவ பல்கலைக்கழகத்திலே பயின்ற பயிலுகின்ற பட்டதாரிகள் மத்தியில் கீர்த்திமிக்கவர்: கடினமுயற்சியாளன்: கடுஞ்சொற் கூறாதவர். எத்தகு அலுவல்களையும், காரியங்களையும் நிதானமாகவும் நேர்மையாகவும் உண்மையாகவும் நேர்த்தியுடனும் செய்ய வேண்டும் என்பதிலே அதீத அக்கறையும் கவனமும் மிக்கவர். பாசமும் நேசமுமுள்ள அருமைத் தந்தை. குடும்பத்திலே பொறுப்புடன் செயற்பட்ட கனவான். அவரை இழந்து தவிக்கும் குடும்பத்தினர்க்கும், நண்பர்களுக்கும், உறவுகளுக்கும், தமது குருவை இழந்துவிட்ட பல்கலைக்கழகப் பட்டதாரி மாணவர்களுக்கும் ஆறுதல் கூற வார்த்தைகள் இல்லை. உலகின் நியதியை மாற்றவல்லவர் யார்? என்ற வினா எழுகிறது!. மனத் திடசித்தத்தை இறையருள் நல்க வேண்டிப் பிரார்த்திக்கிறோம்.

ஆத்மா சாந்தியடைவதாகுக!

பேராசிரியர் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன்
மொழிகள் துறை, இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம், பெலிகுலோயா.

‘கொழும்பூர் மானா’ கிள்ளிய கொழுந்து

சஞ்சிக் கூலிகள் – “நம்ம பாவப்பட்டவர்கள்! ஓர் ஒப்பீடு

‘சஞ்சிக் கூலிகள்’ - இப்படியொரு பெயரை மலேசியாவிலிருந்த பொழுதுதான் முதன் முதல் அறிய முடிந்தது.

அங்கு அசுர வேகத்தில் எழுதிக்கொண்டிருக்கிற ‘மலாக்கா முத்துக் கிருஷ்ணன்’ கட்டுரைகளில் இது அடிக்கடி வரும்.

என்ன இது சமாசாரம் என ஆழ்ந்து படித்த பொழுது, அந்தச் ‘சஞ்சிக் கூலி’ களும் ‘நம்ம’ பாவப்பட்ட மலையகப் பெருந்தொழிலாளரும் ஒரே வர்க்கத்தினரே எனப் புரிய முடிந்தது.

அந்த எழுத்தாளர் நல்ல ஆய்வுப்புலி. ஆழமாக ஆணித்தரமாகப் பல கருத்துக்களையும் பதிவு செய்வார்.

“மலாயா (மலேசியா) சஞ்சிக் கூலிகளின் முன்னோடிகள் யாரென்றால் இலங்கை மலையகத் தமிழர்களே! மலாயாத் தமிழர் அல்லர்!” என அதிரடி!

“சஞ்சிக் கூலிகள் சமாசாரத்தில் மூல கர்த்தாக்களாக இருந்தவர்கள் (கங்காணிகள்) முதன் முதலாக தமிழர்களை இலங்கைக்கே கொண்டு சேர்த்தார்கள்.

“ஆள் கடத்தும் றீ பூம்பா சதித்திட்டங்கள், சதிராட்டங்கள்தான் கங்காணி முறை.” அந்த வகையில், தமிழ் நாட்டின கிராமப்புறங்களில் வாழ்ந்த ஏழைக் குடியானவர்கள் இலங்கைக்குப் போய் வேலை செய்ய, கையெழுத்தே போடத் தெரியாத ஒரு ‘கை நாட்டு’ ஒப்பந்தம்! அப்புறம் கடல் கடக்க வைத்தார்கள்.

“ஒப்பந்தக் காலம் முடியும் வரையில் எந்தக் காரணத்தைக் கொண்டும் தோட்டங்களை விட்டு வெளியேற முடியாது என்று சத்தியம் செய்ய வேண்டும். மீறினால் தோட்டதுரை விதிக்கும் தண்டனையை ஏற்க வேண்டும்.

“வேலைக்குப் போன இடத்தில் நடந்த அநியாயம் அக்கிரமங்களைப் பார்த்துப் பொறுக்க முடியாமல் திருட்டுத்தனமாகத் திரும்பி ஊருக்கு ஓடிவந்தவர்களும் உண்டு. இலங்கை மலையகத்தவரிடம் அது வழக்கமாகியும் போனது.

“ஆனால் மலாயாத் தமிழர்களால் அப்படி எல்லாம் தப்பித்து ஓட முடியவில்லை. கஷ்டமோ நஷ்டமோ வாங்கி வந்த வரம் என்று வாழ்நாட்களைக் கழித்து முடித்தார்கள்.” என்கிறார். பெரியசாமி ராமசாமி என்பவர், முகநூலில் இப்படிப் பதிவு செய்திருக்கிறார்.

“நகர்ப்புறங்களை விட்டு வெகு தொலைவில் ஒரு காட்டு மூலையில், வெள்ளையனின் குதிரை லாயங்களை விட மோசமான தொழிலாளர் குடியிருப்பு (லயன்கள்) களில் அடைக்கப்பட்டார்கள்.

“பொழுது சாய்ந்தால், அவன் சுதந்திரமாகச் செயல்பட்டு விடக்கூடாதென்று, ‘பொழுது போக்கு’ என்ற போர்வையில் கள்ளுக்கடைகள்!, கள் இறக்குவதற்கென்றே தனி வேலையாட்கள்!, கள் வாங்க விசேட ஈயச் சட்டிகள்!, விடிகாலை வரை மயக்க நிலையில் வைத்திருத்தல்!.

“இதுவே தொழிலாளர்களைத் தக்க வைத்துக்கொள்வதில் அவர்கள் கையாண்ட பல யுக்திகளில் ஒன்று.!”

கடவுளே! இலங்கையும் மலேசியாவும் இந்தத் தோட்டத் தொழிலாளர் விஷயத்தில் இரட்டைக் குழந்தைகளைப் பெற்றுப் பிரித்தெடுத்துக் கொண்டதாகத் தெரிகிறதே!.

❍❍❍

எழுதத் தூண்டும் எண்ணங்கள்

பேராசிரியர் துரை மனோகரன்

மீண்டும் வந்த மகான்

அந்த மகானைப் பல ஊர்களில் உள்ளவர்களுக்கும் தெரியும். சில ஊர்களில் அவருக்குப் பெரும் மதிப்பு உண்டு. அத்தகைய ஊர்களில் ஒரு சிறிய ஊருக்கு அவர் இரண்டு வருடங்களுக்கு முன்னர் முதல்முறையாக வந்திருந்தார். இறுதியில் அவர் மனம் உடைந்து, அந்த மண்ணை இனி மிதிப்பதில்லை என்று முடிவெடுத்து, மீண்டும் அவர் சிலை வடிவானார். ஆயினும், அந்தச் சின்னஞ்சிறு ஊரில் நடப்பவற்றைக் கண் மூடிக்கொண்டு தொடர்ந்து பார்த்துக் கொண்டிருக்க அவருக்கு மனம் வரவில்லை. சிலை வடிவில் அவ்வூரின் பல இடங்களிலும் காட்சியளித்துக் கொண்டிருந்த அம்மகான், தமக்கே உரிய தோற்றப் பொலிவோடு அவ்வூரில் நடமாடத் தொடங்கினார்.

மகான் அவ்வூருக்கு இரண்டாம் முறை யாகவும் வந்திருப்பதை, எப்படியோ ஊடகத் துறையினர் மணந்து பிடித்துவிட்டனர். அவரை நேர்காணல் செய்வதற்குத் துடியாய்த் துடித்தனர். ஆரம்பத்தில், அப்படியொன்றும் நேர்காணலுக்கு அவசியம் இல்லை என்று மகான் மறுத்துவந்தார். ஆனாலும், ஊடகவிய லாளர்கள் அவரை விடுவதாக இல்லை. அவர் மூலமாக அவ்வூரின் எதிர்காலம் பற்றித் தெரிந்துகொள்வதில் அவர்கள் ஆர்வம் காட்டினர். மகானும் இறுதியில் நேர்காணல் வழங்கச் சம்மதித்தார்.

ஊடகவியலாளர் சார்பில் எழுப்பப்பட்ட முதல் கேள்வி, "தாங்கள் மீண்டும் இந்த ஊருக்கு வருவதில்லை என்று உறுதி எடுத்திருந்தீர்களாமே. அப்படியிருந்தும் மீண்டும் வந்தமைக்கான காரணத்தை அறியலாமா?" என்பதாக இருந்தது. மகான் முறுவல் பூத்தார். "நீங்கள் சொல்வது சரி. அப்படித்தான் அப்போது நான் முடிவெடுத்திருந்தேன். ஆனாலும், இந்த ஊரில் நடப்பவற்றைப் பார்த்துக்கொண்டிருக்க மனம் சகிக்கவில்லை. மனம் பொறுக்கமுடியாமல்தான் இம்முறையும் வந்தேன்" என்று பதில் அளித்தார். அவசரக்காரரான ஓர் ஊடகவியலாளர், "ஆட்சி மாற்றத்துக்கான வாய்ப்புகள் உள்ளனவா?" என்று கேட்டார். அவரது கேள்வியில், முன்னாள் ஊர்த்தலைவன் மீண்டும் ஆட்சிப் பொறுப்புக்கு வந்துவிடவேண்டும் என்ற ஆதங்கம் தொனித்தது. இதனை, மகானும் புரிந்துகொண்டார். அவர் சிரித்தபடியே "நான் அப்படியொன்றும் சோதிடன் அல்லவே" என்று சொன்னார். ஞானி ஒருவரைச் சோதிடர் ஆக்க முயன்ற அந்த ஊடகவியலாளரின் செயலைக் கண்ட மற்றவர்கள் கொல் என்று சிரித்தனர். "இந்த ஊரில் நடக்கும் ஆட்சி பற்றித் தங்களுக்குத் திருப்தி உள்ளதா?" என்று ஒருவர் வினவினார். "ஆட்சியா? அப்படி ஒன்று இருக்கிறதா?" என்று மகான் திருப்பி அவரைப் பார்த்துக் கேட்டார்.

மகானுடனான ஊடகத் துறையினரின் சந்திப்பு முடிவடைந்து, அவர்கள் கலையத் தொடங்கியதும், அவர் தியானத்தில் அமரத் தொடங்கினார். அப்போது அவர் அதுவரையில் கேட்டிராத ஆரவாரங்கள் ஒலிக்கத் தொடங்கின. மகான் சற்று எரிச்சலோடு என்ன நடக்கிறது என்று கண்களை விழித்துப் பார்த்தார். ஏராளமான பஸ்களில் ஏராளமானோர் மகான் இருந்த இடத்துக்கு வந்துசேர்ந்தனர். அவர் களில் பலர் குடி வெறியில் தள்ளாடிக் கொண்டிருந்தனர். பலருக்குத் தாம் யாரிடம் வந்திருக்கிறோம் என்பது கூடத் தெரியாமல் இருந்தது. மகான் அவர்களை அருவருப்போடு பார்த்தார். அப்போது, கந்தபுராணச் சூரபத்மன், இராமாயணத்து இராவணன், மகாபாரதத்துத் துரியோதனன் ஆகிய அனைவரும் சேர்ந்து ஒரே வடிவெடுத்த தோற்றத்தில் மீசையும், தொந்தியுமாக வயிற்றடியில் மடித்த சால்வை யுடன் அட்டகாசமாக அந்த ஊரின் முன்னாள் தலைவன் வந்துகொண்டிருந்தான். அவனோடு, அவனது தம்பியர் இருவரும், மகனும் பின்னால் வந்து கொண்டிருந்தனர். அவர்களைத் தொடர்ந்து கோட்டுச் சூட்டு அணிந்து, கொக்குப் போல உயரத்துடன் தலையைச் சாய்த்துச் சாய்த்துப் பேசும் ஒருவனும், மூளைக்குள் ஒன்றும் இல்லாவிடினும், தாடி மீசை அலங்

காரத்தில் அதிக கவனம் செலுத்தி, தான் என்ன பேசுகிறோம் என்பதையே அறியாமல் வாய்க்குள் வருவதை எல்லாம் உளறிக் கொட்டும் உளறுவாயன் ஒருவனும், பிறரும் வந்தனர். உளறுவாயனுக்குப் பக்கத்தில் ஊர்க் காவலர்களும் வந்தனர்.

முன்னாள் ஊர்த்தலைவனும், அவனுடன் வந்த முக்கியஸ்தர்களும் ஆசனங்களில் அமர்ந்தனர். முன்னர் மகானைத் தான் சந்தித்த போது, அவர் தன்னை ஓடஓட விரட்டியமை முன்னாள் ஊர்த்தலைவனுக்கு ஞாபகம் வந்தது. அதனால், இம்முறை மிகவும் பவ்வியமாக நடந்துகொண்டான். "மகானே, இம்முறை நான் தங்களைச் சந்திக்க வரும்போது என் முழுப்பலத்தையும் காட்ட விரும்புகிறேன். ஏராளமான பஸ்களில் ஆட்களை ஏற்றி வந்திருக்கிறேன். அவர்களைச் சும்மா கூட்டிவரவில்லை. ஒவ்வொருவருக்கும் ஒரு போத்தல் சாராயமும், சாப்பாடும் கொடுத்துத்தான் கூட்டி வந்திருக்கிறேன். ஊரில் நல்லது நடக்கக்கூடாது என்று விரும்புபவர்கள் எல்லோரும் என் பக்கத்தில் தான் இருக்கின்றனர். நான் மீண்டும் இச்சிற்றூரில் முடிசூடா மன்னனாக விளங்க வேண்டும். எனக்குத் தங்களின் ஆசி வேண்டும்" என்றான். மகான் "உனக்காவது ஆசியாவது" என்பது போல அவனைப் பார்த்துக்கொண்டிருந்தார். தம்மை அறியாமல் மகானுக்குச் சிரிப்பும் வந்தது.

மகான் தனக்கு ஆசி வழங்கமாட்டார் என்பதுபோல முன்னாள் ஊர்த்தலைவனுக்குப் பட்டது. "பரவாயில்லை மகானே, எனக்கு ஆசி வழங்காவிட்டாலும், என் தம்பி ஊத்தை வாயனுக்காவது ஆசி வழங்கவேண்டும். அவனோடு மறு தம்பி குஷிலுக்கும் தங்கள் ஆசி வேண்டும். என் மகன் ஊமல் ஊர் ஆளப் பிறந்தவன். அவனுக்குத் தங்களின் விசேட ஆசி வேண்டும்" என்று ஊர்த் தேர்தல் கூட்டங்களில் வணங்குவது போன்று மகானை வணங்கினான். அவன் கூறியவற்றைக் கேட்டபோது, சாந்த சொரூபியான மகானுக்கு அப்படியொரு கோபம் வந்தது. "நீங்கள் எல்லோரும் சேர்ந்து ஊரைக் கெடுத்தது போதாதா? இன்னமும் கெடுக்க வேண்டுமா? உங்களுக்குக் கொஞ்சம்கூட விவஸ்தை இல்லையா?" என்று கேட்டுவிட்டு, அவர் நிறுத்திக் கொண்டார்.

மகான் கூறுவதைக் கேட்டுக்கொண்டிருந்த கொக்கு மனிதன், தனது பாண்டித்துவத்தைக் காட்டத் தொடங்கினான். "முன்னாள் ஊர்த் தலைவர் மகா திறமைசாலி. இப்போதைய ஊர்த்தலைவனுக்கு ஒன்றும் தெரியாது. அவன் ஊரைப் பழுதாக்கி கொண்டிருக் கிறான். இன்னொருமுறை பழைய வருக்குச் சந்தர்ப்பம் கிடைக்கச் செய்யுங்கள். என்னமாதிரி இயங்குவார் என்று தாங்களே பார்த்துக் கொள்ளுங்களேன்" என்று சொன்னான். "அவன் எப்படி இயங்குவான் என்பது எனக்குத் தெரியும். இப்போது ஊரை ஆட்சி செய்பவர்கள் பலரையும் பழிவாங்குவதுதான் அவனது முதல் வேலையாக இருக்கும். ஊரை வளர்ப்பதை விடத் தன் குடும்பத்தை வளர்ப்பான். உனக்கும் ஒரு பதவி தருவான். நீ ஒரு படித்த முட்டாள். உனக்கு என்று ஒரு சொந்த ஆளுமை இல்லாமல், அந்த மகாபாவிக்குப் பின்னால் வெட்கம் கெட்டுத் திரிகிறாய். அவனுக்காக என்னிடம் பரிந்து பேசாதே, போ" என்றார், மகான் சற்றுக் கோபத்துடன். ஊத்தைவாயன் ஏதோ சொல்ல வாயெடுத்தான். பின்னர், மற்றவர்களைப் பேய்க்காட்டுவது போல், மகானை ஏமாற்ற முடியாது என்பதை உணர்ந்து, வாயை மூடிக்கொண்டான். குஷிலும் குஷியாகப் பேசி, மகானைத் தம் வழிக்குக் கொண்டுவரலாம் என்று சற்று முயற்சித்துப் பார்த்தான். அவனால் முடியவில்லை. முன்னாள் ஊர்த்தலைவனின் மகன் ஊமல், ஊர்ச் சபையிலும், கூட்டங்களிலும் பேசுவது போல் மகானிடமும் சிறுபிள்ளைத்தனமாகப் பேசி, அவரிடம் நன்றாக வாங்கிக்கட்டிக் கொண்டான்.

இதையெல்லாம் அவதானித்துக் கொண் டிருந்த உளறிவாயனுக்குக் கோபம் கோபமாக வந்தது. ஊர்ச்சபையிலும், கூட்டங்களிலும் பேசுவதைப் போல் மகானிடமும் மரியாதை யின்றிப் பேசத் தொடங்கினான். "மரியாதை தவறாமல் பேசிப் பழகு" என்று மகான் கட்டளை இட்டார். "உமக்கென்ன மரியாதை நான் கொடுக்கவேண்டும்? நீர் சர்வ ஊரின் கையாள். இங்கு வந்து சமாதானம் பேசப் பார்க்கிறீர். சமாதானத்தால் எங்களை விலைபேச முடியாது. சர்வ ஊரின் சட்ட திட்டங்களுக்கு எல்லாம் அடிபணிய முடியாது. எங்கள் தலைவனை உம்மால் ஆசீர்வதிக்க முடியுமா, முடியாதா? அதைச் சொல்லும்" என்றான், உளறிவாயன். "மகா பாவிகளை ஆசீர்வதிக்க முடியாது" என்றார், மகான். "மக்கள் அவரை ஆசீர்வதித்து, அடுத்து அரசாள இடம் அளிப்பார்கள்" என்றான், உளறிவாயன். "உங்கள் எண்ணம் ஒருபோதும் நிறைவேறாது" என்று கூறிவிட்டு, அந்த இடத்தைவிட்டு நகர்ந்தார், மகான்.

அவர் ஊருக்கு வந்திருக்கும் செய்தியை

அறிந்த கோட்டுச் சூட்டுப் போட்ட ஒருவன், தன்னை மகானுக்கு அறிமுகப்படுத்தி, அவரை வணங்கிநின்றான். கோட்டுச் சூட்டுக்காரனே முதலில் பேசத் தொடங்கினான்: "மகானே, ஊர் முழுவதும் உங்கள் பெயர் மட்டுமே நிலைக்கவேண்டும் என்பதே எங்களின் ஆசை. உங்களை மதிப்பவர்களும், எங்கள் மொழியைப் பேசுபவர்களும் மட்டுமே இந்த ஊரில் வாழ்வதற்குத் தகுதி உடையவர்கள். அதற்காகவே நாங்களும், எங்களைப் போன்றவர்களும் படாதபாடு படுகிறோம்" என்றான். மகான் பேசத்தொடங்கினார்: "நீ நீதிக்குத் தலை வணங்காதவன். நியாயத்தைப் பொருட்படுத்தாதவன். எந்த அக்கிரமத்துக்கும் துணை போபவன். உனக்கும், நீ பாதுகாக்கும் துறவிக்கோலம் பூண்ட சண்டியர்களுக்கும் என் ஆசி ஒருபோதும் கிடைக்காது. என் முகத்தில் விழிக்காதே போ" என்றார். அவனும் வந்த வழியைப் பார்த்து நடையைக் கட்டினான்.

மகான் ஊருக்கு வந்திருப்பதை அறிந்த ஊர்த் தலைவன், தனது மனைவியுடன் அவரைச் சந்திப்பதற்காகச் சென்றிருந்தான். அவன் பலத்த எதிர்பார்ப்புகளுடன் அங்கு வந்திருந்தான். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர், அவரை அவன் சந்தித்தபோது, முக மலர்ச்சியுடனும், அன்புடனும் மகான் தன்னை வரவேற்றதை அவன் நினைவு கூர்ந்தான். ஆனால், இம்முறை அத்தகைய வரவேற்பு தனக்குக் கிடைக்கவில்லை என்பதை அவனால் உணரமுடிந்தது. பத்தோடு பதினொன்றாகவே தன்னை மகான் இம்முறை வரவேற்கிறார் என்பதை ஜீரணிப்பது அவனுக்குக் கஷ்டமாக இருந்தது. அதை அவரிடமே கேட்டுத் தெரிந்துகொள்வது நல்லது என்று கருதி, தயக்கத்துடன் அவரிடம் கேட்டும்விட்டான். சற்றுநேரம் அமைதி காத்த மகான், சிந்தனை வயப்பட்ட நிலையில், முகத்தில் எந்தவிதச் சலனமும் இன்றிப் பேசத் தொடங்கினார்: "நான் உன்னை இரண்டு ஆண்டுகளுக்கு முன் புதிய ஊர்த் தலைவனாகச் சந்தித்தபோது மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். இந்த ஊருக்கு ஒரு நல்ல, திறமையான தலைவன் கிடைத்துவிட்டான் என்று நிம்மதி அடைந்தேன். ஆனால், அந்த மகிழ்ச்சியும், நிம்மதியும் எனக்கு இப்போது இல்லை. உனக்கு உன் கட்சியினரையே கட்டுப்படுத்தத் தெரியவில்லை. ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான கோமாளி வேலைகளில் ஈடுபடுகின்றனர். பலர் உன் பக்கம் இருந்துகொண்டே முன்னாள் ஊர்த்தலைவனின் புகழ் பாடி, அவனுக்கு மறைமுகமாகவும், வெளிப்படையாகவும் சேவை செய்கின்றனர். யாரை எங்கே வைப்பது என்று உனக்குத் தெரியவில்லை. மிகவும் கோமாளித்தனமான ஆட்சி ஒன்றை நீ செய்கிறாய்..." மகானின் விமர்சனங்களைக் கேட்டுக் கொண்டிருந்தபோது, ஊர்த் தலைவனின் முகம் மாறியது. தன்னை மகான் மிகவும் பாராட்டுவார் என்று நினைத்து வந்தவனுக்கு, மிகவும் ஏமாற்றமாக இருந்தது.

சமாளிப்பதற்கு ஏதாவது சொல்ல வேண்டுமே என்று தீர்மானித்தவன், "மகானே, தாங்கள் சொல்வது எனக்கு ஆச்சரியமாக உள்ளது. ஊர்கள் எல்லாம் எனது ஊர் ஆட்சியைப் புகழ்கின்றன. எந்த மக்களுக்கும் எந்தக் குறையையும் நான் விடவில்லை. இப்படி ஒரு நல்ல ஊர் ஆட்சியை எந்த ஊரிலும் காணமுடியாது..." என்று அடுக்கிக்கொண்டே போனான். அவன் தொடர்ந்து தனது புகழையே பேசுவதைக் கண்டு சலிப்படைந்த மகான், தமது கைகளால் அவனை அடக்கினார். "நீ இவ்வளவு பேசுகிறாயே, உன் ஊரில் உள்ள சிறுபான்மை மக்களுக்கு இதுவரை நீ என்ன செய்தாய்? கண்துடைப்புக்காக ஏதோ சிலவற்றைச் செய்கிறாய். அவ்வளவுதான். உன் நேர்மைமீது அவர்களுக்குச் சந்தேகம் இருக்கிறது. உன் வாக்குறுதிகள்மீது அவர்களுக்கு நம்பிக்கை இல்லை. அவர்களுக்கு எதிராகக் குற்றம் செய்தவர்களைப் பாதுகாக்க நினைக்கிறாய். பல ஊர்களுக்கும் பொதுவான சட்டதிட்டங்களை நீ மதிக்கிறாய் இல்லை. பழைய ஊர்த்தலைவனோடு ஒப்பிடும்போது, நீ பரவாயில்லை ரகம். ஆனாலும், உன் செயற்பாடுகள் போதாது. உனது எதிரிகளுக்கு அஞ்சி, உன் ஊரிலுள்ள சிறுபான்மையினருக்கு நல்லது செய்கிறாய் இல்லை. ஆளுமையும், மனத்தைரியமும் உனக்குப் போதாது. அவற்றை வளர்த்துக்கொள்" என்று மகான் கூறி முடித்தார். மனைவியைத் தவிர அக்கம் பக்கம் யாராவது இருக்கிறார்களா எனக் கவனித்த ஊர்த்தலைவன், சற்றுத் தயக்கத்துடன், "மகான், ஒரு வேண்டுகோள்" என்றான். "என்ன?" என்பது போல் மகான் பார்த்தார். "ஒன்றுமில்லை... சகல ஊர்களுக்கும் பொதுவான சமாதான விருது எனக்குக் கிடைக்கத் தாங்கள் அருள் புரியவேண்டும்" என்று கூறி, அவரின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினான். மகான் மெதுவாகச் சிரிக்கத் தொடங்கினார். அந்தச் சிரிப்பு மேன்மேலும் அதிகரித்து, அண்டசராசரங்கள் எங்கும் ஒலித்தது.

❍❍❍

கலாபூஷணம் கே.பொன்னுத்துரை

சமகால கலை இலக்கிய நிகழ்வுகள்

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் "அற்றைத்திங்கள்"

ஆவணி மாத (07.08.2017) 'அற்றைத்திங்கள்' நிகழ்வில் மூத்த நிர்வாக சேவை அதிகாரியான ஏ.எம். நஹியா கலந்து சிறப்பித்தார்.

கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் தம்பு. சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் தனது தொழில் துறை அநுபவங்களையும், எதிர்கொண்ட சவால்களையும், அவற்றின் வெற்றிகளுக்கு பின்நின்றவர்களையும் நினைவுகூர்ந்து சிறப்பாக உரையாற்றினார். முன்னாள் இந்து சமய கலாசார இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ், சங்கத் தலைவர் தம்பு. சிவசுப்பிரமணியம் ஆகியோர் ஏ.எம் நஹியா அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தி கௌரவம் செய்தனர்.

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் "தமிழிசைச் சங்கமம்"

இலண்டன் புகழ் மாதங்கி உதயகுமார், சாம்பவி உதயகுமார் சகோதரிகள் வழங்கிய "தமிழிசைச் சங்கமம்" நிகழ்வு சங்கரப் பிள்ளை மண்டபத்தில் சட்டத்தரணி ஜெயந்தி விநோதன் தலைமையில் 12.08.2017 அன்று நடைபெற்றது. இந்நிகழ்வில் செல்வி துளக்சிகா நந்தகுமார் தமிழ் வாழ்த்தினை இசைத்தார். சகோதரிகளின் தமிழிசைச் சங்கமத்தில் குயிலுவக் கலைஞர்களாக வயலின் ச. திவாகரன், மிருதங்கம் வை.வேனிலோன், மோர்சிங் வி. பிரபா, கடம் இ. பிரகலாதன் ஆகியோர் சிறப்பாக இசை வழங்கி தமிழிசைச் சங்கமத்தைச் சிறப்புச் செய்தனர்.

விபுலாநந்த அடிகளார் ஆவணப்படம்

விபுலாநந்த அடிகளாரின் வாழ்வியலையும் பணிகளையும் விளக்கும் வகையில் புதுவை அரசின் காஞ்சி மாமுனிவர் பட்டமேற்படிப்பு மையத்தின் தமிழ்த் துறையில் பேராசிரியராகப் பணியாற்றும் முனைவர் மு.இளங்கோவனின் இயக்கத்தில் வயல்வெளித் திரைக்களம் உருவாக்கியுள்ள விபுலாநந்த அடிகளார் ஆவணப்படத்தை இலங்கையில் அறிமுகப்படுத்தும் வைபவம் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்களின் தலைமையில் 07.08.2017 அன்று பொன்னம்பலவாணேஸ்வர் கல்யாண மண்டபத்தில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக இந்துமத அலுவல்கள் அமைச்சர் மாண்புமிகு. டி.எம். சுவாமிநாதன் அவர்கள் கலந்துகொண்டு விபுலாநந்த அடிகளார் ஆவணப்படத்தை அறிமுகம் செய்துவைத்தார். இவ்வைபவத்தில் கௌரவ அதிதிகளாக பேராசிரியர் என். சண்முகலிங்கன்

மற்றும் பேராசிரியர் சி.மௌனகுரு ஆசியோரும் சிறப்பு அதிதிகளாக விபுலாநந்த அடிகளார் ஆவணப்படத்தின் இயக்குநர் முனைவர் மு.இளங்கோவன், திருப்பூர் முத்தமிழ்ச் சங்கத் தலைவர் திரு. கே.பி.கே.செல்வராஜ், புதுவைத் தமிழ்ச்சங்க தலைவர் முனைவர் வி.முத்து மற்றும் திரு. சிவம் வேலுப்பிள்ளை ஆகியோரும் விசேட அதிதிகளாக திரு. எஸ்.தில்லைநடராஜா, கலாநிதி இரகுபரன், ஞானம் ஆசிரியர் திரு.ஞானசேகரன் ஆகியோரும் அறநெறிப் பாடசாலை மாணவர்களும் கலந்து கொண்டனர்.

தமிழக பிரபல எழுத்தாளர் எஸ். இராமகிருஷ்ணன் அவர்களின் சிறப்புச் சொற்பொழிவு

கொழும்புத்தமிழ்ச் சங்கத்தில் தமிழக பிரபல எழுத்தாளர் எஸ். இராமகிருஷ்ணன் அவர்களின் சிறப்புச் சொற்பொழிவு நவரெடனம் மண்டபத்தில் ஆட்சிக்குழு உறுப்பினர் க.க உதயகுமார் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சங்கத்தின் தலைவர் தம்பு. சிவசுப்பிரமணியம் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு எழுத்தாளர் எஸ். இராமகிருஷ்ணன் அவர்களுக்குப் பரிசளித்துக் கௌரவம் செய்தார். எழுத்தாளர் எஸ். இராமகிருஷ்ணன் மிகவும் சிறப்பான ஓர் உரையாற்றி, வந்திருந்த சபையோரை மகிழ்வித்தார்.

பிரம்மஶ்ரீ சுவாமிநாதன் சர்மாவின் இசை அர்ச்சனை நிகழ்வில் கதாகாலட்ஷேபம்

நல்லூர் கந்தசாமி ஆலய உற்சவத்தை முன்னிட்டு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் 18.08.2017 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை மிருதங்க வித்துவான் வட்டுக்கோட்டை - பம்பலப்பிட்டி பிரம்மஶ்ரீ சுவாமிநாதன் சர்மா நடத்திய இசை அர்ச்சனை நிகழ்ச்சியின் ஓர் அம்சமாக கந்தபுராணம் என்னும் தலைப்பில் சு.அனந்தநாராயணன் சர்மா கதாகாலட்ஷேபம் நடத்தியதை இங்கு காணலாம்.

கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில் கருத்தாடல் களம்

கொழும்புத் தமிழ்ச்சங்கம் 18.08.2017 நடத்திய இலக்கியக்களம் நிகழ்வில் கருத்தாடல் களம் இடம்பெற்றது. திரு.பா.க.மகாதேவா, திருமதி வசந்தி தயாபரன் ஆகியோரின் இணைத்தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் திரு.என்.கே.அசோக்பரன், செல்வி.இ.எழில்மொழி, திரு.ம.கிருத்திகன், திருமதி.தாட்சாயினி ராஜ்பிரகாஷ் ஆகியோர் 'இளையோரின் தடுமாற்றத்திற்கு காரணமாக அமைவது குடும்பச்சூழலே' - 'தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியே' ஆகிய தலைப்புகளில் கருத்தாடலில் பங்குபற்றினர்.

கேள்வி ஞானம்
- இலக்கியன் பதில்கள்

1. புனைபெயரில் கேள்விகள் அனுப்பினால், இலக்கியன் பதில் தருவாரா? காரணமாகத்தான் கேட்கிறேன்.

கு.நடராசா, கண்டி

புனைபெயருடன் சொந்தப் பெயர், முகவரி, கைத்தொலைபேசி எண் ஆகிய வற்றையும் இணைத்தல் வேண்டும். இலக்கியன் பதில் தருவார். புனைபெயர் என்றதும் ஒரு சுவாரஸ்யமான விடயம் நினைவுக்கு வருகிறது. பத்து வருடங்களுக்கு முன்னர் 2007 இல் 'பெயல் மணக்கும் பொழுது' என்ற ஈழப் பெண் கவிஞர்களின் தொகுப்பு நூல் வெளிவந்தது. அதனைத் தொகுத்தவர் தமிழகத்தைச் சேர்ந்த அ.மங்கை. அந்தத் தொகுப்பில் ஆண் கவிஞர்களின் கவிதைகள் எதுவும் இடம்பெற்றுவிடக்கூடாது என்பதில் தொகுப்பாளர் கவனமாக இருந்தார். ஈழத்தைச் சேர்ந்த வ.ஐ.ச.ஜெயபாலன், ஜங்கரநேசன், சித்திரலேகா, ஆழியாள், சுமதிரூபன், தெ.மதுசூதனன் ஆகியோர் அத்தொகுப்பில் ஆண் கவிஞர்களின் கவிதைகள் இடம்பெறவில்லை என்பதை அறிய தொகுப்பாளருக்கு உதவினர். ஞானம் சஞ்சிகையில் வெளியான மூன்று கவிதைகள் அத்தொகுப்பில் இடம்பெற்றிருந்தன. அவற் றில் ஒன்று ஞானம் பெப்ரவரி 2004 இல் வெளி வந்த ஜமுனா எழுதிய **பா(ழ்)ல்!** என்ற கவிதை. ஜமுனா என்பது ஓர் ஆணின் புனைபெயர் என்பதை ஞானம் ஆசிரியர் அக்காலத்தில் வெளிவிடவில்லை. பிற்பட்ட காலத்தில் அந்த எழுத்தாளர் தனது சொந்தப் பெயரில் எழுதிய நூல் ஒன்றுக்கு சாஹித்திய விருதும் பெற்றார். பின்னர் அக்கவிதை, அவரது அனுமதியுடன் சொந்தப் பெயரில் *175* ஆவது ஈழத்துப் புலம்பெயர் இலக்கியச் சிறப்பிதழில் மீள் பிரசுரம் செய்யப்பட்டது. இதிலிருந்து, ஒன்றை விளங்கிக் கொள்ளுங்கள், எந்தச் சூழ்நிலையிலும் புனைபெயரில் எழுது பவரின் அனுமதியின்றி அவரது சொந்தப் பெயர் வெளியிடப்படமாட்டாது.

2. நான் ஓர் எழுத்தாளனாக வருவதற்கு என்ன செய்ய வேண்டும்?

எஸ்.மதியுகராஜா, புத்தளம்

நிறைய வாசியுங்கள். குறிப்பாக கல்கி எழுதிய பொன்னியின் செல்வன், சிவகாமியின் சபதம், பார்த்திபன் கனவு அகிலனின் பாவை விளக்கு, பார்த்தசாரதியின் குறிஞ்சிமலர் போன்றவற்றை வாசியுங்கள் அதன்பின் சாண்டில்யனின் நாவல்கள், கி.ராஜநாராயணனின் கோபல்ல கிராமம், தி.ஜானகிராமனின் மோகமுள், அம்மா வந்தாள் ஆகியவற்றை வாசியுங்கள். இவற்றை வாசிக்கும்போது வாசகராகிய நீங்கள் பாத்திரங்களின் உணர்வுகளோடு கற்பனையில் பயணிப்பீர்கள். அடுத்து நாவலில் என்ன நடக்கப்போகிறது எனக் கற்பனை பண்ணுவீர்கள். உங்கள் கற்பனைக்கு மாறாக எழுத்தாளரின் எழுத்து அமைந்திருக்கலாம். இப்படியாக உங்களது கற்பனையும் எழுத்தாளரின் எழுத்தின் போக்கும் முட்டிமோதி உங்களின் கற்பனை வளத்தைப் பெருக்க வழிவகுக்கும். நாவலில் காணப்படும் புதிய சொற்களால் உங்கள் மொழி வளம் சிறக்கும். நமது நாட்டின் புகழ்பெற்ற எழுத்தாளர்கள் பலரும் தமது ஆரம்பகாலத்தில் இத்தகைய மேற்குறிப்பிட்ட நாவல்களை வாசித்ததாகவும் அதன் காரணமாக எழுத்தாளராகும் உந்தல் தமக்கு ஏற்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்கள்.

3. சுமதி ரூபனின் நியோகா படம் பார்த்தீர்களா?

எஸ்.யோகராஜா, கொழும்பு 04.

பார்த்தேன். வழமையான தமிழ்ச் சினிமாப் பாணியிலிருந்து இந்தத் திரைப்படம் வேறுபட்டிருந்தது. **நியோகா** என்பது சமஸ்கிருதச் சொல். ஒரு பெண் தனது கணவனால் கருத்தரிக்க முடியாத சூழ்நிலையில்

வேறொரு ஆண் மூலம் கருத்தரித்தலை இச்சொல் குறிக்கிறது. இந்துப் பாரம்பரியத்தில் இது அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

இலங்கையில் போர்ச்சூழலில், மலர் என்பவளின் கணவன் திருமணமான மூன்றாம் நாள் கடத்தப்படுகிறான். அதன் பின்பு மலரின் குடும்பம் கனடா செல்கிறது. கனடாச் சூழலில் கதை நகர்கிறது. மலரின் பெற்றோர் அவளது கணவனைத் தேடிப்பிடிப்பதில் காலத்தைக் கழிக்கின்றனர். மலரின் இளைய சகோதரன் ஜீவாவும், அவனது மனைவி துஷியும் இவர்களோடு வாழ்கின்றனர். துஷி மலரின் உணர்வுகளைப் புரிந்துகொள்கிறாள். மலருக்கு திருமணம் செய்துவைக்க வேண்டும் எனத் தனது கணவனுடன் வாதாடுகிறாள். ஆனால், குடும்பத்திலுள்ள ஏனையவர்கள் எவருமே மலரின் உணர்வுகளைப் புரிவதாக இல்லை. காலப்போக்கில் மலரின் உடலியல் தேவைகள் அவளை வாட்டுகின்றன. அவளுக்கு வரும் அநாமதேயத் தொலை பேசி, அவளது கைரேகை பார்த்த சோதிடரின் ஸ்பரிசம் போன்றவை அவளைத் தடுமாற வைக்கின்றன. வீட்டுக்கு வரும் ஆண்கள் சிலருடன் பழகும்போது அவள் மலர்ச்சி கொள்கிறாள். இடையே செயற்கை முறையில் கர்ப்பம் தரித்தல் பற்றியும் உரையாடல் வருகிறது. முடிவில் அவள் ஒரு பெண்பிள்ளைக்குத் தாய் ஆகிறாள். கனடிய வாழ்க்கை முறையில் தன்னை இணைத்துக் கொள்கிறாள். அத்துடன் படம் முடிகிறது. அவளது பிள்ளைக்கு தகப்பன் யார் என்பது படத்தில் காட்டப்படவில்லை.

நியோகா என்ற படத்தின் தலைப்பு குழந்தைப் பேறுக்காக வேற்று ஆடவனுடன் இணைவதைப் பற்றிக் கூறுகின்றது. இருந்த போதும் படத்தில் மலர் குழந்தைக்காக ஏங்குவதற்கான காட்சிகள் எதுவும் இல்லை. மாறாக, அவளது விரகதாபமும் பிற ஆண் களுடன் பழகுவதில் மகிழ்வு கொள்வதுமே அழுத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

படத்தின் முடிவில் மலரின் பிள்ளைக்குத் தகப்பன் யார் என்பது காட்டப்பட்டிருந்தால், வழமையான தமிழ்ப் படப் பாணியில் படம் தரம் தாழ்ந்திருக்கும். அதற்காக திரைப்பட இயக்குநரைப் பாராட்டலாம்.

இந்த முடிவு ஒரு பெண் தனது உடல், உளத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு சுதந்திரம் உடையவள் என்ற மேலைநாட்டுப் பெண்ணியச் சிந்தனைக்கு அழுத்தம் கொடுக்கிறது. அந்தச் சுதந்திரம் ஒருவனுடனான உறவுடன் மட்டும் மட்டுப்படுத்தியிருக்க தேவையில்லை என்று கருதவும் இடம் இருக்கிறது. அப்படியானால், தனது பிள்ளையின் தந்தை யார் என்பது மலருக்குத் தெரியுமா? இது கதையமைப்பின் பலவீனமா? அல்லது பலமா? என்பது விவாதத்திற்குரியது.

சிறப்பான கதைப்பின்னல், நல்ல காட்சியமைப்பு, உணர்வுபூர்வமான உரை யாடல்கள், சிறந்த டைரக்ஷன். சிறந்ததொரு தமிழ்ப்படத்தை பார்த்த உணர்வு பல ரசிகர் களிடையே நிறைந்திருந்ததை தியேட்டரை விட்டு வெளியே வந்ததும் அறியமுடிந்தது.

4. ஞானத்தில் ஆரம்பகாலத்தில் எழுதிய சிறந்த எழுத்தாளர்கள் சிலர் இப்போது ஞானத்தில் எழுது வதில்லையே?

இம்ரான்கான்.எம்.எம், அக்கரைப்பற்று.

கருத்தியல் முரண்பாடுகள்தான் இதற்குக் காரணம். எழுத்தாளர்கள் பலரும் பல்வேறு கருத்துடையவர்களாக இருப்பார்கள். ஒவ் வொருவரும் தங்களது கருத்துக்களுக்கு அமைய ஞானம் வளைந்து கொடுக்க வேண்டும் என எதிர்பார்ப்பார்கள். அது நடக்காத போது தொடர்பை முறித்துக் கொள் வார்கள். ஞானத்தின் வளர்ச்சிப் போக்கை இப்படியான நடவடிக்கைகள் கட்டுப்படுத்த வில்லை. ஆரம்பகாலத்தைவிட ஞானம் பெரு வளர்ச்சி கண்டிருக்கிறது. ஈழத்து இலக்கியச் சஞ்சிகைகளின் வளர்ச்சிப் போக்கிலே புதிதாக எழுத்தாளர் பலர் காலத்துக்கு காலம் சேர்ந்து கொள்வதும், விலகுவதும் வழமை யான நிகழ்வுதான்.

5. இன்றைய காலகட்டத்தில் இளம் சமுதாயத்தினர் பலரின் தமிழ்மொழிப் பிரயோகத்தில் பிழைகள் மலிந்து காணப்படுவதாக ஒரு குற்றச்சாட்டு இருக்கிறதே?

அ. இராமன், கண்டி

எமது நாட்டில் சென்ற நூற்றாண்டு 60கள் வரை பாடசாலைகளில் தமிழ் கற்பிப்போர் பெரும்பாலும் தமிழ் பண்டிதர்களாகவும் வித்துவான்களாகவும் இருந்தார்கள். பாட நூல்களை எழுதுபவர்களும் பண்டிதர்களாக இருந்தார்கள். 60களின் பின்னர் பண்டிதர் களை ஒழிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. அரசின் ஆதரவு அந்த முயற்சியில்

ஈடுபட்டவர்களுக்கு இருந்தது. எமது நாட்டுக் கல்வித்திட்டத்தில் பண்டிதர் தகைமை பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்காத நிலையையும் ஏற்படுத்தினர். பாடசாலை மட்டத்திலேதான் மாணவர்களுக்கு தமிழ்மொழி அறிவிற்கான அத்திபாரம் இடப்படுகிறது. அந்த அத்திபாரம் தகர்க்கப்பட்டது. தமிழ்ப் பாட நூல்களில் பிழைகள் மலிந்துவிட்டதாக பத்து வருடங்களாக பலரும் கூறுகிறார்கள். இனி என்ன செய்யலாம்? சிந்திப்போம்.

6. வாசிப்புப் பழக்கம் நமது நாட்டில் குறைந்து வருவதற்கு பலரும் பல காரணங்களைக் கூறுகிறார்கள். நீங்கள் என்ன கூறுகிறீர்கள்?

அ.சந்திரமோகன், புசல்லாவ.

எமது நாட்டில் *13.04.1979* அன்று தொலைக்காட்சி அறிமுகமானது. அதற்கு முன் சஞ்சிகைகள், புத்தகங்கள், பத்திரி கைகள் வாசிப்பது மட்டுமே பலருக்குப் பொழுதுபோக்காக இருந்தது. தொலைக்காட்சி வந்தபின் பலர் அதன்முன் இருக்கத் தொடங்கினார்கள். அச்சு ஊடகங்களில் கிடைக்காத செவிக்கு இன்பமும், காட்சி இன்பமும் தொலைக்காட்சியால் இரசிகர் களுக்கு கிடைக்கத் தொடங்கின. மூன்றாந்தர தொலைக்காட்சி நாடகங்களில் பலர் மயங்கத் தொடங்கினார்கள். தொடர்ந்து இணையம் பாவனைக்கு வந்தது. அது, உலகளாவிய தொடர்புகளை ஏற்படுத்தியது. இளைஞர்கள் நீண்ட பொழுதுகளை கணினியின் முன் கழிக்கத் தொடங்கினார்கள். பின்னர், கைத்தொலைபேசி வந்தது. ஸ்மார்ட்போன் உலகை உள்ளங்கைக்குள் கொண்டுவந்து விட்டது. முகநூல், வாட்ஸ்சப்பில் வரும் குறுந்தகவல்களை பலரும் வாசிக்கத் தொடங்கிவிட்டார்கள். அவசர உலகில் அவசர அவசரமாக அவற்றை வாசித்து உடனுக்குடன் 'லைக்' செய்து குறுந்தகவலை அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். இச் செயற்பாடு அவர்களுக்கு சுயத்தை மீறிய ஒரு பிம்பத்தை ஏற்படுத்திக்கொடுக்கிறது. அதிலே அவர்கள் இன்பம் காண்கிறார்கள். இந்தப் பழக்க தோஷத்திலிருந்து இவர்கள் மீட்சிபெறுவது மிகவும் கஷ்டம். இருந்த போதிலும், தீவிரமாக புத்தகம் வாசிப்பவர்கள் இன்றைக்கும் இருக்கத்தான் செய்கிறார்கள். பாடசாலைகளில் ஆசிரியர்கள், தமது மாணவர்களிடம் பாடசாலைப் பாடப் புத்தகங்களுக்கு அப்பால், சில நல்ல நூல் களைக் குறிப்பிட்டு அவற்றை வாசிக்கும்படி கூறலாம். அந்த நூல் தொடர்பாக வகுப்பில் கலந்துரையாடி சிறுவர்களிடையே வாசிப்புப் பழக்கத்தைத் தூண்டலாம். இச்செயற்பாட்டுக்கு என ஒரு பாடவேளையை ஒதுக்கலாம். தனியாகப் புள்ளிகள் கொடுக்கலாம்.

7. நீங்கள் சமீபத்தில் வாசித்த நூல் எது?

மேனகா இராமசாமி, சண்டிலிப்பாய்

வெற்றிச்செல்வி எழுதிய ஈழப்போரின் இறுதிநாட்கள் என்ற நூலை வாசித்தேன். ஈழப்போரின்போது மக்கள் பட்ட அவலங்களை, தனது கண்கண்ட காட்சிகளை விவரணமாகத் தந்துள்ளார் ஆசிரியர். முழு வன்னியிலும் இருந்த பல லட்சம் மக்கள் போரின் கடைசி நாட்களில் முல்லைத்தீவில் மாட்டிக்கொள்கிறார்கள். மணித்தியாலத்திற்கு ஆயிரம், இரண்டாயிரம் என்று ஊர்மனைக்குள் விழுந்த எறிகணைகள் மக்களைக் கிழித்துக் கூறுபோடும் காட்சி, போராளிகளின் இருப் பிடங்கள், விமானங்களாலும், எறிகணை களாலும் தாக்கப்பட்டு நிமிடத்திற்கு நிமிடம் செத்து மடியும் காட்சி, "தொட்டிலில் குழந்தைக்கும் உடல் சிதறும். தாயின் முலையில் பால் அருந்திக் கொண்டிருந்த மழலைக்கும் தலை பறக்கும். சோற்றை அள்ளி வாயில் வைக்கப் போனவரின் கை துண்டாடப்படும். பதுங்கு குழிக்குள் பாயும் சிறுமி காலை இழப்பாள். மனிதர்களின் அங்கங்கள் சிதறுண்டு துண்டுகளாக அறுத் தெறியப்பட்டன." அப்பகுதியில் மனிதப் பிணங்களும் செத்த நாய்களும் புழுத்து நாறின. இப்படியான பதிவுகள் வாசிப்பவரின் மனதை உலுக்குகின்றன.

இத்தகைய அவலங்களுக்குள்ளும் வடை விற்கும் வியாபாரி, ஈழநாடு பத்திரிகை வியாபாரி..... இப்படியும் பதிவுகள் உள்ளன.

"யுத்தம் முடிந்து போச்சு, பிரபாகரன் செத்தாச்சு... இனி பயம் வேணாம்." என்ற இராணுவத்தினரின் எக்களிப்பு! விடுதலைக் கனவுடனும் அர்ப்பணிப்புடனும் போராடி யவர்கள் இராணுவத்தினர் வழங்கும் தண்ணீருக்கும் உணவுக்கும் கையேந்தும் நிலை. இப்படிப் பற்பல அவலங்கள்..... தமிழினத்தின் இடர் சுமந்த பயண வரலாற்றின் ஒரு சிறு பதிவு இந்த நூல். மிக முக்கியமான நூல். ***(இனி அடுத்த இதழில்...)***

வாசகர் பேசுகிறார்

ஆகஸ்ட் ஞானம் இதழ் வாசித்தேன். வ.ந.கிரிதரன் அவர்களின் பேட்டியில் பால்ய கால வாசிப்பு அனுபவங்களை எந்த ஒளிவுமறைவுமின்றி பகிர்ந்திருக்கிறார். அவர் தமிழகப் பத்திரிகைகளில் எழுதிய ஒன்றிரண்டு நான் வாசித்திருந்தாலும் அவர் வாசித்ததாக கொடுத்திருந்த பட்டியல் தமிழக எழுத்துகளைத் தாண்டி மலையாள, ரஷ்ய இலக்கியத்தின் பக்கமும் சென்றிருக்கிறது. அகத்தின் அழகு முகநூலில் தெரியும் எனும் அளவிற்கு அவரது முகநூல் பதிவுகளைக் கொண்டு கே.எஸ். சுதாகர் கேட்டிருந்த கேள்வி புதிய விடயமாக இருந்தது. நான் அவனில்லை என்கிற அவரது அறிவியல் சிறுகதை வட அமெரிக்காவிற்கான சிறந்த சிறுகதையாகத் தேர்வு பெற்றமைக்கு காலம் கடந்தேனும் இந்நேரத்தில் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சமீப முதல் பரிசுபெற்ற கதைகளில் அமரர் செம்பியன் செல்வன் நினைவுச் சிறுகதைப்போட்டியில் முதல் பரிசு பெற்றக் கதையான மூதூர் முகமது ராபியின் பேரீச்சை முட்கள் என்கிற கதை மிகச்சிறந்தக் கதையாக என்னால் பார்க்க முடிந்தது. இலங்கையில் வறுமையில் தத்தளிக்கும் ஒரு குடும்பம் ஒரு சிறுமியை வயதினைக் கூட்டிக் காட்டி சவுதி அரேபியாவிற்கு அனுப்பி வைக்கிறார்கள். அங்கே அவள் படும் அவதிதான் கதை. கடைசியில் குழந்தைக்குப் புட்டிப்பால் பருக்கியபோது புரைக்கேறி குழந்தை இறந்துவிட, குழந்தையைக் கொலை செய்ததாகக் காரணம் காட்டி அவளுக்கு மரணத் தண்டனை விதிப்பதை எப்படி என்னால் வாசித்து முடிக்க முடிந்தது என்றே தெரியவில்லை. ஆகஸ்ட் மாத ஞானம் இதழ் சலனமானது.

- அண்டனூர் சுரா, கந்தர்வகோட்டை, புதுக்கோட்டை மாவட்டம்

***

ஞானம் 207 இதழ் கிடைக்கப்பெற்றேன். சுவாமி விபுலாநந்தர் பற்றிய ஆசிரியர் பக்கமும் விபுலாநந்தர் பற்றிய பேராசிரியர் சி.தில்லைநாதன், கலாநிதி க.இரகுபரன் ஆகியோரின் உரைத்தொகுப்பும் மனதுக்கு ஆறுதலாக இருந்தது. வ.ந.கிரிதரனுடனான கே.எஸ்.சுதாகரின் நேர்காணல் பல அனுபவங்களைத் தந்தது. உண்மையில் மூத்த படைப்பாளிகளின் நேர்காணல் படிக்கின்றபோது இளைய படைப்பாளிகளுக்கு பல உந்துதலைக் கொடுக்கின்றது எனலாம். இவ்வாறான முயற்சிகளில் ஈடுபட்டு வருகிற இதழாசிரியர் ஞானம் ஐயாவிற்கு எனது வாழ்த்துகளும் பாராட்டுகளும். கவிதைகள் சில உரைநடைப் பாங்கிலே அமைந்திருந்ததை அவதானிக்க முடிந்தது. பரிசுபெற்ற கதை இரண்டு முறை வாசிக்கத் தூண்டியது. மிக அருமையாக இருந்தது. உண்மையாக நடந்த ஒரு நிகழ்வினைக் கதையாக்கியிருக்கிறார். ஆசி. கந்தராஜாவின் புனைவுக்கட்டுரை சிறப்பானது. அவரது எழுத்து மொழிநடை வாசகர்களைத் தொடர்ந்தும் வாசிக்கத் தூண்ட வைக்கிறது. பொதுவாக, ஞானத்தில் தொடர்ந்து இலக்கியப் பங்களிப்புச் செய்து வருகின்ற டென்மார்க் ஜீவகுமாரன், கே.எஸ்சுதாகர், ஆசி.கந்தராஜா, என். செல்வராஜா போன்றோரின் ஏதோவவொரு ஆக்கமாவது இடம்பெறச் செய்யவேண்டும் என்பது தங்களிடமான எனது வேண்டுதலாகும்.

மேலும், பத்திரிகைகள் சஞ்சிகைகளில் சொல்புணர்ச்சியிலே பல தவறுகள்விட்டு அச்சாக வெளியிடுகின்றனர். ஞானத்தில் அப்படியில்லை. உதாரணமாக, வ.ந.கிரிதரனின் நேர்காணல் படித்து முடித்தபோது, கேள்வி கேட்ட இடத்திலே என்றாலும் சரி, விடை பகிர்கிற தருணத்திலேயும் சரி புணர்ச்சி விதிகள் உன்னிப்புடன் கையாளப்பட்டிருக்கின்றன. அவற்றினை நேர்த்தியுற கவனிப்பது ஆசிரியரின் கடமை ஆகும். பாராட்டுகளும் வாழ்த்துகளும்.

வாசகர் கடிதப் பகுதிலே கலாநிதி தேவமுகுந்தன் எழுதியிருந்த கடிதம் சொல்லும் விடயத்தில் நானும் உடன்பட்டவனே. உண்மையில், குட்டிக்கதை எனும் பெயரிலே வேல் அமுதன் எழுதி வருபவை குட்டிக்கதைகளே கிடையாது.

ஈழமும் தமிழும் எனும் பகுதியைத் தொகுத்து வழங்குபவர் பெயரையும் பதிவிடலாமே! மிக முக்கியமானதும் அற்புதமானதுமான விபரங்களை அறிந்துகொண்டிருக்கிறேன். எழுதத் தூண்டும் எண்ணத்தில் நடிகர்களும் அரசியலும் என்ற எச்சரிக்கை யதார்த்தமானது. இளஞ்செழியன் ஐயா பற்றிய பதிவும் முக்கியமானதாகும்.

–சமரபாகு சீனா உதயகுமார்